ரசுகை அழுபான்



குவேரா

குவேனி

செங்கை ஆழியான்

வெளியீடு:-
கமலம் பதிப்பகம்,
யாழ்ப்பாணம்



முதற் பதிப்பு : தை 1991
(தமிழ்த்தாய் வெளியீடு)

இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 2001

(C) திருமதி கமலா குணராசா


விலை : 150/=

KUVENI A HISTORICAL NOVAL

AUTHOR ESNGAI AALIYAN
(DR. K.KUNARASA)
B.A. Hons (CEY), M.A., Ph.D. SLAS

(C) MRS. KAMALA KUNARASA
82, BROWN ROAD, JAFFNA.

வெளியீடு:-
கமலம் பதிப்பகம்,
82, புறவுன் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்



கதைச் சம்பவங்கள் நடைபெற்ற இடங்கள்

முன்னுரை

சிங்ஹல விஜயனின் வருகையுடன், ஸ்ரீ லங்காவில் சிங்கள மக்களது தோற்றம் ஆரம்பமாவதாக வரலாற்றுச்செய்திகள் கூறுகின்றன. கி. மு. 438 இல் விஜயனின் மரக்கல வருகை தாமிரபர்ணி என்ற கொணாநதிக்கும் (கால ஒயா) கதம்பநதிக்குமிடையில் (அருவியாறு) இடைப்பட்ட பிரதேசத்தில் நிகழ்ந்ததென்பது ஆய்வுகள் தரும் முடிவுகளாகும். விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையின் கரையில் இறங்கிய பொழுது, இலங்கையில் நாகரிகத்தில் முன்னேறிய ஒரு மக்கட் கூட்டமும் பண்டைய வாழ்க்கைமுறையைக் கைக்கொண்டு வாழ்ந்த ஒரு மக்கட் கூட்டமும் வாழ்ந்து வந்துள்ளன.

பண்டைய இலங்காபுரியின் வடபெரும் பகுதி நாகதீபம் எனவும், தென்பெரும்பகுதி தம்பபண்ணை அல்லது தாமிரபர்ணி எனவும் தெளிவான பகுதிகளாக விளங்கின. நாகதீபத்தில் யாழ்ப்பாணக்குடாநாடு, அதன் அயற்தீவுகள், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு முதலான பிரதேசங்கள் அடங்கியிருந்தன. இப்பகுதிகளில் நாகர் எனப்படும் மக்கட்கூட்டத்தினர் உயர்ந்த கலாசாரத்துடன் வாழ்ந்து வந்திருக்கின்றனர். தென்பகுதியான தாமிரபர்ணியில் இயக்கர் எனப்படும் மக்கட்கூட்டத்தினர் பரவலாகப் பல காட்டுக்குடியிருப்புக்களை உருவாக்கிக்கொண்டு திரிகூடம், அரித்தகிரி, யக்குரகல, லக்கல, நிகும்பிலாவனம்,

துமரக்க, விந்தனை, மிகியங்கனை, சிறிஸ்தவத்து முதலான பகுதி களில் வாழ்ந்திருக்கின்றனர், தென்பகுதியிலும் நாகர்களின் குடி யிருப்புகள் இருந்துள்ளன. கல்யாணி (களனியா), நவிகிரி என் பன அத்தகைய குடியிருப்புகளாகும். நாகதீபத்திலும் இயக்கச்சி போன்ற இயக்கக் குடியிருப்புகள் இருந்துள்ளன.

நாகதீபத்தில் நாகர்களின் செழிப்பான குடியிருப்புகளாக நாகதீவு (நயினாதீவு), கதிரமலை (கந்தரோடை), ஆனைக் கோட்டை நாகர்கோயில் (வல்லிபுரம்), ஜம்புக்கோளம் (சம்புத் துறை), நாகபடுவான் (கரியாலை நாகபடுவான்), குருந்தன் குளம், மகாதிர்த்தம் (திருக்கேதீஸ்வரம்) மகாவில்லாச்சி என்பன விளங்கின. இவர்கள் வர்த்தகம், பயிர்ச்செய்கை என்பனவற்றில் வல்லவர்களாக இருந்துள்ளனர். நாகவழிபாட்டையும் லிங்க வழிபாட்டையும் கொண்டிருந்திருக்கிறார்கள். தாமிரபர்ணி இயக் கர்கள் இயற்கை வழிபாட்டையும் பைசாச வழிபாட்டையும் கொண்டிருந்தனர். பௌத்தமதம் இலங்கையில் தென் பகுதியில் பரவுவதற்கு முன்னரே, நாகதீபத்தில் தமிழர்கள் பலர் பௌத்த மதத்தினைத் தழுவியிருந்துள்ளனர். நாகர்களில் ஒரு பகுதியினர் புத்தரின் கருத்துக்களால் கவரப்பட்டு பௌத்தர்களாக மாறினர். கந்தரோடை, ஜம்புக்கோளம், நாகர்கோயில் எனும் பகுதிகள் தமிழ்ப்பௌத்தர்களைக் கொண்டிருந்தன. தேவனம்பியதீசன் காலத்தில் பௌத்தம் அசோகமன்னனால் இலங்கைக்குக் கொண் டுவரப்படுவதற்கு முன்னரே நாகதீபத்தில் பௌத்தம், நாகமக்கள் சிலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் பௌத்தம் இப் பகுதிகளில் தம் செல்வாக்கினை இழக்க அம்மக்களும் பழையபடி சைவராயினர்.

தாமிரபர்ணிப்பிரதேச இயக்க மக்கள் ஆரியருடன் கலந்தனர். தம் சொந்த பண்பாட்டை இழந்தனர். வடபகுதி நாகர்களுக்கு அவ்வாறான நிலை தோன்றவில்லை.

சிங்ஹல விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த நாகர்களும் இயக்கர்களும் ஆதித்திராவிடர்கள் என அண்மைக்கால தொல்லியலாய்வுகளும் புவிச்சரிதவியலின் ஓரங் கமான பட்டையாய்வுகளும் நிரூபித்துவருகின்றன. அண்மைக் காலங்களில் பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, பரந்தன், இப்பன் கடவை ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள் (முதுமக்கள் தாழிகள்). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்

பட்ட ஆதித்திராவிட கலாசாரத்தை காட்டும் தொல்லியலாய்வுச் சான்றுகளாகும். தமிழ்நாட்டில் தாமிரபரணி என்ற ஆற்றிற்குத் தெற்கே ஆதிச்சநல்லூர் என்ற ஆதித்திராவிடர்கள் வாழ்ந்த இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டதைப்போன்ற ஈமத்தாழிகள். ஆதிச்சநல்லூருக்கு கீழக்கே தாமிரபர்ணி என்ற இலங்கைப்பகுதியில் கிடைத்திருக்கின்றன, கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்பண்பாட்டுக் கால மட்பாண்டங்களில் பிராமிய எழுத்துக்கள் முன்னைய உயர்ந்த பண்பாட்டினை நிரூபிக்கின்றன. எனவே, சிங்கள விஜயன் இங்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இயக்கர்களும் நாகர்களும் ஆதித்திராவிட இனத்தவர் என்பதில் ஐயமில்லை. இதனை நிரூபிக்கும் தொல்லியற்சான்றுகள் வட பாகத்தில் மட்டுமன்றி தென்பாகத்திலும் கிடைத்துள்ளன.

இன்றைய இளம் வரலாற்றாசிரியர்களான, திறனும் துணிச்சலும் கொண்ட கலாநிதிகள். சிற்றம்பலம், பத்மநாதன், ரகுபதி, குணசிங்கம், இந்திரபாலா, திருமதி தனபாக்கியம், திரு, புஸ்பரத்தினம் ஆகியோர் ஈழத்து வரலாற்றில் புதிய திருப்புமுனைக் கருத்துக்களை ஆதாரங்களுடன் முன் வைத்துள்ளனர்.

இத்த குவேனி என்ற நாவல் நான் எழுதும் ''தறுமறாசா வீடு'' என்ற நாவலின் முன்னீடு ஆகும். அதாவது ஓர் அத்தியாயம் ஆகும். இன்றைய அவல நிலைகளுக்கு நமது முன்னோர்கள் விட்ட தவறுகள் எவ்வாறு காரணமாயின. என்பதன் ஓர் அம்சம் இந்தப்பகுதி. வெறும் சரித்திர நாவலென்ற கருத்தில் இதனைப் படிக்கில் இந்த நாவலின் பண்பாட்டியல்புகளின் பாரம்பரியத்தையும் மனிதகுல வரலாற்றின் நெறிகளையும் புரிந்துகொள்ளத்தவறி விடுவோம், எனக் கருதுகின்றேன்.

இன்றைய ''நாங்கள்'' யார் என்பதற்கு இந்த நாவலில் விடை இருக்கின்றது.

— செங்கை ஆழியான்

புகு முன்

இந்த மண்ணில்
நமது முன்னோர்கள்
விதைத்த தவறுகளின்
விளைச்சலை அறுவடை
செய்து வருகின்றோம்.
அவ்வகையில்
முதல் தவறினை
இந்த மண்ணில்
விதைத்த
நம் மூதாட்டி
'குவேனி'யின்
கதை இது.

— செங்கை ஆழியான்

1

கி. மு. 486, நான்காம் பௌர்ணமி.

விடியற்காலையின் வைகறைக் குளிர்ச்சியைப் பொருட்படுத்தாது, அடர்கானகத்தினூடாக கொணா நதியின் மருங்கே, மேற்குத் திசை நோக்கி, முன்னூறு பேர் கொண்ட ஒரு மக்கட் கூட்டம், ஒருவர் பின் ஒருவராக, எறும்புச்சாரியின் அசைவில் சென்று கொண்டிருந்தது. கீழைவானில் எழத்தொடங்கிய சூரியக் கதிர்கள், அடர் மரங்களினூடாக நதிக்கரையைத் தழுவ வலியற்றிருந்தன. அடர்மரப்பந்தரின் சிறு இடைவெளிகளூடாக உள் நுழைந்த கதிரவனின் கதிர்கள், மென்புகாரை ஊடுருவி நிலத்தில் படிய முயன்றபோது, ஒளிக்குழாய்களாக ஒளிர்ந்தன.

ஐந்து ஐந்தரையடி உயரமும், ஆரோக்கியமான உடல்வாகும், சற்று உள்ளமர்ந்த மூக்கும், கரிய நிறமும் கொண்ட அவர்கள் ஆதித்திராவிட இனத்தவர்கள். நீயோலிதிக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவில் தாமிரபர்ணியில் நிலைகொண்டிருந்த மக்கட் கூட்டத்தினர். கொணா நதிக்கும் கதம்ப நதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அவர்களின் ஆள்புலம் பரந்திருந்தது.

நதிக்கரையோரமாக மேற்குத்திசை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் அம்மக்கட் கூட்டத்தினரை, சரியான தடத்

தில் வழிகாட்டி அழைத்துச் சென்றுகொண்டிருந்த முதாளி ஒரு பெண். வயோதீபத்தின் சுவடுகள் உடலில் பதிந்திருந்தாலும், கம்பீரமான உருவத்தையும், விழிகளில் காண்போரை அடக்கும் தலைமைத்துவமும் அப்பெருந்தாயிடம் இருந்தன. கற்றையாகப் பின்னே தொங்கிய தலைமயிர்களிடையே கம்பிகளாக நரை செறிந்திருந்தது. கண்ணிமைகளில் தலை நீட்டிய நரைகள் கூட அவள் கம்பீரத்துக்கு மெருகூட்டின. அவள் கரத்தில்கனமான ஈட்டியொன்று இருந்தது.

அவள் பெயர் நகுலி. தாய் வழிச்சமூகத்தின் நிலைப் பாட்டில் அக்கூட்டத்தின் தலைவியாக அவள் இருந்தாள். அவளை அடுத்து, காட்டுப் புஸ்பமாக அழகிய இள மங்கையொருத்தி துள்ளல் நடையுடன் மானாகப் பின் தொடர்ந்தாள்.

அவர்களைப் பின் தொடர்ந்து ஆண்களும் பெண்களும் கரங்களில் ஈட்டிகள், வில் அம்புகள் என்பன ஏந்தி, தோள்களிலும் தலைகளிலும் பொதிகளைச் சுமந்தவர்களாகப் பின் தொடர்ந்தனர். யானைத் தந்தங்கள், காட்டு மிருகங்களின் தோல்கள், ஆமை ஓடுகள், சங்குகள், மயில் தோகைகள், அகிற் கட்டைகள், கராம்பு ஏலக்காய்ப் பொதிகள் என்பன வற்றினை அவர்கள் சுமந்து சென்றனர். பத்துப்பன்னிரண்டு வேட்டை நாய்கள் அம்மக்கட் கூட்டத்தின் இருமருங்கும் கூடவே ஓடி வந்துகொண்டிருந்தன. எதையோ மோப்பம் பிடிப்பதும் பாதை விலகிச் செல்வதும் பின்னர் கூட்டத்தினருடன் சேருவதுமாக அவை தொடர்ந்தன.

அவர்களைப் பார்த்தால் அதிகம் முன்னேறாத மக்கட் கூட்டம் போலத் தெரிந்தது. ஆனால் அவர்கள் அனைவரும் ஆண் பெண் வித்தியாசமின்றி அரையில் கட்டியிருந்த பருத்தி ஆடைகள் அவர்கள் நெசவுத் தொழிலில் முன்னேறியிருப்பதை எடுத்துக்காட்டின. அக்கூட்டத்தினரின் தலைவி மட்டும் மேலதிகமாக ஒரு துண்டினை மார்பில் இட்டிருந்தாள். அவளுடன் கூடவந்த இளமங்கை வெற்று மார்பில் சங்கு மாலையொன்றினையும் திரிந்து படர்ந்த கூந்தலின் உச்சியில் சற்று வலது பக்கமாக தாமரை மலர் ஒன்றினையும் சூடியிருந்தாள்.

''அம்மா, இன்னும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்? கால்கள் வலியெடுக்கின்றன.'' என்று அந்த அழகிய இள மங்கை சிணுங்கினாள். பொங்கிப் பூரித்த குவடுகள் சரியா மார்பகங்கள் குலுங்கின.

பெருந்தாய் தரித்து நின்று மகளைத் திரும்பிப் பார்த் தாள். அவள் பார்வையில் கண்டிப்புச் சுடரிட்டது. மறு கணத் தில் அப்பார்வையில் பாசம் சுரந்தது.

''என்ன பெண் நீ, குவேனி? காட்டில் சில பொழுது நடப்பதற்கே சோர்ந்து போகின்றாய்? நாளைக்கு நீ எப்படித் தான் இந்தக் கூட்டத்தின் தலைவியாக இருக்கப் போகிறாய்? காட்டுவிலங்குகளிடமிருந்தும் நம்மை அடிக்கடி தாக்கும் மோரியா (மயில்), பாலிப்கோயகர (காகம்) மக்கட் கூட்டத் தினரிடமிருந்தும் இவர்களை எப்படித்தான் காப்பாற்றப் போகிறாயோ?'' நகுலி தொடர்ந்து நடந்தாள்.

''எனக்கு இது பிடிக்கவேயில்லை, அம்மா. என்னிலும் பார்க்க தாரதத்தன் கம்பீரமானவன். பலசாலி. ஏன் உன் இப்போதைய கணவன் களுசேனன் வேட்டையிலும் யுத்தத்தி லும் தன் திறனை வெளிக்காட்டியவன். அவர்களில் ஒருவரை இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கவைக்கலாம். உனக்குப் பிறகு நான், தாரதத்தனைத்தான் இந்தக்கூட்டத்திற்குத் தலைமைதாங்க வைப்பேன்.''என்றாள் குவேனி.

''பைத்தியக்காரி மாதிரிப் பேசாதே? கேட்பவர்கள் சிரிக் கப்போகிறார்கள். ஆண்களினால் தலைமை தாங்க முடியுமா? பலம் என்பது உடல்வலிமையைப் பொறுத்தது அல்லப் பெண்ணே. புத்திக்கூர்மையைப் பொறுத்தது. பெண்கள் தான் இயல்பாகவே புத்திசாலிகள். உனக்கு இம்மக்கட்கூட்டத்திற் குத் தலைமை தாங்க விருப்பமில்லையென்றால், உன் தங்கை திரிசூலி அப்பொறுப்பினை ஏற்றுக்கொள்வாள். என் தாய், தாயின் தாய் எல்லாரும் இக்கூட்டத்தினரை எப்படிப் பாது காத்தார்கள் தெரியுமா, குவேனி? இன்று நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களாக எம் கூட்டத்தை மிருகங்களிடமிருந்தும் பகை வர்களிடமிருந்தும் பேணிப்பாதுகாத்திருக்கிறார்கள். அவர்கள்

என்னிடம் ஒப்படைத்த பொறுப்பினை நான் இதுவரை திற மையாக நடாத்தி வந்திருக்கிறேன். ஆண்களின் தப்பாசை போல நீ இப்பொழுது பேசத்தொடங்கியிருக்கிறாய்?''

''அதென்ன அம்மா?'' என்றாள் சிரித்தபடி குவேனி.

''நம் கூட்டத்தினரின் தலைமைப்பொறுப்பினை ஆண்களா லிய தாங்களே ஏற்றால் என்ன என்று நம்மில் சிலர் கருதத் தொடங்கிவிட்டார்கள். முக்கியமாக கஞ்சேனன் அப்படி நினைக்கிறான். ஆண்களால் என்ன முடியும்? குடும்பத்தினைப் பெருக்க ஒரு குழந்தையைக் காவிப் பெறத்தெரியுமா? நமக் குத்தான் அந்த அரிய சக்தி இருக்கிறது. அதனால் தான், தாய் தலைமை தாங்கத் தகுதியானவள் ஆகிறாள்.''

''வடக்கே நாகதீபத்தில் இப்படியில்லையாமே? அங்கு பெண்களை வெகு பக்குவமாகப் பேணுகிறார்களாம். அவர் கள் பதுமைகளாக அலங்கரித்து வீடுகளில் இருக்கிறார்களாம். உணவு தேடுவது, பகைவரிடமிருந்து காப்பது எல்லாம் ஆண் கள் தானாம். அங்கு வீட்டைக்காப்பதும் நாட்டைக்காப்பதும் அவர்கள் தானாம், அம்மா.''

''உனக்கு இவற்றினை யார் சொன்னது? தாரதத்தன் சொன்னானா? அவன் தான் இரு திங்களாகத் தேசாந்திரி யாக அலைந்து விட்டு வந்திருக்கிறான். அவர்கள் நாக குலத் தவர்கள். நாங்கள் இயக்கர்கள், குவேனி. பேசாமல் வா.'' என்று எரிந்து விழுந்தவாறு நகுலி நடந்தாள்.

''இன்னமும் கன தூரமா?''

''மதியத்துக்கு நாம் சேர வேண்டிய இடத்தை அடைந்து விடலாம். பேசாமல் வா, பெண்ணே.''

தூரத்தில் யானையொன்றின் பிளிறல் எழுந்தது. நதியில் நீரருந்திக்கொண்டிருந்த காட்டெருமைகள், ஒரு கணம் தலை களை நிமிர்த்திப் பார்த்துவிட்டு, காட்டினுள் ஓதுங்கிச் சென்றன.

மந்திகள் கிளைகளில் தாவிச்சென்றன. அவை வெகு அலட்சியமாக மரந்தாவிச் செல்வதை இரசனையோடு குவேனி பார்த்தாள். வயிற்றில் குட்டிகளை அணைத்தபடி சில உச்சாரக்கொப்பர்களில் அமர்ந்திருந்து அவர்களைச் சந்தேகத்துடன் பார்த்தன. அவள் விழிகள் அவற்றில் நிலைத்தபோது அவை தம்மைக் கிளைகளுக்குள் மறைத்துக் கொண்டன.

காடு அழகானது என குவேனி எண்ணிக்கொண்டாள்.

ஓரிடத்தில் சற்றுத் தரித்த குவேனி, தன் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் தம் கூட்டத்தினரைப் பார்த்தாள். தாரதத்தன் மதயானையின் கம்பீரத்துடன், தோளில் ஏற்றிய சுமையும் கரத்தில் பற்றிய ஈட்டியுமாக வந்து கொண்டிருந்தான். அவனுக்குச் சற்றுப் பின்னால் திரிகூலியைத் தோளில் கரம் பதித்து அணைத்தபடி, களுசேனன் சிரித்துப் பேசியபடி வருவது, குவேனிக்கு ஏனோ எரிச்சலை மூட்டியது.

"திரிகூலி... முன்னே வா. தாரதத்தா, அவள் சுமையை வாங்கிக்கொள்..." என அவள் கட்டளையிட்டாள்.

"தலைமை தாங்கக்கூடியவள் தான் குவேனி." எனத் திரிகூலி எண்ணிப் பெருமிதமடைந்தாள்,



2

மதியம் நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் அவர்கள் பெரியதொரு ஆலமரநிழலை அடைந்தார்கள். விழுதுகள் விட்டுப்பரந்த பெரியதொரு இராட்சத விருட்சம் அது. அதனை நெருங்கிய நகுலி தன் கரத்திலிருந்து ஈட்டியை நிலத்தில் வைத்துவிட்டு முழந்தாளிட்டு வணங்கினாள். அவளைப் பின்பற்றி ஏனையோரும் வணங்கினர். அடர்காட்டின் நடுவே, பெரியதொரு இராச்சதனாகக் கிளை பரப்பி வளர்ந்திருந்த அவ் விருட்சம் அவர்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஆலமரத்தின் கிளைகள் அடர்ந்து இருண்டுகிடந்தன. அவற்றின் பல்வேறு மூலையிலிருந்து விதவிதமான ஒலிகள் எழுந்து பரவின. அடர்கிளைகளூடாக உள்நுழைய முயன்ற கார்த்து ஊராய்வினால் எழுப்பிய பல்வேறு தாளலயமான ஒலிகள் அங்கு நிறைந்தது. கிளைகளில் அமர்ந்திருந்த பல் வேறு பறவைகள் எழுப்பிய ஒலிகளின் கலவையாக அங்கு புதியதொரு ஒலித்திரள் கவிந்தது. அவற்றின் பின்னணியில் அந்த இராட்சத விருட்சத்தின் கீழ் தனித்து நிற்பது, இனந் தெரிந்த பயத்தை எவருக்கும் ஏற்படுத்தவே செய்யும். காட்

டில் அலைத்து திரியும் இந்த மக்கட் கூட்டத்தினருக்கு மனதில் அச்ச உணர்வையும் அந்த அச்ச உணர்வின் விளைவாக ஏற்பட்ட சரண வணக்கம் அவர்களுக்கு மனதில் தோன்றிய பய உணர்வினைப் போக்கியது.

அம்மரத்தின் கிழ் அவர்கள் இளைப்பாறினார்கள். தேனில் ஊறிய மாமிச வற்றலும் தினைமாவும் எல்லாருக்கும் மதிய உணவாயிற்று. தனக்கு வழங்கப்பட்ட உணவை இலையில் தாங்கிய தாரதத்தன், குவேனியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

"தாரதத்தா, சிறிது தள்ளித்தான் உட்காரேன்..." என்று குவேனி சிரித்தாள். அவன் முகம் உச்சி வெயிற்பட்ட, உதிர்ந்த காட்டிலை போன்று சருகாகியது. என்றாலும் சிரிக்க முயன்றான். சிரித்தபடி கொணாநதியின் நீரினைத் துயரத்துடன் பார்த்தான். அவர்கள் அமர்ந்திருந்தவிடத்திற்குச் சற்று அப்பால் கொணாநதி இரு கிளைகளாகப் பிரிந்து பாய்வது தெரிந்தது. கொணாநதியில் இடுப்பினை மூடும் அளவிற்கு நீர்பாய்ந்து கொண்டிருந்தது. கரையோரம் முழுவதும் மணல் பரவிக்கிடந்தது. அதன் படுக்கையில் பாறைக்குன்றுகளைக் காணமுடியவில்லை. கரையில் அமர்ந்தபடி நிர்ச்சலனமான நிரைப் பார்க்கும்போது, ஆற்றின் படுக்கை வெண்மணல் சற்றுக் கலங்கி தாமிர வர்ணத்தில் தெரிந்தது.

"இனி மேற்கே போகப்போக மண் இப்படி தாமிரவண்ணம் பெறுமாம். அதனால் தான் நம் முன்னோர்கள் இப்பிரதேசத்திற்கு தர்மிரபர்ணி எனப்பெயரிட்டனராம்." என்றபடி குவேனி திரும்பி தாரதத்தனைப் பார்த்தாள். அவன் எதுவும் பேசாது தலையைக்குனிந்த படி அமர்ந்திருந்தான். "ஏன் தாரதத்தா, என் மீது கோபமா?"

"இல்லை, உன்னை கோபிக்க நான் யார்? இந்த கூட்டத்தின் வருங்காலப் பெருந்தாய் நீங்கள்..."

அவள் சிரித்தாள்.

"உன் கண்கள் போகின்ற இடங்கள் எனக்கு கூச்சத்

தைத் தருகின்றன. மார்பகங்களை நீ கண்ட தில்லையா? ஏன் அப்படி உற்றுப் பார்க்கிறாய்?''

அவன் தலையைக் குனிந்து கொண்டான். அவனைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாகவிருந்தது. அவளுடைய காதலைப் பெறுவதற்காக அவன் எத்தனையோ அசாதாரண காரியங்களைச் செய்திருக்கிறான். செங்குத்தான மலைச் சாய்வுகளில் உயிரை மதிக்காது ஏறித் தேன்வகைகளை அவளுக்காகக் கொண்டுவந்து தந்திருக்கிறான். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் அவள் தலையில் சூடுவதற்காக ஒவ்வொரு தாமரைமலரைத் தவறாது பறித்து வந்து தந்து வருகிறான்.

அவன் அவனைத் திரும்பிப்பார்த்தாள். அவன் அகன்ற மார்பும் திரண்ட கரங்களும் முழங்காலில் படிந்திருந்தன. தசை நார்கள் விம்மிப் பூரித்திருந்தன. ஒடுங்கிய வயிறும் வலு வேறிய கால்களும் அவன் பலத்தினைப் பறைசாற்றின. நீண்டு வார்ந்த தலைமயிரைக் கொண்டையாகக் கட்டியிருந்தான், அவள் அவர்கள் குல ஆண்களைப் போன்றவனல்லன். சற்று வேறு பட்டவன் என்பதை அவனது சற்று முன் நோக்கிய நாசிகள் கட்டியம் கூறின. அவனது கரிய நிறமும் இயக்க குலத்திற் குரியதன்று; தாமிரப்பழுப்பு அந்த நிறத்தில் இருந்தது.

வேட்டைக்குச் செல்லும் அவன் குலத்து ஆண்கள் வேட்டையாடிய விலங்கினை இருவர் மூவராக தடியில்பிணைத்துத் தூக்கிவருவர். தாரதத்தன் அலட்சியமாக அந்த வேட்டை விலங்கைத் தன்தோளில் சுமந்து வருவதை அவள் கண்டிருக்கிறாள். அசாதாரண பலசாலி அவன்.

மழைபெய்து ஓய்ந்திருந்த ஒரு பகற்பொழுதில் ஒருநாள், நகுலியும் வேறு ஐவரும் வேட்டைக்குப் போயினர். தாரதத்தனும் அவர்களுடன் சென்றிருந்தான். வெட்டை வெளியொன்றினைக் கடந்து காட்டினுள் புகுந்த போது மரப்புதர் மறைவில் குட்டிகளோடு தங்கியிருந்த கரடியொன்று, அவர்களால் தன் குட்டிகளுக்கு ஆபத்து வந்துவிடலாம் எனப்பயத்தில், முன்னே வந்த நகுலியைத் தாக்கிவிட்டது. அதன் அறையினால் நகுலியின் கரத்திலிருந்த ஈட்டி தூரவிலகித் தெறிக்க அவள் அப்படியே சரிந்து விட்டாள். மற்றவர்கள் செய்வத

றியாது திகறிஓட, தாரதத்தன் தன் வெறுங்கரங்களால் அக் கரடியைத் தாக்கி நிலைகுலைய வைத்ததுடன், தன் இடுப் பில் இருந்த அரிவாளால் அதன் கழுத்தை நறுக்கியும் விட் டான். நகுலி அவனை நன்றியுடனும் வியப்புடனும் பார்த் தாள்.

தாரதத்தன் துணிச்சலுடன் நகுலிக்கும் கரடிக்கும் இடை யில் வாராதிருந்தால், நகுலியின் கதை முடிந்திருக்கும். நான்கு வருடங்களுக்கு முன்னரேயே குவேனி அக்கூட்டத்தின் பெருந் தாய்ப்பதவியை ஏற்றிருக்கவும் நேர்ந்திருக்கும்.

குவேனி கல்லொன்றினை எடுத்துச் சலசலத்து ஓடிக் கொண்டிருந்த கொனா நதியின் நீர்ப்பரப்பில் எறிந்தாள். சளக்கென்ற சத்தத்துடன்அது நீரினுள் அமிழ்ந்தது. அவன் அவளைத் திரும்பிப்பார்த்தான்.

" தாரதத்தா, நாங்கள் மிருகங்களல்ல. நாகரிகமானவர் கள். அரித்தகிரி இயக்க மக்களைப்போன்றோ, நிரும்பிலா வனத்து இயக்க மக்களைப்போன்றோ நாங்கள் தோல் ஆடைகளை அணிவதில்லை. பருத்திப்பஞ்சில் நூல் நூற்று, அதனை நெய்து ஆடையாக அணிந்து வருகின்றோம். அவர் களைவிட நாங்கள் முன்னேறியவர்கள்... "

" அதை ஏன் சொல்லுகிறாய் குவேனி ? "

" காதலுக்கும் நாகரிகம் தேவை. ஏனோ எனக்கு உன் னைப்பிடிக்கவில்லை, இந்தக் கூட்டத்திலுள்ள எந்த இளை ஞனையும் பிடிக்கவில்லை.... "

அவன் முகம் தொங்கிவிட்டது. அவள் அங்கிருந்து எழுந்து ஆற்றை நோக்கி நடந்தாள். அரையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்து கரையில் வீசிவிட்டு, ஆற்று நீரில் மீனெனத் தாவி நீந்தத் தொடங்கினாள். அந்தக்கணத்தில் அவளின் கரியநிறத் தின் முழுச்செளந்தரியத்தையும் தாரதத்தன் அடங்கா ஆசை யுடன் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

அவளுக்கு அன்று மிகுந்த உற்சாகம் ஏறிவிட்டது. கொனா

ஆற்றின் குளிர்நீர் அவளுக்கு உற்சாகத்தைத் தந்தது. நண்பகல் வெயிலின் காங்கைக்கு அந்த நீரில் துளாவி நீந்துவது சுகமாகவிருந்தது.

நீரில் நின்றபடியே, ''தாரதத்தா, நீயும் வந்து குளியேன்....'' என்றாள். அவள் இடுப்பிற்குக் கிழ் நீர் வழிந்தோடியது நீரில் சுவந்து கூந்தல் உடலோடு ஒட்டிக் கரும் ரேகைகளாகப் படிந்திருந்தது. கூந்தலின் ஒரு பகுதி அவளின் திறந்த மார்பின் குவைகளில் காரெனப் படிந்திருந்தது. அவன் விழிகள் நிலைத்தவிடத்தைக் கவனித்த அவள் சிரித்தபடி நீரினுள் அமிழ்ந்து கொண்டாள்.

சற்று நேரம் நீரில் நீந்திவிட்டு அவள் கரையேறி வந்தாள். அவன் அவளை ஏறிட்டுப் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டான். அவள் கரையில் வீசியிருந்த துணியை எடுத்து அரையில் சுற்றியபடி அவன் அருகில் அமர்ந்தாள்.

''நாங்கள் நாகரிகமானவர்களாக எனக்குத் தெரியவில்லை. குவேனி,''

''ஏன் அப்படிச்சொல்கிறாய், தாரதத்தா ?''

''அரித்தகிரி இயக்கரிலும், அல்லது நிகும்பிலாவனத்து இயக்கரிலும் பார்க்க நாங்கள் நாகரிகமானவர்களாக இருக்கலாம். ஆனால் வடக்கு நாடுகளில் வாழ்கின்ற மக்கள் எங்களிலும் நாகரிகமானவர்கள்.''

''நாகதீபத்து மக்களைச் சொல்லுகிறாயா ?''

''ஆமாம், நாக மக்களைத் தான் சொல்கிறேன்.''

குவேனியின் ஈரக் கூந்தல் நிலத்தில் தவழ்ந்தது. அவன் அதனைத் தன்கரத்தில் எடுத்து, நீரினைப்பிழிந்து மண்ணைத் தட்டிவிட முயன்றான்.

''அதை அப்படியே விடு, தாரதத்தா... நான் மீண்டும் ஒரு தடவை நதியில் நீந்தப் போகிறேன். அதற்கு முதல் நீ

நாகர்களைப்பற்றிச் சொல். இரண்டு பௌர்ணமிகள் தேசசஞ் சாரம் செய்திருக்கிறாய் ? முதலில் எங்கு போனாய்... என்ன கண்டாய் ? அவர்கள் மொழி உனக்கு விளங்கியதா? ...'' அவள் அடுக்கடுக்காகக் கேள்விகளைத் தொடுத்தாள்.

தாரதத்தன் அவளின் ஆவலைப்புரிந்து கொண்டான்.

இரண்டு திங்கள் பொழுதுகள் நாகதிபத்தின் நாடுநகரங் களில் திரிந்த இனிய அனுபவங்கள் மனதில் எழுந்தன.

''அவர்கள் பேசுவதும் திராவிட மொழிதான். எங்கள் எலுமொழிதான். ஆனால் ஒரு வித்தியாசம்...'' என்றான் தாரதத்தன்.

என்ன என்குமாப்போல குவேனியின் விழிகள் அவனில் நிலைத்தன.

''அவர்களால் பேசாமல் கற்பலகையில் அல்லது பனையோ லையில் அல்லது தாமிரத்தகடுகளில் அல்லது மட்கலங்களில் எதையோ எழுதிக்காட்டுகிறார்கள். அவற்றினை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். தொடர்பு கொள்வதற்கு அவர்க ளுக்கு எழுத்து விபி இருக்கிறது. எம்மிடம் இல்லை. நாங்கள் எல்லாரும் ஒரே இனத்தவர்கள் தான். எங்களை மாதிரியே இவர்களின் உடல்வாகும் இருக்கிறது. நாங்கள் தாமிரபர்ணி யில் இருப்பதால் வேறுபட்டுவிட்டோம். அவர்கள் நாகதிபத் தில் இருப்பதால் சற்று முன்னேறிவிட்டார்கள் போல இருக்கி றது. அதற்குக் காரணம் இருக்கிறது...''

''என்ன ?''

''நாகதிபத்திற்கு வடக்கே பெரியதொரு நாடு இருக்கிற தாம். கடலைக்கடந்து செல்ல வேண்டும். ஆரம்பத்தில் அங் கிருந்து தான் நாங்கள் எல்லாரும் இந்தத் தீவிற்கு வந் தோமாம். இப்போது அந்தப்பெரிய நாட்டில் அதி வடக்கே யிருந்த ஒரு மக்கட்கூட்டம், மிக நாகரிகமானது, ஆரியராம் அந்தப்பெரிய நாட்டின் தென்பகுதிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் செல்வாக்கும் நாகதிப மக்களது முன்னேற்றத் திற்கு ஒரு காரணமாம்.''

''நீ சொல்கின்ற அந்தப்பெரிய நாடு இராமரின் நாடாக இருக்க வேண்டும். அங்கு தான் அயோத்தி இருக்க வேண்டும்.''

தாரதத்தன் அவளை வியப்புடன் பார்த்தான்.

'' எங்களது முன்னோன் இராவணன் என்ற அரசன், இராமரின் மனைவி சிதை என்பவளை அங்கிருந்துதான் சிறை யெடுத்து வந்தாராம். பின்னர் இராமன் இங்கு இராவண னைக் கொன்றழித்து சிதையைச் சிறைமீட்டுச் சென்றானாம். கேள்விப்படவில்லையா?'' என்று குவேனி கேட்டாள்.

'' கோகர்ண இயக்கர்கள் எங்களிலும் பார்க்க முன்னேறியவர் கள். இன்று நாம் கோகர்ணம் என்று அழைக்கிற பகுதி இரா வணன் காலத்தில் இலங்காபுரி எனப்பட்டதாம். அடுத்த முறை தேச சஞ்சாரம் வெளிக்கிட்டால் கோகர்ணத்திற்குச் செல்லவே நினைத்திருக்கிறேன்.''

''தாரதத்தா, என்னையும் அங்கு அழைத்துச்செல்கின் றாயா?'' என ஆவலுடன் அவள் கேட்டாள்.

''அது எப்படி முடியும்? இந்தக் கூட்டத்தின் பெருந்தாய் கூட வருவது சாத்தியமில்லை.''

'' பதவிகளால் நான் என்னைச்சிறைப்படுத்திக் கொள்ள மாட்டேன். இருந்து பார் தாரதத்தா. மனிதர்கள் சுதந்திர மானவர்கள். ஓரிடத்தில் கட்டுப்பட்டிருக்கப்பிறந்தவர்களல்லர். இராமர் பிறந்த நாட்டிற்கும் நான் ஒருக்கால் செல்ல வேண் டும்.''

அவள் எழுந்திருந்தாள். உடலில் படர்ந்திருந்த மண்ணை நீக்குவதற்காக குவேனி மீண்டும் ஒருதடவை கொணாநதியில் பாய்ந்தாள்.

'' விரைவாக வா, மகளே. நாங்கள் புறப்பட ஆயத்தம்...'' என நகுலி குரல் தந்தாள்.



3

சூரியன் மேற்கு வானில் சரியத்தொடங்கிய வேளையில், நகுலிக்கூட்டத்தினர் தாமிரபர்ணிக் கடற்கரையை அடைந்தார்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை நிலம் சிவந்த மணற் பரப்பாகக் கிடந்தது. அதற்கு அப்பால் வெண்மணல் பரவிய கடற்கரையும் அலையெறியும் சமுத்திரமும் தெரிந்தன. அடர் காட்டைவிட்டு வெளியேறியதும் பரந்து விரிந்துகிடந்த மணற் பரப்பும், அலையெறிந்து கரைதாவும் சமுத்திர விரிவும் குவேனிக்கு உற்சாகத்தைத் தந்தன. அவள் தாயை முந்திக்கொண்டு கடற் கரை மணலில் தாவியோட முயன்றாள்.

''பொறு, குவேனி..'' எனத் தலைவி கட்டளையிட்டாள்: ''தாரதத்தா, அந்நியர்கள் யாராவது கடற்கரையில் தென்படுகிறார்களா எனப்பார்த்து வா...''

தாரதத்தன் விரைந்து சென்றான்.

''எவராவது இருந்தால் எமக்கென்ன?''

''அந்நியர் முன் நாங்கள் வருவதில்லை.''

''அப்படியென்றால் அவர்களுடன் எப்படி வியாபாரம் செய்வீர்கள், அம்மா?''

''நீ இம்முறைதான் இங்கு வந்திருக்கிறாய். எப்படியென இருந்து தான் பாரேன்...''

''எப்படியென்று சொல்லுங்கள்?...''

''என்ன பிடிவாதம் பெண்ணே...'' என்றாள் பெருந்தாய், அலுப்புடன்: ''மரக்கலங்களில் அவர்கள் சமுத்திரத்தைத் தாண்டி வருவார்கள். நீரில் அவற்றை நிறுத்திவிட்டு சிறிய தோணிகளில் கரைக்கு வருவார்கள்...''

''அவர்கள் யார்? எங்கிருந்து வருகிறார்கள்?''

''யாருக்குத் தெரியும்? கடலுக்கு அப்பால் எங்கள் நாடு போல வேறு நாடுகள் இருக்கிறதாம். அவர்கள் தான் வனியா (ரோமர்) க்கள், நவிகா (அராபியர்) க்கள். நாங்கள் அவர்கள் முன் வருவதில்லை. நாங்கள் கொண்டு வந்திருக்கும் பொருட்களைக் கடற்கரையில் வரிசையாக வைத்து, நமக்குத் தேவையான பொருட்களை ஆமை ஓடுகளில் வரைந்து, அவற்றின் முன் வைத்துவிட்டு, காட்டிற்குள் மறைந்து கொள்வோம். அவர்கள் கொண்டுவந்த பொருட்களை எங்களுக்குக் காட்டி நாங்கள் வைத்திருக்கும் பொருட்களைச் சுட்டிக்காட்டுவார்கள். அவர்கள் காட்டும் பொருள் எங்களது பொருட்களுக்குச் சரியாகுமாயின் நாங்கள் காட்டோரமிருந்து வெள்ளைக்கொடியை அசைப்போம். அவர்கள் புரிந்து கொள்வார்கள். இவ்வாறு தான் நூறாண்டுகளாக வியாபாரம் செய்து வருகின்றோம்...''

''மூன்றின்று வியாபாரம் செய்தால் என்ன, அம்மா?'' என்று குவேனி கேட்டாள்.

''அந்நியர் முன்பா? அவர்களோடு நெருங்கக்கூடாது, பெண்ணே. அது நமது நாட்டையும் பழக்க வழக்கங்களையும் அந்நியமாக்கிவிடும்...''

''அவர்கள் இப்போது வருவார்கள் என்பது எப்படித் தெரியும்?''

"வாடைக்காற்று வீசும்போது கிழக்கே சென்றவர்கள்... சோளகம் வீசும்போது திரும்பி வருவார்கள். சோளகம் வீசத் தொடங்கி இருபது நாட்களாகின்றது. இன்னும் ஒரு சில நாட்களில் அவர்களது மரக்கலங்கள் இக்கடற்கரையில் தங்கும்."

"அவர்கள் நம்மை ஏமாற்றிவிட்டு நாம் கடற்கரையில் வைக்கும் பொருட்களைக் கவர்ந்து செல்ல மாட்டார்களா?"

நகுலி சிரித்தாள்.

"அவர்கள் வர்த்தகர்கள், பெண்ணே, கொள்ளைக்காரரல்லர், பண்ட மாற்றில் ஏமாற்றப்பார்ப்பார்கள். எங்களுக்கு வேல் முனைகள் தேவை. அம்பு முனைகள் தேவை. முன்னர் எம்முன்னோர் கல்லால் அவற்றினைச் செய்து பாவித்தனர். பின்னர் தாமிரத்தில் பாவித்தனர். இன்று இரும்பில் பாவிக்கின்றோம். கல்லாயுதங்களிலும் பார்க்க இவை கூரானவை செப்பமானவை. எதிரிகளையும் விலங்குகளையும் தாக்க இவை பலமானவை. ஒரு பானைத்தந்தத்திற்கு அவர்கள் இரண்டு ஈட்டி முனைகளைக்கூடத்தரமாட்டார்கள் இரண்டு வேல் முனைகளுக்குக் குறைய நான் பண்டமாற்றுச் செய்வதில்லை. அரிவாள்கள், கத்திகள், கோடரிகள் எமக்குத் தேவையானவை. அவர்கள் இப் போது பலபல பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். அவற்றினை எம்மிடம் காட்டி விற்கப்பார்க்கிறார்கள், ஆட்கலங்கள் எங்களிடம் இருக்கின்றன. அவர்கள் செப்புக்கலன்களை அதற்குப்பதிலாகப் பாவிக்கிறார்கள் போல இருக்கிறது. பலமுறைகள் அவற்றினைக்காட்டி விற்கப்பார்த்தார்கள். மறுத்துவிட்டேன். நம்மிடம் என்ன பொருள் இருக்கின்றதோ, அப்பொருள்களால் நமது தேவை பூர்த்தியடையுமாயின் அதனை ஒத்த எப்பொருள்களையும் வாங்காதே. பெண்ணே, பருத்தி ஆடைகள் நம்மிடம் இருக்கின்றன. அவர்கள் பளபளப்பான துணிகளைக் காட்டுவார்கள் ஏதோபட்டுத் துணியாம். அவற்றை

யும் நான் வாங்குவதில்லை. தானியங்கள் வாங்குவேன். இயற்கையாக நமக்குக்கிடைக்கின்ற தானியங்கள் நமது கூட்டத்திற்குப் போதுமானதாகவில்லை. இம்முறை உன் தந்தை களுசேனன்.....

குவேனி அவசரமாகக் குறுக்கிட்டாள்:

"உங்கள் கணவர், அம்மா... அவர் என் தந்தையல்ல..."

"எப்படியோ?... உனக்கு அவரைக்கண்டால் பிடிக்காது. திரிசூலி அவருடன் ஒட்டிக்கொள்வாள். போகட்டும்... அவருக்கு நவிகாக்கள் பயன்படுத்துவது போன்ற நீளமான ஒரு கத்தி தேவையாம். அதனை வாள் என்பார்கள் என தாரதத்தன் சொன்னான். வடக்கே நாகர்கள் அதிகம் பயன்படுத்துகிறார்களாம்... இம்முறை அதிலொன்றும் வாங்கவிருக்கிறேன்.. ..."

"நான் கேட்டதற்குப்பதில் சொல்லவில்லை, அம்மா..."

"என்ன கேட்டாய்...ஆ...நினைவு வருகிறது. கடற்கரையில் வைத்திருக்கும் பொருட்களை அவர்கள் கவர்ந்து செல்வார்களா என்றா கேட்டாய்? அப்படிக்கவர்வார்களேயாயின், கவர்ந்து தோணிகளில் ஏறுவார்களாயின், ஏறுமுதலே எங்களது அம்புகளுக்கு இரையாவார்கள். களுசேனன் வில்லிலிருந்து அம்பு புறப்பட்டால் அரைக்கால் மோசனை தூரம் இலக்குத் தவறாமல் பாயும். பெண்ணே, தாரதத்தன் என்ன குறைந்தவனா? களுசேனனின் அம்பு பாயும் தூரத்திற்கு அவன் வலிய கரங்கள் வேலினை எறியக்கூடிய."

"நீயும் அம்பு விடுவதில் மிகத்திறமையானவள் என எம் கூட்டத்தில் பெயரெடுத்தவள், அம்மா..."

தாரதத்தன் திரும்பி வந்தான். கடற்கரைப்பிரதேசத்தில் அந்நியர் எவரும் இல்லை எனத்தெரிவித்தான். அதன்பின் நகுலி சைகை செய்ய அக்கூட்டம் கடற்கரையில் இறங்கியது.

தாங்கள் காவி வந்த பொருட்களை வரிசையாகக் கடற்கரையில் வைத்தார்கள்.

கடற்கரையின் அழகு குவேனியை மிகவும் கவர்ந்தது. சாய் கதிரின் மஞ்சள்நிறக் கதிர்களின் பரவலில் கடற்கரை அவளுக்கு எல்லையில்லாத ஆனந்தத்தைத் தந்தது.

கடற்கரைமணலில் கடலாமைகள் சென்றமைக்கான சுவடுகள் தெரிந்தன. அவற்றினைத்தேடிச்சிலர் செல்ல நகுலியின் அனுமதியைப்பெற்றனர்.

" நானும் பார்த்து வருகிறேன்... " எனப்புறப்பட்ட களுசேனனுடன் திரிசூலியும் வலிந்து சென்றாள்.

" குவேனி வருகிறாயா? உனக்குக் கடலாமை முட்டைகள் எடுத்துத்தருகின்றேன்... " என தாரதத்தன் குவேனியை அழைத்தான்.

" சரி... ஆனால் நீ என்னை அப்படி உற்றுப்பார்க்கக் கூடாது... "



4

மேற்குக்கடலில் சரிந்து கொண்டிருந்த கதிரவனின் வெம்மை இன்னமும் முடியவில்லை. அவன் முற்றாகக்கடலில் வீழ்வதற்கு இன்னமும் சில பொழுதுகள் இருந்தன. இந்நேரம் காட்டில் உட்கிராமமாக இருந்தால், இருள் கவ்விப் படர்ந்திருக்குமென குவேனி எண்ணமிட்டாள். மாலைவானத்து மேகங்கள் நீப்பிடித்து எரிவனபோலக் காட்சி தந்தன.

அவர்கள் இருவரும் கடற்கரையோரமாக நடந்தனர். தாரதத்தன் கடற்கரை மணலை மிக அவதானமாகப்பார்த்து வந்தான். ஓரிடத்தில் தரித்து நின்றான். கிளறி மூடிய மணல் திட்டு ஒன்றினை ஆவலோடு வாரித் தூர் எடுத்தான். அவன் கணிப்புப்பிழைக்கவில்லை. நூற்றுக்கணக்கான ஆமை முட்டைகள் அக்குழியினுள் கிடந்தன. பொறுக்கி எடுத்துக்கொண்டான். துணித்துண்டு ஒன்றில் அவற்றினையிட்டுப் பொட்டலமாகக்கட்டிக் கொண்டனர்.

"கடலாமைகள் கடற்கரை மணலில் வந்து குழிதோண்டி முட்டையிடும்" என்றான் தாரதத்தன்: "அம்முட்டைகள் சூரிய வெப்பத்தால் பொரித்து ஆமைக்குட்டிகளாக வெளிவரும். தாமாகவே அவை கடலை அடைந்துவிடுமாம்.

எங்கள் இனத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் தாய் யார் என நன்கு தெரியும். தந்தை யாரென்றால் தெரியாது. கடலாமைகளுக்கோ தாயும் தெரியாது தகப்பனும் தெரியாது..." என்றான் தாரதத்தன்.

சற்றுத்தூரம் மௌனமாக அவளுடன் நடந்தான். குவேனி ஆவலுடன் கடல் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டாள்.

"அவர்களிடம் அப்படியில்லை..." என்ற தாரதத்தனைத் திரும்பிக் குவேனி பார்த்தாள்.

"எவர்களிடம், தாரதத்தா?"

"நாக குல மக்களிடம்... அங்கு ஒவ்வொரு குழந்தைக்கும் தாய், தகப்பன் யாரெனத் தெரியும். அங்கு குடும்ப அமைப்பு நன்குள்ளது. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு குடிசைகளில் வாழ்ந்து வருகின்றது. அவர்கள் குடும்ப வாழ்வை மிகப் புனிதமாக மதிக்கிறார்கள், குவேனி. எங்கள் மக்கட் கூட்டம் மாதிரி ஒன்று சேர்வதில் கட்டுப்பாடற்ற விதிமுறையில்லை. ஒழுங்கிருக்கிறது. அங்கு உறவு முறைத்திருமணம் இருக்கிறது. பெரிதும் மாமன் மகள், மாமன் மகன் திருமணம் தான். எங்கள் மாதிரி.. நினைத்துப்பார்க்கும்போது அந்த ஒழுங்கு முறைகளை நாமும் கைக்கொண்டால் நல்லது போலத்தெரிகின்றது..."

"ஆண் பெண் உறவு அவரவர் விருப்பத்தைப்பொறுத்தது, தாரதத்தா. அதில் தடைகளை எப்படி ஏற்படுத்துவது? அதென்ன நாக குல மக்கள் குடும்ப உறவை மிகப் புனிதமாக மதிக்கிறார்கள் என்றாயே?"

"சிறிது நேரம் இப்படி உட்காருவோமா, குவேனி..."

"சரி..." என்றாள் அவள். அவர்கள் இருவரும் மேலை வானை நோக்கியவாறிருந்தனர். அவள் தன் கால்களை மடக்கி ஒரு பக்கத்தொடையில் பாரத்தைச் சுமத்தியமர்ந்திருந்தாள்.

"சரி இனிச்சொல்.."

"அவர்கள் திருமணம் என்பது சந்ததிப்பெருக்கத்திற்காக எனக்கருதுகின்றனர். ஒரு ஆணும் பெண்ணும் இணைவது தம் சந்ததியைப் பெருக்குவதற்காகத்தான் என நம்புகின்றனர். அத்தகைய உறவினை அவர்கள் மிகப்புனிதமாக மதிக்கின்றனர். அதனால் தான் அவர்களில் பெரும்பகுதியினர் சிவலிங்க வழிபாடு செய்கின்றனர் குவேனி."

அவன் தொடர்ந்து பேசாது சற்று நிறுத்திவிட்டு அவளைப் பார்த்துவிட்டு மௌனமானான். அவன் எதனையோ சொல்லத் தயங்குவது போலப்பட்டது.

"ம்..." என அவனை அவள் தொடர வைத்தாள்.

"நாகர்கள் நாக வழிபாடு செய்கின்றனர். ஐந்து தலை நாகங்கள் நிலவடிவில் எங்கும் காணலாம். நிறைந்த கோயில்கள் தாம். ஆல், அரசு, வில்வம், கதம்பை, வேம்பு முதலான மரங்களின் கீழ் நாகங்களின் வடிவச்சிற்பங்கள் இருக்கின்றன. அவற்றினை வணங்குகின்றனர். இன்னொரு பகுதியினர் சிவலிங்க வடிவத்தினை வணங்குகின்றனர்..."

"அதனைப்பற்றித்தான் ஏதோ கூற முயன்றாய் தாரதத்தா..."

"சிவலிங்கவடிவம் என்பது ஆண்குறியையும் பெண்யோனி வடிவத்தையும் குறிக்கின்றதாம். ஏன் இப்படி ஒரு வடிவில் கடவுள் வணக்கம் இருக்கின்றது என்பதற்கு அவர்கள் தருகிற விளக்கம் என்ன தெரியுமா? அது உலகியற்படைப்புத் தத்துவமாம். படைப்புத்தத்துவத்தைப் பாமர மக்களின் நிலையில் உணர்த்துவதற்காக லிங்க வழிபாடு இருக்கிறது என்றனர். கதம்பநதியைக் கடந்து முப்பது யோசனை தூரம் வடக்காகச் சென்றால், தாமிரபர்ணிக் கரையிலிருந்து ஆயின் சற்றுக் குறையும், அந்த நதியின் கரையில் நாகர்களின் அற்புதமான பட்டினம் ஒன்றிருக்கிறது. அதனை மகாதீர்த்தம் எனவும் மாந்தை எனவும் வழங்குகின்றனர். அத்துறையில் பல மரக்கலங்கள் தரித்து நின்றதைக்கண்டேன். விஸ்வகர்மாக்கள் அந்தப் பட்டினத்தில் அதிகமாக வாழ்கின்றனர். பலவகை மணிகள், பழுப்பு நிற உலோகம், வெள்ளை நிற உலோகம்என்பன கொண்டு

பலவகை அணிகளைச் செய்வதைக் கண்டேன். அங்குள்ள பெண்கள் அந்த அணிகளைக் கழுத்திலும் காதுகள்லும் கைகளி லும் அணிந்திருக்கின்றனர். மகாதீர்த்தப்பட்டினத்தில் பெரிய தொரு சிவலிங்க வடிவத்தையும் சிறியதொரு மூடுகோயினையும் கண்டேன். அங்கிருப்போர் அந்த வடிவத்திற்கு வேறுவிளக்கம் தந்தனர். அவர்களின் தெய்வத்தின் சோதிப்பிளம்பான வடிவம் அதுவாம். அதனால் தான் போலும் அந்தச் சிவலிங்கத்தின் ஆவுடையார் வட்டவடிவமாக இராது சதுரவடிவமாக இருந் தது.'' என்றான் தாரதத்தன்.

'' நீ சரியாகத் தான் ஒவ்வொன்றையும் அவதானித்திருக் கிறாய், தாரதத்தா... ''

'' மாந்தையிலிருந்து வடக்காக அடர் காட்டுப்பாதையில் இன்னொரு முப்பது யோசனை தூரம் சென்றேன். நாகபடுவான் என்ற ஒரு நாகர் குடியிருப்பு வந்தது. மாந்தை போன்று பெரி யதன்று. நரீகரீகமானவர்களுமல்ல, அங்கிருந்தோர் நாகவழிபாடு செய்வதைக்கண்டேன். அத்துடன் அக்கினி, சூரியன், சந்திரன் என்பனவற்றையும் வணங்குவதைக் கண்டேன். வடகரையில் நாகர்கோவில் என்றதொரு குடியிருப்புக்குச் சென்றிருந்தேன், குவேனி. அங்கு சிவலிங்க வடிவம் ஒன்றினை ஐந்து தலை நாகம் ஒன்று படம் எடுத்து மூடியுள்ளது போன்ற ஒரு சிற்பத்தை வணங்குவதைக் கண்டேன். எங்காவது ஐந்து தலை நாகம் இருக் குமா?'' எனத் தாரதத்தன் கேட்டான்.

'' யாருக்குத் தெரியும்... இருக்கலாம்... ''

குவேனியின் குரலில் ஆவல் குடியேறியிருந்தது.

அவர்கள் எழுந்திருந்தனர். ஆமை முட்டைகள் நிறைந்த பொட்டலத்தையும் எடுத்துக்கொண்டான்.

'' காட்டின் நடுவே குடியிருப்பு அமைத்து இருப்பதிலும் பார்க்கக் கடற்கரையில் குடில்கள் அமைத்து வாழ்வது நல்லது. உணவுகள் இங்கு ஏராளம் உண்டு... '' என்றாள் குவேனி.

''கடற்கரையோரம் பாதுகாப்பில்லை. அந்நியர்கள் வருவார்கள். கடற்கரையோரமாகக் குடியிருப்புகள் இருந்தால், அவர்கள் இந்த மண்ணில் நிரந்தரமாகத் தங்கிவிடப் பார்ப்பார்கள். நமது உணவை அவர்கள் பங்குபோட்டப்பார்ப்பார்கள்.''

குவேனி எதுவும் பேசவில்லை.

அவர்கள் திரும்பி வரும் வழியில் திரிசூலியையும் களுசேனனையும் சந்தித்தனர். திரிசூலியின் கன்னங்கள் சிவந்திருந்தன. இருவரினதும் விழிகள் சிவந்திருந்தன. திரிசூலி தமக்கையைப் பார்த்து வெட்கத்துடன் சிரித்தாள்.

தாரதத்தன் அர்த்தத்துடன் குவேனியைப் பார்த்தான். அவள் விழிகளில் அருவருப்பும் வெறுப்பும் மண்டிக்கிடந்ததை அவன் கண்டான்.

அவர்கள் மௌனமாக நடந்து வந்தனர்.

''குவேனி, உன் மனம் மாறாதா?'' எனத் தாரதத்தன் கேட்டான்.

''தாரதத்தா எனக்காக நீ காத்திருக்காதே. எங்கள் கூட்டத்தில் நல்லதொரு பெண்ணாகத் தேர்ந்தெடுத்துக்கொள்...''



5

தாமிரபர்ணிக்கடற்கரையிலிருந்து விலகி, காட்டின் தொடக்கப்பகுதியில் நகுலிக் கூட்டம் தங்குவதற்காவ ஆயத் தங்களைச் செய்து கொண்டது. பெருந்தாயும் அவள் குடும் பமும் தங்குவதற்கு ஒரு குடில் அமைக்கப்பட்டது. அதனைப் புற்களாலும் இலை குழைகளாலும் வேய்ந்திருந்தனர். ஏனை யோர் மரநிழல்களில் தம் வதிவிடங்களைத் தற்காலிகமாக அமைத்துக்கொண்டனர்.

நகுலியின் குடிவின் முன்னால் திக்கடைகோலின் உதவி யுடன் தீ வளர்க்கப்பட்டது. காய்ந்த மரக்கிளைகளையும் மரக் குச்சிகளையும் அதிலிட்டு தீ வளர்த்திருந்தனர். அந்தத் தீ இரவிர வாகத் தொடர்ந்து எரியும். பகற்பொழுதுகளில் சாம்பல் பூத்த தணலாக இருக்கும். அவர்கள் அவ்விடத்தில் தங்கியிருக்கும் காலம் வரை அத்தியை அவர்கள் பேணுவர்.

அன்றிரவு அம்மக்கட் கூட்டத்தினர், தியைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். பலதையும் தமக்குள் பேசிச்சிரித்து வெகு உற்சாகமாக அவர்கள் விளங்கினர். நாளை என்ற எண்ணமே அவர்களிடம் இல்லைப் போலப்பட்டது. இன்றைய வாழ்வை வாழ்ந்து அனுபவித்து விட வேண்டும் என்ற ஆவல்

அவர்களிடம் இருந்தது. கடற்கரை யோரமாகச் சென்ற சமுதாவுக்கும் வலிமித்தனுக்கும் இரண்டு கடலாமைகள் அகப்பட்டிருந்தன. கரைக்கு முட்டையிட வந்தபோது அவர்களிடம் அவை அகப்பட்டுக்கொண்டன. ஏராளமான கடலாமை முட்டைகளும் அவர்களுக்குக்கிடைத்திருந்தன. அவை அனைத்தும் அனைவருக்கும் சொந்தம்.

ஆமைகளை மல்லார்த்தி வளர்த்திவிட்டு அவற்றினை பக்குவமாக வெட்டத் தொடங்கினர். ஆமை ஒட்டிற்கு எதுவித சேதமும் ஏற்படாதவிதத்தில். அதன் வயிற்றுப்பாகத்தில் கீறி அரிந்து வார் வாராக இறைச்சித் துண்டங்களை மட்கலங்களில் சமுதா குவித்தான். அரிவதால் தேங்கிய இரத்தம் ஆமையோட்டினுள் வெள்ளமாகத்தேங்கியது. ஆமையிறைச்சியின் பல்வேறு பகுதிகளையும் நிறவாரியாக மட்கலங்களில் எடுத்து இடுவதில் பெண்கள் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

ஆமையோட்டினுள் தேங்கிய இரத்தத்தை சமுதா, பெரிய தொரு மட்கலத்தில் ஊற்றினான். அவர்களிடம் விதம் விதமான மட்கலன்கள் இருந்தன. சிவந்த நிறக்கலங்கள் நெருப்பில் சுட்டதால் பலமாக வலிமை பெற்றிருந்தன. அகன்ற சட்டிகள், ஒடுங்கிய மட்கலங்கள் (பானைகள்), கரத்தில் வைத்துப் பருகக் கூடியளவிலான சிறிய மட்கலங்கள் என்பன அவர்களிடம் இருந்தன.

"சலதி, சிறிது உப்பு எடுத்து வா..." என அக் கூட்டத் தலைவி நகுலி கட்டளையிட, ஒரு பெண் எழுந்து சென்று மட்கலம் ஒன்றில் உப்பினை எடுத்து வந்தாள். அவள் எடுத்து வந்த மட்கலம் மிக அவதானமாகச் செய்யப்பட்டிருந்தது மூடியோடு கூடிய மட்கலமாக அது அமைந்திருந்தது. உப்பு அந்த மக்கட் கூட்டத்தினைப் பொறுத்தவரையில் மிகப் பெறுமதி வாய்ந்த ஒரு பொருளாகும். இக் கூட்டத்தினர் தாமிரபர்ணியின் உட்காட்டுப்பகுதிகளில் வாழ்பவர்கள் கடற் கரையோரத்தில் தன்படுவானாக விளைகின்ற உப்பினை அவர்கள் பெறவாய்ப்பில்லை. அதனால், வடக்கேயிருக்கின்ற நாகர்களிடமிருந்து விலங்குகளின் தோல்களைப் பண்டமாற்றாகக் கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். அடிக்கடி தார

தத்தன் கதம்பநதிக் கரையோரமாக மாந்தைக்குச் சென்று வரங்கி வருவான்.

''அங்கு கடற்கரையில் இயற்கையாக உப்பு விளைகிறது. வறண்ட பருவத்தில் அவற்றினைக் கூட்டி அள்ளிச் சேகரிக்கின்றனர். அதற்கென உப்பதிகாரி ஒருவன் இருக்கிறான். பளிங்கு மணிகள் போல உப்புப்பாளங்கள் படர்ந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன். அதன் அருகில் நெருங்க விடமாட்டார்கள். நவிகாக்களின் [மரக்கலங்களில் அவற்றினை ஏற்றுவதைக் கண்டிருக்கிறேன்.'' என்பான் தார்ரதத்தன்.

சலதி உப்புப்பாத்திரத்தை நகுலியின் முன் நீட்டினாள். மூடியைத்திறந்து. ஒரு பிடி உப்பினை அள்ளி ஒரு கலத்தில் அவள் இட்டாள். உப்பினை ஆமை மாமிசத்தில் பூசி அதனை நெருப்பில் வாட்டத்தொடங்கினர். ஒரு புறத்தில் ஆமை இரத்தம் வறுக்கப்பட்டது.

சுடப்பட்ட இறைச்சித் துண்டுகள் ஒரு கலத்திலிடப்பட்டு முதலில் பெருந்தாய்க்கு வழங்கப்பட்டன. பின்னர் அனைவரும் எடுத்துக்கொண்டனர். தேன் விட்டுப்பிசைந்த தினைமாவும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.

ஆடவர்களில் சிலரும் பெண்களில் சிலரும் கலசம் ஒன்றிலிருந்த மதுவைச் சிறிது பருகினர். கஞ்சேனன் கூடுதலாகப் பருகியதுடன் திருகுலிக்கும் வார்த்துக் கொடுத்தான் அவர்கள் இருவரும் பழகிக்கொள்கின்ற முறைநகுலிக்குப் பெரும் கோபத்தைத் தூண்டி வருவதைக்குவேனி அடிக்கடி கண்டாள். நகுலி வெகு பிரயாசைப்பட்டுத்தன் ஆத்திரத்தை அடக்கிக் கொள்வது போலப்பட்டது. நகுலியிலும்பார்க்கப் பத்துப்பராயம் இளையவன் கஞ்சேனன். திருகுலியிலும் பார்க்க இரண்டு மடங்குபராயத்தினன்.

சில காலமாக அவன் நகுலி மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தான். அவள் அக் கூட்டத்தின் பெருந்தாய் என்பதை மறந்து அவள் வார்த்தைகளுக்கு எதிராக நடந்து வருகிறான். அவன் மீதுள்ள வாஞ்சையால் நகுலி அவற்று

னைப் பொறுத்துக் கொண்டாள். அது மட்டுமன்று, அவன் சிறந்த வில்லாளியாக இருப்பதும், இக்கூட்டத்தின் பாதுகாப்பிற்கு அவன் இன்றியமையாதவனாக இருப்பதும் அவனைக் கண்டிக்க இவளை விடவில்லை. அது மாத்திரமா? அக்கூட்டத்தின் ஆடவர்கள் அனைவரையும் அவன் தன் வலிமையால் அடக்கிவைத்திருப்பதும் அவனுக்கெதிராக அவளால் நடவடிக்கைகளை எடுக்க விடவில்லை.

காரதத்தன் பெருந்தாயின் வார்த்தைக்கு எதிர் பேசாதவன். அவளின் கணவன் என்பதால் களுசேனனின் வழியில் வலியச் சென்று குறுக்கிடாதவன்.

நகுலியின் வலிமை சற்றுக் குறைந்து வருகின்ற இக்கால வேளையில் ஆடவரின் ஆதிக்கம் அம்மக்கட் கூட்டத்தில் அதிகரித்து வருவதை அவன் அறியாமலில்லை. பெண்ணின் விருப்பத்திற்கு மாறாகவே அக்கூட்டத்திலுள்ள சில ஆடவர் தான் விரும்பிய பெண்களைப்பலாத்காரமாக தம் இச்சைக்கு உட்படுத்திக் கொண்ட சம்பவங்களுமுள்ளன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அந்த ஆடவர்களுக்குத் தண்டனை வாங்கிக்கொடுப்பதை பாதிக்கப்பட்ட அப்பெண்கள் விரும்பவில்லை.

இரவு வெகுநேரம் அவர்கள் நெருப்பினைச்சுற்றி அமர்ந்திருந்தனர். சிலர் பாட்டுப்பாடினர். சிலர் உண்ட மயக்கத்தில் அப்படியே நிலத்தில் சரிந்து தூங்கினர். நான்கு திக்குகளிலும் நால்வர் காவலுக்கிருந்தனர்.

குவேனியின் விழிகளை நித்திரை ஆவலுடன் தழுவப் பார்த்தது. அவ்வேளை நகுலியின் அருகில் களுசேனன் வந்தான்.

"இனி என் அருகில் நீ வரக்கூடாது..." என்று எரிந்து விழுந்தாள் நகுலி.

களுசேனன் சற்றுப்பலமாகச் சிரித்தான். போதை தலைக்கேறியிருந்தது.

"நீ யார் அதைச்சொல்ல?..." என்றான் களுசேனன்.

நகுலியை அவன் வார்த்தைகள் பலமாகத் தாக்கின. அவள் கோபத்துடன் எழுந்து அவனை எட்டி உதைத்துவிட்டதுடன் தன் வலக்கரத்தில் சுட்டியை ஏந்தி அவனைக் குறி வைத் தாள். அவன் மார்பில் நகுலியின் சுட்டிபாய்ந்தாற்கூட அக்கூட் டத்தில் எவரும் காரணம் கேட்கமாட்டார்கள்.

நிலத்தில் சரிந்து கிடந்த களுசேனனுக்குத் தன் இக்கட் டுத்தெரிந்தது. அவளுக்கெதிராக ஆயுதம் ஏந்தில் அவனை அக் கூட்டத்தினர் துண்டுதுண்டாக்கி விடுவார்கள் என்பதும் அவ னுக்குத்தெரியும். இரு கரங்களையும் கூப்பி, "மன்னித்துக் கொள் தாயே..." என்றான். ஓங்கிய சுட்டி மண்ணில் வேக மாகப் புதைந்தது.

அங்கு சில பொழுதுகள் சாமரணம் நிலவியது. எவ ரும் எதுவும் பேசவில்லை. குவேனி. அவ்விடத்தைவிட்டு எழுந்து குடிலிற்குள் செல்ல முயன்றாள். அவள் விழிகள் நோக்கிய இடத்தில் தாரதத்தன் மௌனமாக அமர்ந்திருப் பதும், அவன் அருகில் சென்று சலதி தயங்கி நிற்பதும் அவ னுக்குத் தெரிந்தது. சலதி தன் அருகில் நிற்பதை உணராத அவன் அவளை ஏக்கத்துடன் பார்த்தான்.

குடிலிற்குள் நுழைந்த அவள் மீண்டும் தாரதத்தனைப் பார்த்தபோது, சலதி அவன் அருகில் அமர்ந்து அவன் கரத் தைப்பற்றித்தன் மடியில் வைக்க முயல்வதைக் கண்டாள்.

அவளை இனந்தெரியாத துயரம் கவிந்து கொண்டது.



6

ஏழாம்நாள் அதிகாலை, தூரத்தில் மரக்கலங்கள் கரையை நோக்கி வருவது தெரிந்தது. வெகு தூரத்தில் சிறு புள்ளிக ளாகத் தெரிந்தன. உப்பிய பாய்கள் அக்கலன்களை கரை யைநோக்கி இழுத்து வந்தன. மரக்கலன்கள் வருவதை தாரதத் தனே முதன்முதலில் அக்கூட்டத்தாருக்கு அறிவித்தான். வர்த்தகர்கள் வருகின்ற செய்தியால் அக்கடற்கரையில் என்று மில்லாத பரபரப்பு எழுந்தது.

நண்பகல் பொழுதில் மரக்கலங்கள் சமுத்திரத்தில் நன்கு பார்வைக்குத் தெரிந்தன. நான்கு மரக்கலங்கள் முன்பின்னாக நகர்ந்து வந்து கொண்டிருந்தன. பாரிய கலங்கள். அவை சமுத்திரத்தின் அலைகளுக்கு ஈடு கொடுத்து அசைத்து ஆடி அன்னப்பறவைகள் போல மிதந்து நகர்ந்தன.

அவை அன்று மாலைப்பொழுதில் தான் கரைக்கு அப் பால் நங்கூரம் பாய்ச்சித் தரிக்குமெனவும் மறுநாள் அதிகாலை தான் அவர்கள் சிறிய வள்ளங்களில் கரைக்கு வருவார்கள் எனவும் நகுலி குவேனிக்குத் தெரிவித்தாள்.

"இவை யாருடைய கலங்கள், அம்மா?"

''தெரியவில்லை. வணியாக்கள் அல்லது நவிகாக்களாகத் தான் இருக்கும்.''

''இவர்களைத் தவிர வேறு ஆட்கள் இங்கு வருவதில்லையா, அம்மா?''

''இல்லை... வேறு வர்த்தகக் குழுக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.''

தாரதத்தன் அவ்வேளை குறுக்கிட்டான்.

''மாந்தைத்துறையில் நாகர்களின் வர்த்தகக்குழு ஒன்றிருக்கிறது தானே. அவர்கள் தங்களை மகன் சிவிதா வர்த்தகக் குழு என்கின்றனர். உண்மையில் அந்த வர்த்தகக் குழுவே மாந்தையில் மிக்க ஆதிக்கம் வாய்ந்ததாக இருக்கின்றது. அந்த வர்த்தகக்குழு கோகர்ணத்தில், மாந்தையில் இருப்பது போன்றதொரு லிங்கவழிபாட்டுக் கோயில் ஒன்றினைக் கட்டிவருகிறார்களாம். அவர்கள் இயக்கர்களுடன் வர்த்தகம் செய்ய விரும்புவதில்லை. ஏன் எனத் தெரியவில்லை.''

''நீ காரணம் அறியாமல் விட்டிருக்க மாட்டாய், தாரதத்தா. மறையாமல் சொல்... ஏன்?'' எனக் குவேனி அவன் வாயைப் பிடுங்கினாள்.

''நாங்கள் புலுண்டாக்களாம். அதாவது வேடராம். நாகரிகமற்றவர்களாம். மிருகங்கள் போல வாழ்பவர்களாம். நாங்களும் அவர்களும் திராவிடமொழி பேசினாலும் தரத்தில் நாங்கள் குறைந்தவர்களாம். நாங்கள் இராவண இராக்கதரின் எச்சங்களாம். அவர்கள் இராமருடன் வந்தோருடன் ஏற்பட்ட தொடர்பால் விருத்தியுற்றவர்களாம்.''

குவேனி அவனைக் கோபத்துடன் பார்த்தாள். பின் சாந்தமடைத்தாள்.

''அவர்கள் சொன்னதில் என்ன பிழை இருக்கிறது. நாங்கள் இன்னமும் காட்டு மனிதர்களாகவே வாழ்ந்து வருகின்

றோம். காடு, மிருகங்கள், சொத்துக்கள், பெண்கள், ஆண்கள் குழந்தைகள் எல்லாம் இங்கு பொது. எல்லாருக்கும் சொந்தம். அங்கு அப்படி இருக்கிறதா, தாரதத்தா. தனிமனிதர்கள் தத் தமக்கென சொத்துச் சேர்ப்பதாகச் சொன்னாய். பசியுடன் ஒருவன் பார்த்திருக்க மற்றவன் மறைத்து மறைத்து உண்பதாக நீதானே சொன்னாய்? அவர்களின் அந்த நாகரீகம் எங்களுக்கு வேண்டாம். அதற்காகவாவது நாங்கள் புலுண்டாக்களாக வாழ்ந்து விடுவோம். ஆனால் ஒன்றுதான் எனக்குப் பிடிக்க வில்லை.." என்றாள் குவேனி.

அவளை ஏறிட்டுத் தாரதத்தன் பார்த்தான். அவள் தொடர்ந்தாள்.

"நமது குடும்ப உறவு... அவர்கள் மாதிரி ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்பதுதான் சரியாக எனக்குப் படுகிறது. என் அம்மா மாதிரி நான் வாழமாட்டேன். நான் என்னளவில் ஒருவனுக்குத் தான் வாழ்க்கைப்படுவேன். உன்னைமாதிரியும் இல்லை, தாரதத்தா."

அவன் குழந்துப்போய் அவளைப் பார்த்தான்.

"நான் வடபாக நாகர்கள் மாதிரி வாழவிரும்புபவன். நேச சஞ்சாரி ஒருவன் உலகத்தின் நல்லனவற்றை சமூகத்திற்கு அறிமுகப்படுத்துபவன், குவேனி."

"நம்பமாட்டேன். இந்தத் தாமிரபர்ணி மண்ணில் உறங்கிய அன்றிரவு உன்னுடன் சலதி உறங்கவில்லை?..."

தாரதத்தன் பெரிதாகச் சிரித்தான்.

"பாவம் சலதி... அவளுக்கு என்னில் விருப்புண்டு. ஒரு கரம் நட்டிச் சத்தம் வருமா, குவேனி..."

அவன் வார்த்தைகளில் இனந்தெரியாத ஒரு சுகம் தொனித்தது. மனதில் இருந்து அழுத்திய ஒரு பாரம் நீங்கியது மாதிரித் தெரிந்தது.

''நாகர்களிடம் ஒரு தாரமுறைமை இருக்கிறது. ஆனால், அங்குள்ள நாகர்கள் ஒரு பெண்ணுடன் திருப்தி கண்டவர்களாகவில்லை. அதற்காக அவர்கள், பரத்தையர் என ஒரு சமூக அமைப்பினை உருவாக்கியிருக்கிறார்கள். பொருளை வளங்கி, தேவைப்படும் போது பரத்தையரிடம்சென்று சுகம் பெற்று வருகின்றனர்.''

அவள் அவனை வியப்புடன் பார்த்தாள்.

''அந்த உரிமை அங்கு பெண்களுக்கு இல்லையோ?

''இல்லை. பெண்களை அவர்கள் பூட்டிவைத்துப் பேணுகிறார்கள். ஆடையணிகளால் அலங்கரித்து போகப்பொருளாக வைத்திருக்கிறார்கள். கற்பு என்று ஒன்றினை ஏற்படுத்தி அதனை அவர்கள் பின்பற்றுமாறு வகுத்திருக்கிறார்கள். பொதுவாகக் கூறில் அங்குள்ள பெண்கள் தம் சகல சுதந்திரங்களையும் ஆண்களிடம் இழந்துவிட்டார்கள் எனவே படுகின்றது.''

''பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்களா? அந்தச் சமூக அமைப்பு எங்களுக்கு வேண்டாம், தாரதத்தா...''

அன்று மாலை மரக்கலங்களில் ஒன்று கரைக்குச் சற்றுத் தள்ளி நங்கூரமிட்டுத் தரித்து நின்றது. அவற்றில் இரு மரக்கலங்கள் தென் திசைக்குத்திசையிலும் இன்னொன்று வடகிழக்குத்திசையிலும் நகர்ந்து சென்றதைக் குவேனி கண்டாள்.

''நான்கு மரக்கலங்களும் இங்கு வரவில்லையா?'' எனத் தாயைக் கேட்டாள், குவேனி.

''இல்லை. ஒன்று மட்டுந்தான் வந்திருக்கிறது... இங்கு மரக்கலம் தரித்து நிற்கின்ற இடத்தினை அவர்கள் பொன்பரப்பு என்கின்றனர். ஏனென எனக்குத் தெரியவில்லை. பொன்பரப்புக்கு வடக்கே சிறுபது யோசனை தூரத்தில் சலாபத்துறை ஒன்றிருக்கின்றது. பெண்ணே. முத்துச்சிப்பிகள் அங்கு காலத்திற்குக் காலம் குளித்தெடுக்கப்படுகின்றனவாம். அவற்றினை

வாங்க வர்த்தகர்கள் கலங்களில் வருவார்கள். முத்துக்குளுக்கு நல்ல மதிப்பு. ஏன் என எனக்குத் தெரியவில்லை. என் தாயாருடன் பல தடவைகள் தாம்பிரபர்ணிக்கடற்கரைக்கு வந்திருக்கிறேன். அவ்வேளைகளில் கடற்கரையின் தாழ் பகுதிகளில் முத்துச்சிப்பிகள் கிடைத்திருக்கின்றன. அவற்றினை வெட்டிப் பிளந்தபோது அவற்றில் வெண்ணிறமான மணிகள் இருப்பதைக் கண்டிருக்கிறேன். என் தாய் அவற்றினை வீசியெறிந்து விட்டு, சிப்பிக்குள் இருக்கும் தசைப்பகுதியை விரும்பி எடுத்துக்கொள்வாள், உணவிற்காக. இன்று இந்த நவிகாக்களும் வணிகர்களும் பெரும்பொருளைப் பண்டமாற்றாகக் கொடுத்து அந்த வெண்மணிகளை வாங்கிக்கொள்கிறார்களாம். வியப்பாக இருக்கிறது.'' என்றாள் நகுலி.

''முத்துக்களைக் கோர்த்து நாகர்குலப்பெண்கள் மாலையாக அணிந்திருப்பதைக் கண்டிருக்கிறேன். சூதிரைமலைத்துறை என்று ஒரு துறை சலாவத்துறைக்கு வடக்கே இருக்கிறது. அங்கு வாழும் நாகர்கள் குதிரை ஒன்றினைப் பெறுவதற்காகப் பெருந்தொகை முத்துக்களை நவிகாக்களுக்குக் கொடுப்பார்களாம்...'' என்றான் தாரதத்தன்.

''குதிரை என்றால் என்ன?'' எனக் குவேனி வியப்புடன் கேட்டாள்.

''அது ஒருவிதமான மிருகம். வேகமாக ஓடும். அதில் ஏறி மனிதர்கள் சவாரி செய்வதை மாந்தையில் பார்த்திருக்கிறேன். சூதிரைமலையிலும் குதிரைகள் இருக்கின்றன.''

''எங்கள் யானைகளிலும் பார்க்கப் பெரியனவா?''
''இல்லை...''

அடுத்த நாள் அதிகாலை மரக்கலத்திலிருந்து சிறிய தோணிகளில் சிலர் ஏறிக் கரைக்கு வந்தார்கள். அவர்கள் அராபிய வர்த்தகர்கள். கரையில் இறங்கிய அவர்கள் சொம்பு போன்ற ஒன்றினை வாயில் வைத்து ஓலியெழுப்பினர்.

''அவர்கள் யார் அம்மா?'' எனக் குவேனி கேட்டாள்.

காட்டோரம் மறைவிலிருந்து அவர்களை நன்கு பார்க்க முடிந்தது.

"நவிகாக்கள்..."

குவேனி அவர்களை வியப்புடன் பார்த்தாள். ஆஜானு பாகுவான தோற்றப்பொலிவுடன் செக்கச்செவேலென சிவந்த நிறத்தோடு அவர்கள் காட்சி தந்தார்கள்.

"இப்படியொரு நிறத்தில் மக்கள் இருக்க முடியுமா?.." எனக் குவேனி வியந்தாள்.

மீண்டும் கொம்பு ஊதப்பட்டது. நகுலி சைகை செய்ய தாரதத்தன் சங்கினை எடுத்துப் பதில் தந்தான்.

"வரவா?" - எனக் கொம்பு கேட்டது.

"வரலாம்..." எனச்சங்கு பதில் தந்தது.

நகுலிக்கூட்டத்தினர் காட்டோரம் மறைந்து கொண்டார்கள். பார்வை படும் தூரத்தில் யானைத்தந்தங்கள், அகில் கட்டைகள், மான், சிறுத்தைத் தோல்கள், கராம்பு, சாதிக்காய்கள் என்பன வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. மயிற்றோகைகள் கட்டுக்கட்டாகக் குவிக்கப்பட்டிருந்தன. கலசங்களில் சுத்தமான ஆற்று நீர் அள்ளி வைக்கப்பட்டிருந்தது.

நகுலி விபரித்தவாறே வியாபாரம் நடந்தது. கத்திகள், அரிவாள்கள், கோடரிகள் என்பனவே இம்முறை நகுலிக்கூட்டத்தினருக்கு அதிகம் தேவைப்பட்டன, வேல் முனைகளும் அம்பு முனைகளும் அதிகம் தேவைப்பட்டன. வெள்ளி, செப்புப்பாத்திரங்கள், மஸ்லின் துணிகள் என்பனவற்றினை நகுலி தேவையில்லையென அறிவித்தாள். அரிசித்தானியம் அதிகளவில் வாங்கப்பட்டது. ஆமையோட்டில் எழுதப்பட்டிருக்கும் படங்களிலிருந்து குறித்த பொருளுக்கு என்ன பண்டமாற்று என்பதை இருபகுதியினரும் புரிந்து கொண்டனர்.

இருபது யானைத்தந்தங்களின் மூல் இருந்த ஆமை ஓட்டில்

கிறப்பட்டிருந்த படத்தைப் பார்த்த ஒருவன், சற்றுத் தயங்கி நின்றான்.

"அந்த யானைத்தந்தங்களுக்குப் பதிலாக வாள் கேட்டிருந்தோம்..." என்றாள் நகுலி.

அவன் கத்திகளைத் தூக்கிக் காட்டினான். சம்மதத்திற்கு அறிகுறியாகக் காட்டோரத்திலிருந்து வெள்ளைக்கொடி அசைக்கப்படவில்லை. அவர்கள் அந்தக்கட்டு யானைத்தந்தங்களை விட்டுவிட்டு ஏனையவற்றினைப் பண்டமாற்றுச் செய்து கொண்டனர். ஆமை ஓடுகளில் தமக்கு அடுத்த நடவை தேவையானவற்றினைப் படங்களாக வரைந்து வைத்தனர். நட்புக்கறிகுறியாக மட்கலசங்களில் வைக்கப்பட்டிருந்த நீரை அருந்தினர்.

கஞ்சேனனனுக்கு ஏமாற்றமாக இருந்தது. இருபது யானைத் தந்தங்களுக்கு ஒரு வாள் தரத் தயங்குகிறானே? எல்லாப் பொருட்களும் பண்டமாற்றிற்குள்ளாகின. வாள் கேட்ட பொறிவைத் தவிர.

அவர்கள் வந்த தோணிகளில் வாங்கிய பொருட்கள் ஏற்றப்பட்டன. அவ்வேளை தயங்கி நின்ற ஒருவன் வேகமாக யானைத்தந்தங்கள் வைக்கப்பட்டிருந்தவிடத்திற்கு ஓடி வந்தான். அவன் அப்பொதியை நெருங்குமுதல் கஞ்சேனனின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு அவன் முன் பளீரெனக் குத்தி நின்று எச்சரித்தது. அப்பொழுது தான் அவனுக்குத் தன் தவறு தெரிந்தது. தன் இடையில் செருகியிருந்த வாளை அவிழ்த்துக் காட்டிவிட்டு, அதனைப் பொதியிடத்தில் வைத்தான்.

கஞ்சேனனின் முகம் மலர்ந்தது. நகுலி வெள்ளைக் கொடியை அசைக்கச் சொன்னாள்.

வாளை வைத்துவிட்டு யானைத்தந்தங்களை அந்த அராபியன் எடுத்துக்கொண்டு தோணியில் ஏறிக்கொண்டான். அவன் உடல் தன் முன் காற்றினைக்கிழித்துக்கொண்டு பாய்ந்த அம்பின் நினைவால் மெதுவாக நடுங்கியது.

* * *

7

ஒருநாள் அதிகாலை.

அவர்கள் மீண்டும் தங்கள் பயணத்தை ஆரம்பித்தனர். அழகான அப்பிரதேசத்தைவிட்டு விலகி அடர்ந்த காட்டுப்பகுதிக்குச் செல்வதில் குவேனிக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. முல்லைநிலத்தில் பயங்கர அழகும் மருதநிலத்தின் மோன அழகும் அவளுக்குப்பிடித்தமானவைதாம். அவை இரண்டும் ஒருங்கே இணைகின்ற இப்பிரதேசத்தில் தொடர்ந்து குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தால் என்ன என்று அவளுக்குப்பட்டது.

"இங்கேயே இருந்துவிடலாமே, அம்மா..." எனத் தாயிடம் கேட்டாள்.

நகுலி மகளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"கடற்கரையோரம் பாதுகாப்பானதல்ல, மகளே. நாம் வேட்டையாடுபவர்கள். காட்டுவிலங்குகள் எங்குள்ளனவோ அவ்விடங்களில் வாழ வேண்டியவர்கள். காய், கனிகளும் தேனும் இந்தவெம்மையான கடற்கரைப்பிரதேசத்தில் கிடைத்து விடுமா? மிருகங்கள் இங்கு கிடைக்குமா? இங்கு

இருந்தாற்போல புயல் வீசும். சுழன்றடித்தபடி காற்றுக்கள் வீசும். கடலை அவை கடைந்து நிலத்தில் மோதும்.. கடலில் வாழ்கின்ற இராச்சத விலங்குகள் நிலத்திற்கு வந்து சேரும். எங்களுடன் வர்த்தகம் செய்ய வந்தார்களே, அவர்கள் வந்திறங்கிய மரக்கலங்கள் கடுங்காற்றின் தாக்கத் தால் சுக்குநூறாக உடைந்து போகும். அதில் வந்தவர்களைக் கடல் விலங்குகள் அப்படியே விழுங்கிவிடும். கடற்கரை இப் போது அமைதியாக இருக்கிறது. பெண்ணே. இந்த அமைதி எப்பொழுதும் தொடர்ந்து இருக்காது. பிசாசுகள் நர்த்தனமிடு வதுபோல அவ்வேளைகளில் கடற்கரை மாறிவிடும். அந்தப் பொல்லாத அனுபவம் எனக்கு ஒரு தடவை ஏற்பட்டது. எங்கள் யானையிலும் பார்க்க பெரியதொரு விலங்கு அந்த கைய வேளையில் கரையில் வந்து ஒதுங்கியது. நல்லவே'ளை அது செத்திருந்ததால் தாமிரபர்ணி மக்களாகிய நாங்கள் தப் பினோம். நீ அந்தப்பிராணியைப் பார்த்திருக்க வேண்டும். மீன் மாதிரி... பல யானைகள் இணைந்த வடிவம்...''

குவேனி அதன் பின்னர் எதுவும் பேசவில்லை.

அவர்கள் தமது பயணத்தை ஆரம்பித்தனர். வரும்போதி ருந்த சமைகளிலும் பார்க்க குறைவாகவே சுமைகள் இருந்தன. கிடைத்த பொருட்களை நகுலி எல்லாருக்கும் பங்கிட்டு வழங் கினாள். கருசேனன் வாளைத் தன் அரையில் கட்டிக்கொண் டான். அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பது அவனுக்குப் புரியவில்லை. உருவிக் கரத்தில் எடுத்து தடவிப்பார்த்துக் கொண்டான். வேட்டையாடுதலிற்கு இது அதிகம் பயன்படாது போலப்பட்டது.

அவர்கள் அரைநாள் நடந்து, முன்னர் தங்கிய இராச்சத ஆலமரத்தின் அடியில் வந்து தங்கினர். கொணாநதி கிளை பரப்பிப்பிரிகின்ற இடம் அது. அங்கு ஒருநாள் தங்கிச் செல் வோம் என்றாள், நகுலி.

அன்றைய உணவு தேவைக்காக அவர்களில் பலர் வேட்டை விலங்குகளைத்தேடிக் காட்டிற்குள் நுழைந்தனர். அவர்களுடன் நாய்களும் பின்தொடர்ந்தன.

" எங்கள் கூட்டத்தினரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. ஒரு பெருந்தாயின் கீழ் இயங்கக்கூடியளவிற்கும் அதிகமாகப் பெருகிவிட்டது. இளப்பெருக்கம் செய்யக்கூடிய வயதில் நூற்றி யெண்பது பேர் வரையில் நம் கூட்டத்தில் உள்ளனர். சிறுவர் கள் சிறுமிகளாக இருநூற்றியெண்பது மட்டில் உள்ளனர். இவ் வளவு பேருக்கும் உணவுதேடுவது சிரமமாகி வருகின்றது. எனது கூட்டத்தினரை இரண்டு குழுக்களாகப் பிரித்துவிட்டால் என்ன என்று யோசிக்கிறேன், தாரதத்தா..." என்று நகுலி வழி நடைப்பயணத்தின் போது கூறினாள்.

தாரதத்தன் எதுவும் பேசாது வியப்புடன் அவளைப் பார்த்தான்.

" நாம் அருகருகே இருந்தாலும் இரண்டு கூட்டமாக இருப்பது நல்லது போலப்படுகின்றது. குறைந்த ஆட்களைப் போசிப்பதில் சிரமமில்லை. எமக்குப் பின்னர் குவேனியின் தலை மையிலும் திரிகுவியின் தலைமையிலும் நம் கூட்டத்தாரை இரண்டு குழுக்களாக்கினால் என்ன?"

" வயிறுகளின் எண்ணிக்கைகள் அதிகரித்திருப்பதுபோல, உணவு தேடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது, தாயே. அதனால் பிரச்சினையில்லை. பங்கிடு செய்யும்போது ஏற்படுகின்ற சிரமத்தைக் கவனத்திற்கு எடுப்பதனால் தான் சிரமம் மாதிரித் தெரிகின்றது. இரு குழுக்களாக்குவது எமது கூட்டத்தின் பலத்தைக் குறைத்துவிடும். நம்மீது பகைமை கொண்டிருக்கும் கூட்டத்தினர் இலகுவில் தாக்கவும் ஏதுவாகி விடும். இரு குழுக்களாக்குவதிலும், இரு அக்கினிக்குண்டங் களை இனி உருவாக்குவோம். உணவுப்பங்கீட்டை இரண்டுபிரி வுகளாக்குவோம்..." என்ற தாரதத்தனை நகுலி பயத்துடன் பார்த்தாள்.

" வழமைக்கு மாறானது. நமது முன்னோர்கள் அதனை விரும்பமாட்டார்கள். எங்கள் கூட்டத்தில் இல்லாத வழக்க மிது தாரதத்தா."

குவேனி குறுக்கிட்டாள்.

"நாகதீபத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் உணவு ஆக்க ஒவ்வொரு நிக்குண்டம் இருக்கிறதாம், அம்மா."

"உனக்கு இதனை யார் சொன்னது?"

குவேனி எதுவும் பேசவில்லை. தாரதத்தன் சொன்னான் என்பதன் மூலம் சிலவேளைகளில் பெருந்தாயின் கண்டனத்திற்கு அவன் ஆளாகக்கூடும்.

"அக்கினிதேவனின் கோபத்திற்கு ஆளாகிவிடலாம், குவேனி. முன்னர் ஒருமுறை என் மூதாட்டியொருத்தி இரண்டு அக்கினிக்குண்டங்களை ஏற்படுத்தியபோது, ஒரு பகுதிக்காடு முற்றாகத் தீக்கிரையாகி அழிந்து போனதாக அறிந்திருக்கிறேன். அக்கினிதேவன் காட்டை அழித்துவிடுவான். நமது உணவுகளை இல்லாமல் செய்துவிடுவான்."

"அப்படி நடக்காது தாயே. அது விபத்தாகவிருக்கலாம். இதில் பயப்பட எதுவுமில்லை. நாகர்கள் போலவா குடிசைக்கு ஒரு அக்கினிக்குண்டம் ஏற்படுத்தப்போகின்றோம்? உணவு தயாரிப்பதைக் கெதிப்படுத்துவதற்கும் காவலுக்கும் தானே?"

தாரதத்தன் எவ்வளவு கூறியும் நகுலியின் மனம் சமாதானப்படவில்லை.

அவர்கள் கொணாநதியில் இறங்கி நீராடினர். நடந்து வந்த களைப்பிற்கு குளிர்ந்த நீரில் அமிழ்ந்திக் குளிப்பது இதமாகவிருந்தது. வெகு நேரம் குவேனி நதிநீரில் நீந்தினாள். அனைவரும் குளித்துவிட்டுக் கரையேறிய பின்னரும் அவளும் தாரதத்தனும் நதியை விட்டு வெளியேறப் பிரியமின்றிக் குளித்தனர்.

தாரதத்தன் கொணாநதி இருகிளைகளாகப்பிரிகின்ற இடம் வரை நீந்திச்சென்றான். பளிங்குபோன்ற வெண்மணலில் நீண்ட உருண்டையான பெருங்கல்லொன்று அவன் பார்வையில் பட்டது. வியப்புடன் அதனைக் கரங்களில் எடுத்துக்கொண்டான்.

ஆற்றுநீரினால் நன்கு அரிக்கப்பட்டு நீண்ட உருண்டை வடிவத்தினை அழுத்தமாக அக்கருங்கல் பெற்றிருந்தது. உயர் மலைப்பகுதியிலிருந்து ஆற்றின் போக்கில் உருட்டிக்கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

அவன் கரங்கள் மெதுவாக நடுங்கின. இனந்தெரியாத பயம் அவனுள் எழுந்தது. வெகுநேரம் அக்கல்லினைப் பயத்துடன் பார்த்தான். அவன் திக்கிட்டு நிற்பதும் கரங்களில் எதனையோ ஏந்தி வியப்புடன் பார்த்து நிற்பதையும் கண்ட குவேனி அவ் விடத்திற்கு விரைந்து நீந்தி வந்தாள்.

"என்ன தாரதத்தா..."

"இதைப்பார்த்தாயா, குவேனி...?"

"இதென்ன?...கல்... கறுப்புக்கல்..."

"இல்லை குவேனி... இது லிங்கம். நாகர்களில் சிலர் வணங்குவதாகக் கூறினேனே, அந்த லிங்க வடிவம் இப்படித் தான் இருக்கும். இது எப்படி இங்கு வந்தது?"

"ஆற்றில் அள்ளுப்பட்டு வந்திருக்கும்..."

"இவ்வடிவத்தை எப்படி இக்கல் பெற்றது..."

அதற்கு அவனால் விளக்கம் தரமுடியவில்லை. நீரில் அரிப்பு காரணமாக அக்கல் அப்படியான வடிவத்தைப்பெற்றதென்றோ, அல்லது சுயம்புலிங்கமென்றோ அவனால் விளக்க முடியவில்லை.

"என்ன செய்யப் போகின்றாய்?" எனக் குவேனி கேட்டாள்.

"என்னுடன் வா, காட்டுகிறேன்..." என்றபடி கரையேறிய தாரதத்தன், அக்கல்லினை இராச்சத ஆலமரத்தின் அடியில் குத்தென நட்டான். கரங்களைக்கூப்பி வணங்கினான்.

அக்கூட்டத்தினர் அதனை வியப்புடன் பார்த்தனர்.

8

கோட்டிற்குள்ளிருந்து சங்கொலிகள் எழுந்தன. நகுலி அவதானமாக அந்தச் சத்தத்தைக் கேட்டாள். மீண்டும் மீண்டும் சங்குகள் 'பூம் பூம்' என முழங்கின. தாரதத்தனும் அதனைச் செவிகொடுத்துக் கேட்டான். பெருந்தாயை அர்த்தத்துடன் பார்த்தான்.

'' அதிசயம்... '' என்றாள் நகுலி : '' வேட்டைக்குச் சென்றவர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு விரைவில் அவர்களுக்கு வேட்டை விலங்குகள் அகப்பட்டு விட்டனவா ?

'' ஆறு சங்குகளும் முழங்குகின்றன. அம்மா... எல்லாருக்கும் சரியான வேட்டை அகப்பட்டிருக்க வேண்டும் '' என்றாள் சுவேனி: '' இன்று இது அதிசயம் தான். ''

காட்டில் வேட்டை என்பது இலகுவான செயலன்று. மிருகங்களைத்தேடி அலைந்து அவற்றின் மோப்ப சக்திக்கு உட்படாது அம்பினைத் தொடுத்து அவற்றினை வீழ்த்துவது என்பது வெகு பிரயத்தனத்துடனும் அவதானத்துடனும் கூடிய சங்கதி. வேட்டைக்குச் செல்பவர்கள் இரண்டு மூன்று நாட்

கள் வரையில்கூட காடுகளுள் அலைய நேர்ந்திருக்கின்றது. வேட்டையாடுபவர்களைக் கண்டதும் குரங்குகளும் பறவைகளும் காட்டினை எச்சரிக்கை செய்யும். குரலெழுப்பி தாங்கள் கண்டதை எச்சரிக்கை செய்யும். விலங்குகள் ஓடி ஒளிந்து கொள்கின்றன. அவற்றின் பார்வையிலிருந்தும் தப்பி காட்டினுள் புகுந்தால், வருணன் விலங்குகளுக்கு மனிதர்கள் வருகின்ற செய்தியை காற்றில் எடுத்துச்சென்று தெரிவித்துவிடுவான்.

அவர்களுக்குரிய உணவினை பிதுர்களும் பிசாசுகளும் மனமிரங்கிக்காட்டும் போதுதான் வேட்டை பலிக்கிறது என அவர்கள் நம்பினர். இன்று அதிசயமாக நேரகாலத்துடன், அனைவருக்கும் வேட்டைகள், கிடைத்திருக்கின்றன. என்ன நிகழ்ந்தது? இப்பகுதி வேட்டைக்குகந்த நிலமோ?

இருந்தாற்போல நகுலியின் பார்வை இராச்சத ஆலமரத்தின் கீழ் நடப்பட்டிருந்த லிங்கத்தின் மீது படிந்தது. தாரதத்தன் அவ்வடிவத்தை அங்கு நாட்டிய நிமித்தம் தானோ? குவேனிக்கும் அப்படியே பட்டது.

நகுலி முழந்தாழிட்டு அவ்வடிவத்திற்கு வணக்கந் தெரிவித்தாள். நகுலியைத்தொடர்ந்து அனைவரும் முழந்தாழிட்டனர்.

சங்குகள் விம்மியபடி நெருங்கி வந்தன. அவர்கள் வெகு உற்சாகமாக இருக்கிறார்கள் போலும். வேட்டைநாய்களின் குரைப்பும் தேய்ந்து கேட்டது.

''தாரதத்தா, நாகர்களின் இவ்வழிபடும் தெய்வத்திற்கு என்ன பெயர் என்றாய்?'' என நகுலி கேட்டாள்.

''தாயே, இதை அவர்கள் சிவலிங்கம் என்கின்றனர். படைப்பின் தத்துவம் இதில் இருக்கிறதாம். ஒளிப்பிளம்பு இதுவாம். மக்களைக் காப்பது படைப்பது அழிப்பது அனைத்தும் இதனுள் அடக்கமாம்.''

அவர்களுக்கு இவை எதுவும் விளங்கவில்லை. நகுலி வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

"இவற்றினை யார் உனக்குச் சொன்னார்கள் ?"

"நாகர்களின் குரு சொன்னார்."

"குருவா ?"

"நாகர்களின் பல இராச்சியங்கள் வட பாகத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு பிர தேசத்திற்கும் ஒவ்வொரு வலிமையான நாகன் அரசனாக இருக்கிறான். அதாவது தலைவனாக இருக்கிறான். அவர்களுக்கு அறிவுரை சொல்லி வழிநடத்துபவன் குரு என்ற பதவி வகிப்பவன். அவனின் அறிவுரையின்படியே அவர்கள் நடக்கின்றனர். அவர்களின் குரு அவர்கள் வணங்குகின்ற இத்தெய்வத்திற்கு வழிபாடு செய்கிறான் அவர்களை அதனை வணங்கச் செய்கிறான். அவனைப் புரோகிதன் எனவும் கூறுகின்றனர். நல்லனவற்றைக் கூறி வழிகாட்டவும், கெட்டனவற்றைக்கூறி எச்சரித்தும் வருகிறான்." என்றான் தாரதத்தன்.

"இவை நாகர்களின் வழிவழிவந்த முறைகளா ?"

"அப்படித்தெரியவில்லை. லிங்கவழிபாடு திராவிட இனத்திற்குரியதென்கின்றனர். ஆகவே நாமும் அவ்வழிபாட்டினைக் கைக்கொள்வதில் தவறில்லை. இன்றைய நீகழ்வுகள் அவ்வழிபாடு சக்திக்குரியதெனவும் நிருபித்திருக்கின்றன. குரு, புரோகிதர் என்ற பதவிகள் ஆரியர் வழக்கமாம். ஆரியர் என்பவர் நாகதி பத்திற்கு வடக்கேயுள்ள பெரிய நிலத்திலிருப்பவர்களாம். அதனை நாகர்கள் கைக்கொள்கின்றனர், தாயே. ஆரியர் தங்களைத் தேவர்கள் என்றும், ஏனையோரை அசுரர்கள் என்றும் அழைக்கின்றனராம். அவர்களைப்பொறுத்தளவில் நாகர்கள், இயக்கர்கள் ஆகிய நாம் எல்லாரும் அசுரர்களாம்."

தாரதத்தனை நகுலியும் குழுவினரும் மிக்க வியப்புடன் பார்த்தனர்.

அவன் எவ்வளவு விடயங்களைக் கற்றிருக்கிறான்.

"எங்கள் கூட்டத்தில் நீ தான், தாரதத்தா. அறிவுள்ளவன். பலதும் தெரிந்தவன். இக்கூட்டத்தின் குருவாக இருக்கும் தகுதி

உனக்குத் தான் இருக்கிறது.'' என்ற நகுலியை தாரதத்தன் வியப்புடன் பார்த்தான். அவன் விழிகள் கலங்கின,

'' தாயே...'' என அவள் பாதம் பணிந்த அவனை நகுலி கரங்களால் தூக்கினாள். அவள் விழிகள் பெருமிதத்துடன் பார்த்தன.

'' தாரதத்தா இன்றிலிருந்து நீயே எங்கள் அசுரகுரு...'' என்றாள் நகுலி: '' உனக்குத் தெரிந்தவற்றினை எம் கூட்டத்தினருக்கு நீ சொல். உனக்குத் தெரிந்த கலைகளை எம் கூட்டத்திற்கு நீயே கற்பி...''

அடர்காட்டின் ஒரு மூலையிலிருந்து யானையொன்றின் பிளிறல் ஒலி எழுந்தது. இராச்சத ஆலமரத்தில் இனந்தெரியாத சரசரப்புகள் எழுந்தன. அந்த ஆலமரத்தில் கூடிவாழ்ந்த பறவைகள் நூற்றுக்கணக்கில் இறகுகளை அடித்தபடி வின்னில் எழுந்தன. கிழைவானில் மின்னல் ஒன்று கிளைவிட்டு பிரிந்தது,

நல்ல சகுனங்களாக அவை அவர்களுக்குப்பட்டன.

நான்கு மான்களுடனும் இரண்டு கொழுத்த மரைகளுடனும் வேட்டைக்குச் சென்றவர்கள் அவ்விடத்திற்கு வந்தனர், அவ்விடத்தில் மகிழ்ச்சிப்பரபரப்பு எழுந்தது.

'' தாரதத்தா, என்ன சொல்கிறாய் ?'' என்று நகுலி கேட்டாள்.

'' இவ்விடத்தில் இன்று இரண்டு அக்கினிக்குண்டங்கள் உருவாகட்டும்.'' என்றான் அசுரகுரு தாரதத்தன்.

அவனை மிகுந்த வெறுப்புடன் களுசேனன் பார்த்தான்.



9

பருத்திப்பஞ்சினை நூலாக்கும் முயற்சியில் சலதி ஈடுபட்டிருந்தாள். தக்களியில் பஞ்சு நூலாக புரிபுரியாக சுற்றிச் சேர்ந்தது. அவளைப்போலப் பலர் அம்முயற்சியில் ஈடுபட்டிருப்பது தெரிந்தது, சிலர் காய் கனி தேடிக் காடுகளுக்குள் சென்றிருந்தனர். குழந்தைகள் ஓடிவிளையாடிக்கொண்டிருந்தன.

அங்கு ஒரு குடியிருப்பு உருவாகியிருந்தது. மத்தியில் பெரியதொரு குடிசையும் அதனைச்சுற்றி பதினெட்டுப் பெரிய குடிசைகளும் அமைக்கப்பட்டிருந்தன, வட்டவடிவினதாக அக்குடிசைகள் புற்களினால் வேயப்பட்டு, மண்ணால் நிலம் இடப்பட்டிருந்தன, புற்பட்டிகள் சில குடிசைகளில் மறைப்பாக இருந்தன. அவையும் இரவில் வீசும் குளிர் காற்றினைத் தடுக்கும் பக்கமாகக் கட்டப்பட்டிருந்தன.

வெப்பத்திற்கும் மழைக்கும் தாக்குக்கொடுக்கக்கூடிய குடிசைகள் அவை.

சிலகாலமாக சலதிக்கு வாழ்வில் பிடிப்புக் குறைந்திருந்தது. தாரதத்தனின் அலட்சியம் அவளை வேதனைப்படுத்தியது. அவள் நெருங்க நெருங்க அவன் விலகிச்சென்றான். மற்றைய ஆடவர் மாதிரி தாரதத்தன் இல்லை. பெண்கள் பக்கம் நாட்

டமில்லாதவனாக இருந்தான். அவன் நாட்டம் குவேனியின் பால் இருந்ததை அவள் அறியாமல் இல்லை. அதனைத்தடுக்க அவளால் முடியாது. நாளைய பெருந்தாய் அவள்.

சலதி அப்படியொன்றும் அவலட்சணமான பெண்ணல்லள். நித்தம் உழைத்துச் சாப்பிடுவதால் அவள் உடல் கட்டாக விருந்தது. வீண்சதைகள் அவளுடலில் விழவில்லை.

"எங்கள் குலப்பெண்கள் பொதுவாக அழகானவர்கள். அவர்கள் ஒவ்வொருநாளும் ஓயாது பாடுபடுபவர்கள். உழைப் பவர்கள். அதனால் அவர்களின் உடல் பலமாகவும் கட்டுக் குலையாமலும் இருக்கிறது. நாகர்குலத்துப் பெண்களைப் பார்க்க வேண்டும். சும்மா இருந்து சாப்பிட்டு சாப்பிட்டு உடல் பெருத்து வீங்கி முட்டி வெடித்துவிடுமாப் போல இருக்கிறார்கள். இளைஞர்களின் ஆசையையும் காதலை யும் நாசம் செய்வதுபோல நாகர்குலப்பெண்கள் கலியாணம் செய்து ஓரிரு பிள்ளையைப்பெற்றதும் வீங்கிவிடுவார்கள். நாகர்குல ஆடவர் என்ன செய்வார்கள்? பரத்தையரை நாடு வதைவிட... ஆண்களை தம் கைகளில் வைத்திருக்க வேண்டு மாயின் பெண்கள் தம் அழகில் அவதானமாக இருக்கவேண் டும்..." என்று ஒருநாள் தாரதத்தன் சொன்னான்.

"ஏன் நாகர் குலத்தில் அழகிகள் இல்லையா?"

"யார் சொன்னது? கன்னிப்பெண்கள் அற்புதமான அழகி கள்..." என்று தாரதத்தன் சிரித்தான்.

கொணாநதியின் கரையில் தாரதத்தன் சிந்தனை வயப்பட் டவனாக அமர்ந்திருப்பது தெரிந்தது. அவனது திரண்ட தோள்களுடன் கூடிய முதுகுப்பக்கம் அவளுக்குத் தெரிந்தது. அவன் இருந்தவிடத்தை நோக்கி அவள் கால்கள் தம்மை யறியாமல் நடந்தன.

அவள் தன் பின்னால் வந்து நின்றதை அவன் உணர வில்லை. அவள் எதுவும் பேசாமல் அவன் பின் நின்றிருந்தாள். மேலை வானில் சரியத்தொடங்கியிருந்த சூரியனின் கதிர்கள்

அவனில் பட்டு அவன் மூன் அவள் வடிவத்தை நிழலாக நீட்டியபோர்துதான் அவன் திரும்பிப் பார்த்தான். அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"அசுரகுருவுக்கு அப்படி என்ன கடும் சிந்தனை?" என அவள் துயரத்துடன் சிரித்தாள். அவள் முகத்தில் கவிந்திருந்த வாட்டத்தின் காரணத்தை அவன் அறியாமலில்லை.

"சலதியா?"

"குவேனி என்று நினைத்திர்களோ?"

அவன் முகத்தில் எவ்விதமான சலனமுமில்லை. இரக்கத் தோடு சிரிக்க முயன்றான்.

"உட்கார் சலதி..." என்றான்: "எனக்கு ஓரிடத்தில் இருப்பது விருப்பத்திற்குரியதாகவில்லை. ஊருலக மெல்லாம் சுற்றி வரவேண்டுமென ஆவலாக இருக்கின்றது. வடக்கே நாகதிபத்தில் பார்க்காதவிடங்கள் பலவுள்ளன. சென்றுவர மனம் அவாப்படுகின்றது."

"அங்கேயே இருந்துவிடுவீர்களோ?"

"அப்படியல்ல சலதி. நான் பிறந்த மண் போன்ற சுகம் வேறெங்கும் வராது, அதற்காக என் கால்களுக்குக் கட்டுப் போட்டுவிட்டு ஓரிடத்தில் தரித்து நிற்க என்னால் முடிய வில்லை, சலதி. நாமறியாத எவ்வளவோ விடயங்கள் வெளி யில் உள்ளன. அவற்றையெல்லாம் அறிய வேண்டுமென்ற தாகம் எனக்கேற்பட்டிருக்கிறது."

சலதி அவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

"நாமறியாத எவ்வளவோ பொருட்கள் இருக்கின்றன. அவற்றிலன வர்த்தகர்களிடமிருந்து வாங்குவதற்கு நம் பெருத் தாய் சம்மதிப்பதாகவில்லையே?"

"அவ்விடயத்தில் நான் பெருந்தாயின் பக்கந்தான். நம்மிடம் என்ன இருக்கின்றதோ அவற்றினை வியாபாரிகளிடம் ஏன் வாங்க வேண்டும்?"

"அவர்களிடம் தாமிர வண்ணத்தில் இலேசான பாத்திரங்கள் இருந்தனவே? மென்மையான துணிகள் இருந்தனவே?"

தாரதத்தன் சிரித்தான்.

"இதோ பார் சலதி... நமது அன்றாடத் தேவைகளுக்கு எவை அவசியமோ அவற்றினை வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். வர்த்தகர்களிடம் நமது தேவைக்கான, நமக்குத் தேவையானவற்றினைத் தான் வாங்க வேண்டும். அவர்கள் உற்பத்திசெய்கின்ற பொருட்களை நம்மிடம் கட்டிவிடப்பார்ப் பார்கள். பின்னர் அவை நமது அத்தியாவசியத் தேவையாகி, நமது தேவைகள் அதிகரித்துப்போக நாம் நிம்மதியை இழந்து விடுவோம், அப்பொருட்களைப் பெறுவதற்காகக் கூடுதலாக ஓய்வு, ஒழிச்சல், உறக்கமின்றி உழைக்கவேண்டி வரும். இப்போது நாம் உண்பதற்காக உழைக்கின்றோம். நமது தேவைகள் அதிகரிக்கில் உழைப்பதற்காக உண்ண வேண்டி வரும். நாகர்கள் அப்படித்தான் வாழ்வில் நிம்மதியை இழந்துவிட்டார்கள். அந்த நிலை நமது சமூகத்திற்கு வரக்கூடாது. தாமிர வண்ணப்பாத்திரங்கள் நமக்கு ஏன்? மட்கலங்களால் அத்தேவை பூர்த்தியாகும்போது? பட்டுத்துணிகள் நமக்கேன்? பருத்தித் துணிகளால் அத்தேவை பூர்த்தியாகும் போது?"

"உன்னுடன் பேசி ஜெயிக்க முடியாது." எனக்கூறிவிட்டு சலதி தலையைக் குனிந்து கொண்டாள். மீண்டும் அவர்கள் முன் நிழல் ஒன்று நீண்டது. அவர்கள் திரும்பிப்பார்த்தனர்.

— குவேனி.

அவனைக் கண்டதும் சலதி எழுந்திருக்க முயன்றாள்.

"இரு சலதி..."

நாரதத்தனின் பக்கத்தில் குவேனி அமர்ந்து கொண்டாள். தன்னிரு பக்கங்களிலும் அமர்ந்திருக்கும் பெண்களைப் பார்த்து நாரதத்தன் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

நிர்மலமாக ஓடிக்கொண்டிருந்த நதியில் இருந்தாற்போல ஒரு மீன்குத்தி 'சர்' ரென இறங்கி, மீனைக் குத்தியபடி மேலெழுந்தது. மறுகரையில், நரிகள் இரண்டு அவர்கள் அமர்ந்திருப்பதைப் பரவாய் பண்ணாமல், நீரை நக்கிக் குடித்தன.

''ஏன் உனக்குள் சிரித்தாய் நாரதத்தா?'' என்று குவேனி அவனை வினாவினாள்.

அவன் சற்று மௌனக்கழிவின் பின்னர் சொன்னான்:
''ஆரிய சேனாதிபதி ஸ்கந்த என்பவனை எண்ணிக்கொண்டேன்.''

''யார் அவன்?''

''பலதடவைகள் இலங்காபுரிக்கும் நாகதிபத்திற்கும் வடபாக நிலத்திலிருந்து ஆரியர்கள் வந்திருக்கிறார்கள், குவேனி, முதன் முதல் தன் மனைவியைச் சிறை மீட்டு அழைத்துச் செல்ல இராம ஆரியன் இங்கு வந்தான். நமது இயக்ககுலத் தலைவன் இராவணனை அழித்துவிட்டு அவளைச் சிறை மீட்டுச்சென்றான்.''

''கேள்விப்பட்டிருக்கிறேன்...'' என்றாள் குவேனி.

''அதன் பின்னர் பல தேவ சேனாதிபதிகள், ஆரிய சேனாதிபதிகள் தங்களை அப்படித்தான் கூறிக்கொண்டனராம். இலங்காபுரிக்கு படையெடுத்து வந்து அசுரருடன், அதாவது எம்முடன் சண்டையிட்டு வெற்றிகொண்டார்களாம். காங்கேய, சுப்பிரமணிய, ஸ்கந்த எனப்பலர் வந்திருக்கின்றனர். அவர்கள் இங்கு தங்கிவிடவில்லை. வெற்றிகொண்டதும் திரும்பிச்சென்று விட்டனர். ஸ்கந்த என்ற தேவ சேனாதிபதிக்கு ஏற்கனவே ஒரு மனைவி உண்டு. நமது குலப்பெண் ஒருத்தி மீது, வள்ளி

யாம் அவள் பெயர், மையல் ஏற்பட்டதால் இங்கு வந்தான். அவளைச் சிறையெடுத்துச் சென்றான். தென் இலங்காபுரியில் மாகமம்என்ற பிரதேசத்தில் அந்தத் தேவசேனாதிபதிக்கு இன்றும் சிறியதொரு கோயிலும் வழிபாடும் இருக்கிறதாம்... ''

'' ஒருவன் சிறை மீட்க வந்தான் இன்னொருவன் சிறையெடுக்க வந்தான். '' எனச் சலதி சிரித்தாள்.

'' என்றாலும் நமது அசுரகுருவுக்கு இப்படியொரு ஆசையிருக்கக்கூடாது. '' என்ற குவேனி தன்னையும் சலதியையும் சுட்டிக்காட்டினாள்.

'' எனக்கு அதில் ஆட்சேபனையில்லை... '' என்றாள் சலதி சிரித்தபடி.

குவேனி அவளை வியப்புடன் ஏறிட்டுப்பார்க்க அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

வேட்காட்டிக்குருவியொன்று அவலமாக அலறியது.



10

அசுரகுரு தாரதத்தன் முன்றாம் பிறையின் அதிகாலை யில் வடதிக்கு நோக்கித் தன் பயணத்தை ஆரம்பித்தான். இரண்டு பௌர்ணமிகளின் கழிவில் தவறாது தாமிரபர்ணிக்குத் திரும்பி வருவதாக அக்கூட்டத்தினருக்கு வாக்குறுதியளித்தான்

"நீ இங்கிருந்து செல்வது என் வலது கரம் உடைந்தது போல இருக்கிறது, தாரதத்தா.." என்று நகுலி கலங்கி னாள். குவேனிக்கும் சலதிக்கும் மனதில் பெரும் சோகம் படர்ந்தது. சலதி கண்கள் கலங்க அவனுக்கு விடைதந்தாள்.

வழிப்பயணத்திற்கு சிறிதளவு சுட்ட இறைச்சியும் தினை மாவும் எடுத்துக்கொண்டான். வேல் முனை ஒன்றினையும் எடுத்து தோற்பையில் செருகி வைத்துக்கொண்டான். இடை யில் சிறிய கத்தியொன்றினைச் செருகிக்கொண்டு தன் பய ணத்தை ஆரம்பித்தான்.

"வாட்டிய இறைச்சியைக் கூடுதலாகக் கொண்டு போ, தார்தத்தா.."

"தேசசஞ்சாரிக்குச் சுமைகள் கூடில் அது பயணத்தின்

சுவையைப் பழுதாக்கிவிடும், தாயே. இங்கிருந்து கொணா நதியின் வலது கரையோரமாக அறுபது யோசனை தூரம் நடந்தால் மகாதீர்த்தம் வரும். முதலில் அங்கு சென்று பின்னர் அப்படியே வடக்கு நோக்கிப்பயணப்பட்டு, நாகர் கோயில் வரை சென்றுவரவிருக்கிறேன். உணவுக்கு அவ்விடங்களில் பஞ்சமில்லை, தாயே கிராமங்கள் தோறும் சத்திரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இம்முறை மரக்கலம் ஏறி நாகதீவு என்ற தலத்திற்கும் சென்றுவரவிருக்கிறேன்."

அவன் அனைவரிடமும் விடைபெற்றுச்சென்றான்.

கொணாநதியின் வலதுகரையோரமாக நடக்கும்போது அவன் மனதில் ஒரு அச்சம் உறைந்தது. தன் புறப்பட்ட விடத்திலிருந்து வடபுறமாக நடந்து சென்றால் கதம்பநதி குறுக்கிடும். அக்கதம்பநதி வடலோடு கலக்கும் இடத்தில் தான் மகாதீர்த்தம் இருக்கின்றது. தன் இலக்கினை இலகுவில் அடைவதற்கு வழி அதுவென எண்ணிக்கொண்டான். தனது பாதையை மாற்றிக் கொண்டான்.

அடர்காடு செறிந்துகிடந்தது. உயர்ந்த மரங்கள் வானை யளாவி வளர்ந்திருந்தன. காட்டுப்பாதையில் நடந்து செல்வதில் அவனுக்கு எதுவித சிரமமும் இருக்கவில்லை. அவன் காட்டின் மைந்தன். காட்டில் பிறந்து வளர்ந்தவன். காட்டு விலங்குகள் அவனுக்கு அச்சம் தருவனவல்ல. அவை அவர்களுக்காகப் படைக்கப்பட்டவை என அவன் எண்ணினான்.

இளை தாவிச்செல்கின்ற குரங்குகளும் வானில் கூட்டம் கூட்டமாகப் பறக்கின்ற பறவைகளும் அவனுக்கு உற்சாகம் தந்தன. மனிதசஞ்சாரமற்ற காட்டில் ஊடாக அவன் ஒரு பகலும் மறுநாளின் அரைப்பகலும் நடந்து ஒரு குடியிருப்பினை வந்தடைந்தான். அது ஒரு நாகர் குடியிருப்பு என்பதில் அவனுக்கு ஐயமில்லை. குடில்களின் அமைப்பும் தன் நிலம் என அவர்கள் எல்லைக்கற்களாகத் தடிகளை நாட்டியிருந்த குறுகிய நோக்கும் அவர்கள் நாகர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகளாகின. எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு குடிலிலும் இருந்த தனித்தனி அக்கினிக்குண்டங்கள் சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள் யாரெனக்கூறின.

மிகச்சிறியகுடியிருப்பு அது. மூப்பது நாற்பது குடில்கள் இருந்தன. சற்று விலகி ஆற்றினை மறித்து சிறியதொரு நீர்க்குளம் ஒன்றினை உருவாக்கியிருந்தார்கள். அங்கு காணப்பட்ட குடில்களில் ஒன்று மிகப்பெரியதாகவும் தென்னங்கீற்றுக்களால் வேயப்பட்டதாகவும், காரைகளால் சுவரிடப்பட்டதாகவும், வெளித்திண்ணைகளைக்கொண்டதாகவும் காணப்பட்டது, அதன் அமைப்பிலிருந்து அதுவே அக்கிராமத்தின் தலைமைக்காரனுடையதாக இருக்க வேண்டுமென தாரதத்தன் அனுமானித்துக்கொண்டான்.

அந்த வீட்டின் வாசலில் அவன் சென்று நின்றான். அவனைக்கண்ட நாபொன்று குரைத்தபடி பாய்ந்து வந்தது. அவன் அசையாது நின்றதைக்கண்டதும் குரைத்தபடி தயங்கி நின்றது. வீட்டிற்குள்ளிருந்து மத்திய வயது மதிக்கத்தக்க ஒரு மனிதன் வெளியில் வந்தான், முற்றத்தில் நின்றிருந்த ஆஜானுபாகுவான மனிதனை ஏறிட்டுநோக்கி, ''வா நண்பனே, நான் என்ன செய்ய வேண்டும்?'' எனக் கேட்டான். நாகர்களின் விருந்தோம்பலைத் தாரதத்தன் அறிவான்.

''வணக்கம் ஐயா, நான் ஒரு தேச சஞ்சாரி. தெற்கே தாமிரபர்ணியிலிருந்து வருகிறேன்.''

''வந்து உட்காரும்.,'' என அவன் திண்ணையைக்காட்டினான்: ''களைத்து வந்திருக்கிறீர். மோர் அருந்தலாம்..''

தாரதத்தன் திண்ணையில் அமர்ந்துகொண்டான்.

''அப்படியானால் நீர் புலுண்டாவா?''

''தொழிலால் நான் புலுண்டா, சூலத்தால் எம்மை இயக்கர் என்பர். மொழியால் நாம் உங்கள் மாதிரித் திராவிடர்..''

அந்த நாகர்களின் கிராமத்தலைவன் சிரித்துக்கொண்டான்.

''என் பெயர் நாகமல்லன், இந்த மகாவில்லாச்சிக்கிராமத்தின் தலைவன். இதுவே நாகர்களின் தென் எல்லைக்கிராமம். உம் பெயரென்ன?''

''என் பெயர் தாரதத்தன். என்னை அசுரகுரு என் பர்..''

நாகமல்லன், அவனை மிக்க மரியாதையுடன் பார்த் தான். அவ்வேளை வீட்டினுள் இருந்து ஒரு பெண் தாமிர வண்ணப்பாத்திரம் ஒன்றில் மோர் கொண்டுவந்து அவனிடம் நீட்டினாள். அவன் நன்றியுடன் பெற்றுக்கொண்டான்.

கரத்தில் வாங்கிக்கொண்ட அவன் அதனை அருந்தாது, மோர் இருந்த பாத்திரத்தை கவனமாகப் பார்ப்பதை நாக மல்லன் அவதானித்தான்.

''என்ன தத்த?..''

''ஒன்றுமில்லை. மூன்றாண்டுகளின் முன்னர் மகாதீர்த்தத் தில் தேங்காய்ச் சிரட்டையில் தான் நீர் அருந்தினேன் நன்கு தும்பு நீக்கிச் சிவிய சிரட்டைகளில் அருந்தும்போது இயற் கைச் சூழலோடு வாழ்வது போன்றிருந்தது. இப்போது தாமி ரப்பாத்திரங்கள் உங்களிடம் பழக்கத்தில் வந்துவிட்டனவா? உங் கள் தேவைகள் அதிகரித்திருப்பதை நான் காண்கிறேன்.''

''உண்மைதான் தத்தரே. எனக்கும் அந்த உணர்வு உண்டு.''

''உங்கள் வீடுகள் இப்போது பலமான சுவர்களால் தடுக் கப்பட்டிருக்கின்றன. இயற்கையான சூரியகதிர்களும் வருண னின் தழுவலும் உங்கள் வீடுகளுள் நுழைய இடமில்லை. எப்படிச் சீவிக்கின்றீர்கள்?''

தன்னுடன் பேசுபவன் சாதாரணமான இயக்கன் அல்லன் என்பதை நாகமல்லன் புரிந்து கொண்டான்.

''கள்வர் பயம்.. நாம் தேடுகின்ற சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. எங்களால் நிம்மதியாக உறங்க முடிவதில்லை. இயற்கையின் இயல்பான வாழ்விலிருந்து விடு படாத உங்களுக்கு இப்படியான பிரச்சினைகள் இல்லை. திறந்தவெளியில் வானமே கூரையாக மண்ணே படுக்கையாக நினைத்தவிடத்தில் நினைத்தமாதிரி உறங்குவீர்கள். படுத்ததும் உங்களுக்கு உறக்கம் வந்துவிடும்.''

"மனிதனுக்கு உணவு மிக அவசியமானது. குளிருக்கும் வெப்பத்துக்கும் அடக்கமான உடை. அதுவும் சொற்பம். மழையிலிருந்து பாதுகாக்க கரைகொண்ட குடில். இவைதான் மனிதரின் தேவைகள். ஒருவேளை வயிற்றினை நிரப்ப உங்கள் தாமிரவண்ணப் பாத்திரங்களால் முடியுமா? உங்கள் பெண்கள் அணிகின்ற ஆபரணங்களால் முடியுமா? எங்களை எடுத்துக்கொள்வோம். நாம் வேட்டையாடி எஞ்சுகின்ற தோல்கள், மயிற்றோகைகள், அகிற்கட்டைகள் என்பன இன்று நமக்குத் தேவையான இரும்பாயுதங்களை வாங்கப் போதுமானவை. அவை தவிர்க்க முடியாத தேவைகள் தான். இரும்பாயுதங்கள் வந்ததால் இப்போது நாம் தேவைக்கும் அதிகமாக வேட்டையாடி உணவுகளைச் சேகரிக்கின்றோம் போலவும் படுகின்றது. இயக்கப்பெண்கள் ஆபரணங்களையும் தாமிரப்பாத்திரங்களையும் பாவிக்கத்தொடங்குவார்களாயின் நாங்கள் சிலியம் முழுவதும் நமக்கு உணவாகின்ற காட்டுவிலங்குகளை ஒரேயடியாக அழித்துவிட நேரிடும்."

"உங்கள் மட்டில் அது சரி, தத்தரே. நாங்கள் உணவுகளை உற்பத்தி செய்கின்றோம். எங்கள் வயல்களில் தானியம் விளைகிறது. தோட்டங்களில் தேவையான காய்கனிகள் கிடைக்கின்றன. அதனால் எங்களுக்கு மேலதிகமாகக் கிடைப்பதனை விற்று இவற்றினை வாங்குகிறோம்."

"அவற்றினை வாங்குவதற்காகத் தான் நாகமல்லரே, நீங்கள் கூடுதலாக உற்பத்தி செய்கின்றீர்கள்.." எனத் தாரதத் தன் சிரித்தான்.

"அசுரகுரு இப்படிப் புத்திசாலியாக இருப்பாரேன நான் நினைக்கவில்லை"

"எல்லாம் உங்களைப் போன்றவர்களிடம் கற்றவைதான்."

"சமூகமாற்றங்கள் தவிர்க்க முடியாதவை, தத்தரே, இன்று என் விருந்தினராகத் தங்கியிருந்து தான் நீர் செல்ல வேண்டும்." என்றான் நாகமல்லன்.

மறுநாள் தாரதத்தன் கதம்பநதியோரமாக மகாதீர்த்தத்தை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.



II

வளர்பிறையின் நான்காம் நாள்.

தாரதத்தன் தாமிரபர்ணியை விட்டு வெளியேறிய மறு நாளே அச்சமூக மக்களிடையே சில சச்சரவுகள் தோன்றத் தொடங்கிவிட்டன. அவற்றிற்குப்பெரிதும் களுசேனனும் திரிசூலியும் காரணராயினர். உணவு தேடி வந்ததும் இரவுவேளையில் அக்கூட்டத்தினர் இரு பிரிவுகளாகப்பிரிந்து மூட்டப்பட்ட இரு நிக்குண்டங்களின் முன் அமர்ந்து கொண்டனர். தம்மை அறியாமலேயே தமக்குள் இரு பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

அன்று அதிகாலை நகுலிக் கூட்டத்தினர் வேட்டைக்கும் காய்கனிதேடலுக்கும் புறப்பட்டபோது, களுசேனன் தான் வரவில்லை என்றான். காரணம் கேட்டபோது, தனக்கு வேட்டையில் ஒரு பங்கு தரப்படவேண்டும் என்றான்.

திரிசூலியும் அவனுடன் வேறுபலரும் அவனுக்கு ஒத்துப்பாடியதால் நகுலி எதுவும் கண்டிப்பாகக் கூறிவிடமுடியவில்லை. ஆழ்மனதுள் ஏதோ நடக்கப்போவதாக ஓர் உணர்வு.

''நமது கூட்டத்தினரை இரு சமூகங்களாகப்பிரித்துவிட வேண்டும். எண்ணிக்கை அதிகரித்துவிட்டதென முன்னர் எண்ணியதையே மீண்டும் எண்ணத்தலைப்பட்டாள். உணவுப்பங்கீட்டிற்காக உருவாக்கப்பட்ட இரண்டு அக்கிவிக் குண்டங்கள் பெரும் பிளவினை ஏற்படுத்தி வருவதைக் கண்டாள்.

''அசுரகுரு தவறு செய்துவிட்டானோ? இல்லை. அப்படி இருக்காது என் கட்டளையை ஏற்க கூட்டத்தினரிடம் தயக்கமிருப்பது, தெரிகிறது. திருசூலி சொல்வதையும் குவேனி சொல்வதையும் கேட்கிற ஆடவர் அதிகரித்து விட்டனர். என்னிலும் பார்க்க அவர்கள் அழகாயும் இளமையாயும் இருப்பது காரணமோ?'' என நகுலி எண்ணத்தலைப்பட்டாள். அதனால் தன்பெண்கள் மீது காரணமின்றி எரிந்து விழ ஆரம்பித்தாள். கஞ்சேனனின் அலட்சியம் அவளைப் பெரிதும் பாதித்தது. அவன் திருசூலியுடன் உறவு வைத்துக்கொண்டது. அவளால் பொறுக்க முடியவில்லை.

பௌர்ணமி நாள். கானகத்தின் ஒளித்தழுவலில் நிசப்தம் நிலவியபோது, நகுலியின் குடிசையில் அசம்பாவிதம் ஒன்று நிகழ்ந்தேறியது. கஞ்சேனன், நகுலி மீது தனக்கிருந்த வஞ்சினத்தை முடித்து விட்டு, திருசூலியுடன் அவளைப்பின்பற்றிய பெண்களையும் ஆடவரையும் அழைத்துக்கொண்டு வெளியேறி விட்டான். பலநாட்களாகத் திட்டமிடப்பட்டிருந்த இச்சதியை குவேனி அறியுமுதலே, கஞ்சேனன் நகுலியின் கழுத்தை அரிந்து விட்டு வெளியேறிச் சென்றான்.

அதிகாலை விழித்தெழுந்த போதுதான் நடந்துவிட்ட பயங்கரம் குவேனி குழுவினருக்குத் தெரிந்தது. குடிசையின் மண்தரையில் விரிக்கப்பட்ட தோல் படுக்கையில் அக்கூட்டத்தின் பெருந்தாய். இரத்தவெள்ளத்தில் சடலமாகக்கிடந்தாள்.

''தாயே, அவர்களைவிடக்கூடாது...'' எனப்புறப்பட்ட சமுகாவையும் பிறரையும் குவேனி ''வேண்டாம்'' எனத்தடுத்தாள். கண்கள் நீரைப்பெருக்கின. அக்கூட்டத்தைக் கொண்டு நடத்துவதற்கு நகுலி எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள். இவ்வளவு பேரையும் பட்டினியிலிருந்து காப்பதற்காக

எவ்வளவு இன்னல்களை அனுபவித்திருப்பாள்? பகைக்குழுக் களிடமிருந்து. தம் கூட்டத்தாரைப் பாதுகாக்க அவள் பட்ட துயரங்கள், களங்கள் எத்தனை? அனைத்தையும் ஒரு கணத்தில் மறந்து அவளை வாளிற்கு இரையாக்கி விட்டு ஓடிவிட்டார்கள்.

''அவர்கள் பூண்டோடு அழிக்கப்பட வேண்டியவர்கள்'' என்றாள் குவேனி: '' இப்போதல்ல, சமுகா. நம் பெருந்தாய்க்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. விலங்குகள் அவருடலைத் தின்பதற்குவிட்டுவிட்டு நாம் அவர்களைப்பின் தொடர்ந்து இப்போது செல்வதில் அர்த்தமில்லை. நமது பெருந் தாயின் ஆவி நம்மை வாழ்த்த நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டும்.''

நகுலியில் உடலைச் சுத்தி செய்து மான் தோற்படுக்கை யொன்றில் வளர்த்தினர். நகுலி பயன்படுத்திய மட்கலங்கள், ஆயுதங்கள், உணவு வகைகள் என்பன அவளைச் சுற்றி வைக் கப்பட்டன. கத்தி, ஈட்டிமுனை, அரிவாள், சங்கு மாலைகள் என்பனவற்றுடன் பல்வகை வாட்டிய இறைச்சித் துண்டங்களும் அவற்றில் இருந்தன.

''பெருந்தாயை அடக்கம் செய்ய ஈமத்தாழி ஒன்றினைச் செய்யுங்கள்'' எனக்குவேனி கட்டளையிட்டாள். ஆம். அவள் தான் இனி இக் கூட்டத்தின் பெருந்தாய்.

களிமண் கொண்டுவந்து ஓரிடத்தில் குவிக்கப்பட்டது. பக்குவமாகச் சலித்து கல் அகற்றப்பட்டது. பின்னர் நீரிட்டு குழைக்கப்பட்டது. பலர் பாதங்களினால் ஏறிமிதித்துப் பத மாக்கினர். சமுகா அதனைத் தொட்டுப் பிசைந்து பார்த்து மீண்டும் பதமாக மிதித்து குழைக்குமாறு சொன்னான்.

நண்பகல் பொழுது வரை களிமண் பிசையப்பட்டது.

அன்று பிற்பகலில் ஆளுயரப் பானையொன்று தயாராகி விட்டது. இரண்டு விரல் தடிப்பில், இருவர் கைகோர்த்துக் கட்டிப்பிடிக்கில் அடங்கும் அகலத்தில் ஈமத்தாழி அமைந்திருந் தது. அடிப்பாகம் ஒடுங்கியும்தாழியின் வெளிப்புறப்பு நிறப்

பட்டியாகவும் தாழியின் ஏனையபகுதிகள் செந்நிறமரியும் இருந்தன. அத்தாழியின் கழுத்துப்பக்கத்தில் சில கோடுகள் இடப்பட்டன. ஒருநாள் முழுவதும் வெயிலில் நன்கு காய விடப்பட்டது. மறுநாள் பெரு தெருப்பிட்டு அதில் அத்தாழி யைப் பக்குவமாகத் தூக்கி வைத்து எரித்தூச்சுட்டனர்.

ஆயிற்று. ஈமத்தாழி தயார். சமுகா அதன் மேற்புறத் தில் புறவிரலால் குட்டிப் பார்த்தான். ''டொங் டொங்'' எனச்சத்தம் எழுந்தது.

பெருந்தாயைத் தூக்கி அத்தாழியினுள் இறக்கினர். விறைத்துவிட்ட கால்கள் மடிய மறுத்தன. மடக்கி அதனுள் அழுத்தி இருந்தினர். அத்தாழியினுள் அவள் சடலத்தைச் சுற்றி முன்னர் பரப்பப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்டன. பல மட்கலங்களில் காட்டு விலங்குகளின் லத்திகள் நிரப்பட்டன.

மாலை கவியத்தொடங்கியவேளையில் அத்தாழியைத் தூக் இக் கொண்டு ஏனைய மட்கலங்களையும் எடுத்துக்கொண்டு மேற்குப்பக்கமாகப் பயணப்பட்டனர். வெட்டைவெளியான ஓரி டத்தில் இறக்கி வைத்துவிட்டு அன்றிரவு அவ்விடத்தில் காத் திருந்தனர். அக்கினி மூட்டப்பட்டது. அதனைச்சுற்றி அவர் கள் இழவிருந்தனர். மறுநாள் சூரியன் கிழக்கு வானில் எழுந் ததும், ஆழமாக வெட்டிய பெருங்குழியில் தாழியை இறக்கி வைத்தனர். தாழியின் வாய் மட்கலத்தால் மூடப்பட்டது. ஈமத்தாழியைச் சுற்றி காட்டுவிலங்குகளின் லத்திகள் வைக் கப்பட்டன. குவேனி முதல் பிடி மண்ணை அள்ளி இட்டாள்.

அப்பெருந்தாய் ஈமத்தாழியுள் அடக்கமானாள்.

இதயத்தைப் பிரிட்டுக்கொண்டு ஏதோ உணர்வு எழுந் தது. கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு குவேனி அழத் தொடங்கினாள். விக்கி விக்கி தன் இதயச் சுமையைக் குறைக்க அழுதாள்.



12

சமுத்திர நீர்ப்பரப்பினை ஆழ உழுதவாறு வந்த மரக்கலம் ஒன்று தென் திசை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதனைப் பின் தொடர்ந்து வேறிரு மரக்கலங்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒன்றன்பின் னொன்றாக சமுத்திரப்பரப்பில் மிதந்து வந்துகொண்டிருந்தன. வாடைக்காற்றின் தென் கிழ்த்திசைநோக்கிய வீச்சினால் மரக்கலத்தின் பாய்கள் தென் கிழ்ப்பக்கமாக உப்பி, அப்பாரிய மரக்கலங்களைச் சீராக முன் னோக்கி இழுத்துச்சென்றது.

லாலா நாட்டின் சிங்கபுரத் துறையிலிருந்து புறப்பட்டதி னிருந்து அக்கலங்கள் சமுத்திரப்பரப்பில் எவ்வித தடங்களு மின்றி, எவ்வித இலக்குகளுமின்றி தென்புறமாக விரைவது அக்கலங்களில் பயணப்பட்டிருக்கும் பயணிகளுக்கு உண்மையில் துயரத்தைத் தராமலில்லை. அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

சமுத்திரப்பரப்பில் முன்னணியில் செல்லும் மரக்கலத்தில் ஆஜானுபாகுவான எழுநூறு இளைஞர்கள் துயரத்துடன் பயணப்பட்டனர். அவர்களின் சிவந்த நிற மேனிகளும், நீலநிற விழிகளும் அவர்களை ஆரியர்கள் என அடையாளம் காட்டின.

ஆனால், அவர்களின் தலைமயிர் அரைப்பங்கு வழிக்கப்பட்டு, ஒரு பக்கத்தலையில் மட்டும் பொன்னிறமான மயிர்க்கற்றைகள் காற்றில் பறந்தன.

தலையின் உச்சி வகிட்டுக்கு வலப்பக்கம் மழுங்க வழிக்கப் பட்டிருந்தது. ஆரியர்களில் சுதந்திரம் இழந்த அடிமைகளுக்குத் தான் இப்படியான தண்டனை வழங்குவார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது?

இரண்டாவது மரக்கலத்தில் அழகிய பெண்கள் சோகமே உருவாகக் காணப்பட்டனர். லாலா அரசின் சிங்கபுரத் தலைநக ரில் செல்வச்செழிப்போடு வாழ்ந்த அப்பெண்கள், கணவன் மாரைத் தொடர்ந்து இம்மரக்கலத்தில் ஏற்றிப்பயணப்பட்டிருக் கிறார்கள். கரிய நிற அடிமைகள் மரக்கலத்தினைச் செலுத்த அந்த ஆரியகுலப்பெண்கள் விழிகளில் நீரோட அமர்ந்திருந்த னர்.

மூன்றாவது மரக்கலத்தில் சிறுவர்களும் சிறுமிகளாகப் பலர் நிறைந்திருந்தனர். அவர்கள் தம் பயணத்தின் துயரத்தை அறியவில்லை. அதனால் அவர்கள் மரக்கலத்தில் சிரிப்பும், கும் மாளமுமாக ஆர்ப்பாட்டத்தோடு காணப்பட்டனர். முதல் மரக்கலத்தில் தந்தையரும் இரண்டாம் மரக்கலத்தில் தாய்மா ரும் பயணப்பட, அவர்களின் குழந்தைகள் பிறிதொரு மரக் கலத்தில் தனிமைப்படுத்தப்பட்டுப் பயணப்படும் இந்நிலை ஏன் ஏற்பட்டது?

"என்னால் தான்..." என்றான் சிங்ஹல விஜயன். முத லாவது மரக்கலத்தில் பிரயாணம் செய்திருக்கும் இளைஞர்களில் தலைவன் போல அவன் காணப்பட்டான். லாலாநாட்டின் பட் டத்திற்குரிய இளவரசன், இப்படி சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் தன் தோழர்களுடன் ஆழ்கடலில் திசை தெரியாது பயணப்பட்டிருப்பதற்குரிய காரணம் அவர்களுக்குத் தெரியும். கம்பீரமான பருத்த சரீரம். முறுக்கேறிய உடல் வாகு. அவன் அசாதாரண துணிச்சலும் வீரமுமுடையவன் என நிரூபித்தன. அரையில் பஞ்சகச்சமாக வேட்டியை அணிந்திருந்தனர். அத னைச் சுற்றி ஒரு பீதாம்பரத்தினைக்கட்டியிருந்தனர். அவன் கழுத்தில் தங்க ஆரம் ஒன்று மணிகளுடன் தொங்கியது.

அவன் கவலையுடன் தன் தோழர்களைப் பார்த்தான். நான்கு நாட்களுக்கு முன் அவர்கள் அனைவரும் அரசவையில் விலங்குகளிடப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டனர். லாவா நாட்டின் மன்னன் சிங்குபாகு தன் தீர்ப்பை வழங்கினான்:

'' ...நாட்டின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் ஊறு விளைவித்த இந்தக் குற்றவாளிகள் எழுநூறு பேருக்கும், நாட்டின் நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டு பின்வரும் தீர்ப்பினை வழங்குகின்றேன். இந்த நாட்டின் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் போன்ற பல்வேறு தீய காரியங்களை இப்பாவிப் செய்தனர் என அரசவையில் நிருபணமாகியிருக்கின்றது. இந்த நாட்டின் சிம்மாசனத்தில் அமரவேண்டிய இளவரசன் விஜயன். இவர்களின் அச்செயல்களுக்குத் தலைமையேற்றான் என்பதையிட்டு மிகுந்த வேதனையும் வெட்கமுமடைகிறேன். படைக்கலப்பிரயோகத்தில் மிக்க திறனுடைய துணைத்தளபதிகள் அனுராதன், உபதீசன், உய்யினி, உருவெலா, விஜித்தா ஆகிய ஐவரும் இத்தீச்செயல்களுக்குத் துணைபோயினர், என்பதை அறியும்போது வேதனை ஏற்படுகின்றது. இவர்கள் அறுவருடன் ஏனைய அறுநூற்றி தொண்ணூற்றி நான்கு லாவா நாட்டு வீரர்கள் தமது தாய் நாட்டிற்கு இப்படியான அவக் காரியத்தினைச் செய்திருக்கிறார்கள். நாட்டிற்கு உதவாத எழுநூறு பேரையும் இன்றிலிருந்து இந்த நாட்டின் பிரசைகள் என்ற அந்தஸ்திலிருந்து நீக்குகின்றேன். அவர்கள் இந்த நாட்டின் சகல சுதந்திர உரிமைகளையும் இழக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக அவர்களின் தலைமயிரின் அரைப்பகுதி '' மிடி '' செய்யப்படும். அவர்கள் அனைவரையும் இந்த நாட்டிலிருந்து நாடு கடத்தவும் உத்தரவிடுகிறேன். ஒரு மரக்கலத்தில் இந்தக் குற்றவாளிகள் எழுநூறுபேரும் ஏற்றப்பட்டும். அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களும் உடுபுடவைகளும் உணவுப்பொருட்களும் வழங்குக. இன்னொரு மரக்கலத்தில் அவர்களின் மனைவியர் ஏற்றப்பட்டும். மூன்றாவது மரக்கலத்தில் அவர்களின் பிள்ளைகள் ஏற்றப்பட்டும். இம் மூன்று மரக்கலங்களும் தென்புறம் நோக்கிச் செல்ல வைக்கவும். அயரநாடுகளில் ஏதாவது ஒன்றில் இவர்கள் சென்று சேரட்டும். மரக்கலங்கள் நிலப்பிரதேசம் ஒன்றில் சென்றடையும் வரை அவர்கள் ஒருவரை

யொருவர் சந்திக்கக்கூடாது. இதுவே இப்பாவிகளுக்கு ஏற்ற தண்டனை .. ''

மன்னன் சிங்கபாகு தளர்ந்து போனான். பெற்ற பிள்ளைக்கு இப்படியான ஒரு தண்டனையை வழங்க நேர்ந்துவிட்டதே என அவன் துவண்டான். என்ன செய்வது? குற்றவாளிகள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். தாய் சிங்கசிவலி அப்படியே இருக்கையில் மயங்கிச் சரிந்தாள்.

''விஜய, நீ ஏதாவது கூற இருக்கிறதா?'' என தேவகுரு அவனைக் கேட்டார்.

அவன் அவரை ஏறிட்டுப்பார்த்தான்,

''ஆம், இருக்கிறது, காட்டில் குகையில் வாழ்ந்த சிங்கபாகு நாட்டிற்கு வந்து இப்பெரும் இராச்சியத்தை தாபித்துக் கொள்ள முடியுமென்றால், இந்த சிங்ஹல விஜயனால் தனக்கென ஒரு இராச்சியத்தை உருவாக்கிக்கொள்ள முடியாதா? முடியும், தேவகுருவே. எனக்கென ஒரு இராச்சியத்தை உருவாக்குவேன். இந்த சிங்கபுரம் போன்ற பெரிய தொரு தலைநகரத்தினை அமைத்துக்கொள்வேன். எனக்கென படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், மாலை, செங்கோல் என்பவற்றினை தேடிக்கொள்வேன். எனக்கென புதியதொரு மக்களினத்தை உருவாக்கிக்கொள்வேன். அதன் பின்னர் இந்த நாட்டிற்குத் திரும்பி வருவேன். மன்னனாகவல்ல. ஆக்கிரமிப்பாளனாக. இந்த லாலா நாட்டின் சிம்மாசனம் என்னுடையது. பெரும்படையுடன் வந்து இந்த நாட்டைக்கைப்பற்றி, என்னைக்குற்றவாளியாக்கிய அனைவரையும் தேசப்பிரதீஸ்டம் செய்து, இந்த மணிமுடிமன்னன் சிங்கபாகுவையும் அவனது ஆசைமகள் சுமித்தா உட்பட முப்பத்தொரு மக்களையும் விலங்கு பூட்டிச் சிறையில் இடுவேன். இவைதான் நான் சொல்லவிருப்பது... '' என்றான் விஜயன்.

மரக்கலங்கள் நீரில் விரைந்துகொண்டிருந்தன. மரக்கலங்களின் பக்கங்களில் அலைகள் வந்து மோதிச் சிதறின. அவர்கள் புறப்பட்டு நான்கு நாட்களாகிவிட்டன; இப்போது மீண்டும்

சூரியன் மேலைவாயில் சரியத்தொடங்கியிருந்தான். வானின் செக்கச் சிவந்த கோலத்தை விஜயன் ஏறிட்டுப்பார்த்தான். மேகங்கள் இரத்தச்சிவப்பாக அசைந்தன. வர்ணக்கோலங்களாக அவை மாறிமாறி வெவ்வேறு உருப்பெறுகின்றதைச் சற்று நேரம் பார்த்து நின்றான்.

" என்னால் தான்... " என்றான் சிங்ஹல விஜயன்: " உங்கள் எல்லாருக்கும் என்னால் தான் இந்தக் கஷ்டம்... "

" அப்படியில்லை, இளவரசே.. " என்றான் அனுராதன்.

" விதி என்ற ஒன்றில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது, இளவரசே. மாபெரும் இலக்கு ஒன்றினை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருப்பதாக எனக்குப்படுகின்றது. பெரிய மகோன்னதம் எங்களுக்காகக் காத்திருக்கிறது... " என்றபடி உய்யினி அவ்விடம் வந்தான்.

இளவரசே அரசவையில் நீங்கள் கூறிய இலட்சியத்தை நாங்கள் எங்கள் உயிர் கொடுத்தாவது நிறைவேற்றித் தருவோம்; என்ற உபதீசனை விஜயன் அன்புடன் பார்த்தான்.

மரக்கலங்கள் நகர்ந்தன. எங்கும் நீர்ப்பரப்பே விரிந்துகிடந்தது.

பத்தாம்நாள் இரவு கவியத்தொடங்கிய வேளையில் மரக்கலங்களின் பாய்கள் காற்றில் உந்தலின்றிச் சோர்ந்தன.

பயங்கர அமைதி நிலவியது.

அவர்கள் அச்சத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.



13

சமுத்திரப்பரப்பில் இருந்தாற்போல அமைதி நிலவியது. காற்று செயல் இழந்ததுபோல வீசாது ஒழிந்தது. கடலலைகள் தம் ஆர்ப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டு, அமைதியான நடாகத்தைப்போல மெல்லலை எழுப்பின. காற்றின் ஊதலால் முன்னோக்கி விம்மிய மரக்கலப்பாய்கள், திடீரென சோர்ந்து பாய் மரங்களுடன் தொங்கிச் சரிந்தன.

"பாய்களை இறக்கிக் கம்பங்களுடன் பிணையுங்கள்..." எனக் கட்டளையிட்டான் அனுராதன். மரக்கலங்களில் அடிக்கடி பயணம் செய்த அனுபவம் அவனுக்குண்டு. அவன் குரலில் சிறிதளவு கலக்கம் இருந்தது. முதல் மரக்கலத்தினைத் தொடர்ந்து வந்த இரு கலங்களிலும் பாய்கள் இறக்கப்பட்டுச் சுருட்டிக் கட்டப்படுவதை இவர்கள் கண்டார்கள்.

"கலத்திலுள்ள சிப்பங்களை வலிமையான கயிற்றினால் ஒன்றுடன் ஒன்று பிணைத்து வையுங்கள்..." என்று அனுராதன் தோழர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான்.

"அனுராதா, கடும் காற்று வீசப்போவது போலப்படுகின்றது." என்றான் ஆரிய விஜயன்.

மேலைவானில் சரிந்து கொண்டிருந்த சூரியனை மூடிக் கவிந்து கருமுகில்கள் படர்வதை அவன் கண்டான். கிழை வானில் திரண்ட இராட்சத மேகக்கூட்டம் ஒன்று கருகுமென வானில் அவர்கள் பக்கமாக விரைந்து வருவதைக் கண்டான்''

உய்யினி புரோகித புத்திரா, உன் கணிப்பு என்ன ?'' என்று புரோகிதன் மைந்தனான உய்யினியைக் கேட்டான்.

'' வருணன் எம்மீது கோபம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. மித்திரனை (சூரியன்) வருண மேகங்கள் மூடிக்கொள்கின்றன. கிழை அடிவானில் இடிகளின் கடவுளான இந்திரன் வருணனுக்குத் துணைசெய்வதாகத் தெரிகின்றது. ஆன்மாக்களின் தலைவனான பிரஜாபதி தான் நம்மைக் காக்க வேண்டும்... '' என்றான் உய்யினி.

வங்காளக்கடலில் தோற்றம் பெற்ற சூறாவளியொன்று பயங்கர இரச்சலுடன் அவர்களை நெருங்கி வருவதை அவர்கள் உணர்ந்தார்கள். சூறையின் பயங்கரத்தை அவர்கள் அறியாதவர்களல்லர். தம்மைக் கயிற்றினால் கம்பங்களுடன் பிணைத்துக்கொண்டனர். இரண்டாம் மூன்றாம் மரக்கலங்களிலிருந்தவர்கள் ஓலமிடுவது கேட்டது.

'' வருண பகவானே, மனமிரங்கு. பிரஜாபதி காப்பாற்று... '' என விஜயன் ஆகாயத்தை நோக்கிக் கரம் குவித்தான்.

''சிங்ஹல... '' என்றாள் விஜித்தா. வானத்தை நோக்கிக் கரம் குவித்த விஜயனுக்கு அவன் அழைப்புக் கேட்கவில்லை. விஜயனின் இன்னொரு சிறப்புப் பெயர் சிங்ஹல ஆகும். சிங்கபுரத்தின் இளவரசன் எனவும் சிங்பாகுவின் மைந்தன் எனவும் அது அர்த்தப்படுத்தப்பட்டது.

'' கிரகங்களின் நிலைகளை ஆராய்ந்தேன். ஆபத்து ஏற்பட இடமில்லை. கலக்கத்தை கைவிடுக. '' என்ற விஜித்தாவை விஜயன் திரும்பிப் பார்த்தான்.

'' விஜித்தா சோதிட புத்திரா, உன் வாக்கு நல்லதாகட்டும்... ''

அவன் சொல்லி வாய் மூடவில்லை. உர்ரென இரைந்த படி சூறைக்காற்று கடலைக் குடைந்தது. மத்தாகச் சமுத்திர நீரைக் கடைந்தது. அலைகள் பொங்கிப் பிரவகித்து மலை யென உயர்ந்தன. மரக்கலங்கள் அலையின் உச்சிக்குத் தாவு வதும் பின்னர் அதளபாதாள இறக்கத்தை நோக்கிச் சரிவதும் எழுவதுமாக நகர்ந்தன. கடலலைகள் நுரைத்துப் பாற் கடலெனப்பிரவகித்தன. பயங்கரச் சுறாக்களும் கடல்வாழ் உயிரினங்களும் கடல் மட்டத்திற்கு அள்ளுப்பட்டு ஆழ்கடலி னுள் அமிழ்ந்தன.

மரக்கலங்களில் இருந்தோர் பயத்தால் அரற்றினர். அழு தனர், வீரிட்டனர்.

மரக்கலங்கள் சரியும் போது கலத்தினுள் கடல்நீர் பாய்ந் தது. அவற்றுடன் கடல்மீன்கள், நட்சத்திரமீன்கள், சிறிய சுறாக்குட்டிகள் என்பன தளத்தில் விழுந்து நெளிந்தன. கண்களின் முன்னால் மலையென உயர்ந்த நீர்த்திணிவே தெரிந் தது. கரும் மலையுட்ன் மோதுவதுபோல அலை முகட்டிற்கு மரக்கலங்கள் ஏறி இறங்கின.

உய்யினி வருணனுக்குத் தோத்திரம் செய்தான்,

மரக்கலங்கள் தம்போக்கில் சமுத்திரத்தில் அள்ளுப்பட் டுச் சென்றன. திக்கிற்கொன்றாக அவை நிலை தளும்பிப் பிரிந்து சென்றதை எவரும் அவதானிக்கும் நிலையில் இல்லை. எல்லாரையும் மரணபயம் பற்றிக்கொண்டது,

இரவு முழுவதும் சூறைக்காற்று கடலைக் கடைந்தது. மரக்கலங்களைச் சுழற்றி தன் போக்கில் இழுத்துச்சென்றது. கரும் இருளில் என்ன நடக்கிறது என்பதை அறியாமலேயே அவர்கள் கப்பல்களில் தத்தழித்தனர். கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, கதறியபடி தத்தளித்தனர்.

கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கிய வேளையில் சூறைக் காற்றின் உக்கிரம் சற்றுக்குறைந்தது. இரவிரவாகக் கொந் தழித்த கடல் எதுவும் நடவாதது போல அமைதியாகத்

தவழ்ந்தது. வானம் வெளுத்துச் சிரித்தது. உக்கிரமாகச் சுழன்றடித்த காற்று, சீராக வீசத்தொடங்கியது.

ஆரிய விஜயன் தன்னைச்சுற்றிலும் பார்த்த போதுதான், தன் மரக்கலம் மட்டும் ஓரிடத்தில் மிதப்பதையும் ஏனைய இரு மரக்கலங்களும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் தென் படாமையையும் கண்டான். அடிவயிற்றில் கூடாரிட்ட துயரத்தின் உச்சத்தில், ''விஜித்தா'' என அலறினான். அவனது தோழர்களும் நிகழ்ந்து போன அவலத்தை உணர்ந்தனர். அவர்களது மனைவியர் பிள்ளைகள் ஆகியோர் வந்த மரக்கலங்கள் இரண்டும் எங்கே சென்றன?

''அவை கவிழ்வதற்கு வாய்ப்பில்லை, இளவரசே. லங்கா நாட்டுத் தச்சர்கள் மிகத்திறமைசாலிகள். கடலில் எத்தக் காற்றுக்கும் ஈடு கொடுத்து மிதக்கக் கூடிய மரக்கலங்களையே கட்டிப்பழகியவர்கள், அவை கடலினுள் அமிழ்ந்து போய்விட வழியில்லை. எங்காவது பிரிந்து சென்றிருக்கும், எப்படியாவது வழியில் காண்போம்..'' என்றான் அனுராதன்.

பாய்மரத்துடன் பிணைக்கப்பட்ட பாய்கள் அவிழ்த்து உயர்த்தப்பட்டன. காற்று பாய்களை உந்த அவை புடைத்து மரக்கலத்தை முன்னோக்கி இழுத்துச்செல்லத் தொடங்கின. அக்கலத்தில் பயணம் செய்தவர்கள் சோகமே உருவாக நின்றிருந்தனர்.

தென் புறம் நோக்கி அம்மரக்கலம் தன் நீண்ட பயணத்தைத் தொடர்ந்தது.



14

ஒரு பகலும் ஓரிரவும் கழிந்து மீண்டும் புதியதொரு அதிகாலை புலர்ந்தது. எங்காவது நிலப்பரப்புத் தென்படுமா என விஜயனும் தோழர்களும் ஆவலுடன் திக்கிற்கொருவராகப் பார்த்தனர். கடற்பறவைகள் எதுவும் கண்ணில் படவில்லை. நிலப்பரப்பு இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் அவர்களுக்குத் தென்படவில்லை. பலநாட்களாக நீர்ப்பரப்பில் இருப்பது அலுப்பினைத்தந்தது. மண்தரையில் கால்களைப் பதிக்க அவர்கள் ஆவலாக இருந்தனர்.

எங்காவது அவர்களைவிட்டுப்பிரிந்த மரக்கலங்கள் தென்படுகின்றனவா எனவும் அவர்கள் ஆழ்கடலில் விரிந்த பரப்பினை ஊடுருவி நோக்கினர்.

"பாரதத்துக்குத் தெற்கே ஆயிரக்கணக்கான தீவுகள் இருக்கின்றனவாம். அவற்றில் எல்லாம் அசுரர்கள் வாழ்ந்து வருகின்றனராம். மந்திர மாயாவித்தைகள் கைவரப்பெற்றவர்களாம்." என்றான் விஜித்தா.

"நமக்கு முதல் இந்நெடுங்கடல் பரப்பில் வேறு ஆரியர்கள் பயணப்பட்டிருப்பார்களா?" என உய்யினி கேட்டான்.

"ஏன் இருக்காது... பலர் கடல் கடந்து சென்றிருக்கிறார்கள். சிலவேளைகளில் நாம் சென்றடைகின்ற நிலத்தில் நம் முன் இங்கு வந்த ஆரியர்களே இருக்கலாம். கௌரவர், பாஞ்சாலர், கோசலர், வீதேகர், விதர்ப்பர் எனப் பல ஆரிய குலங்கள் பாரதத்தில் உள்ளன. அவர்கள் உள்ளூர்மக்களுடன் குறிப்பாகப் பெண்களுடன் தொடர்பு கொண்டு புதிய ஆரிய பரம்பரைகளையே தமது நாடுகளில் உருவாக்கியிருக்கிறார்கள். நாம் ஒரு நாட்டின் மீது படையெடுக்கில் அந்நாட்டிலுள்ள ஆண்களை அவர்கள் பெரியவர்களாயினும் சிறியவர்களாயினும் கொன்றுவிடுவார்கள். தந்தை வழிதான் ஆரிய குலம் தூய்மையானது, விஜித்தா." என்றான் சிங்ஹல விஜயன்.

"உங்கள் குலம் தாய் வழிதான் தூய்மையானது, இளவரசே..." என்று கூற எண்ணிய அனுராதன் வார்த்தைகளை அடக்கிக்கொண்டான். அப்படி அவன் சொல்வது ஆரிய விஜயனின் மனதைப் புண்படுத்திவிடலாம். வார்த்தைகளால் நட்பினைப் புண்படுத்தக்கூடாது.

"பாஞ்சாலர் போல, கௌரவர் போல, கோசலர் போல நாங்களும் புதியதொரு ஆரிய பரம்பரையை நாம் இறங்கும் நாட்டில் உருவாக்கிக்கொள்ள நேரிடும் என நினைக்கிறேன், அனுராதா. நம்முடன் வந்த பெண்கள், பிள்ளைகள் அனைவரும் வழிகூறிவிட்டனர். ஆகவே, நாம் தாபிக்கவிருக்கும் இராச்சியத்தில் எம்மால் உருவர்கும் ஆரிய இனம், புதியது..."

"அப்படியொரு புதியதொரு ஆரிய குலம் தோன்றில் அதற்கு எப்படிப்பெயரிடலாம்...?" என உய்யினி கேட்டாள்.

"சிங்ஹல..." என்றான் பட்டென விஜித்தா.

"சிங்ஹல... சிங்ஹல..." என இருதடவைகள் விஜயன் தனக்குள் அப்பெயரைச் சொல்லிக்கொண்டான்.

கடற்காற்றின் வீசலில் மரக்கலங்கள் தவழ்ந்தன.

ஆரிய விஜயன் மரக்கலத்தின் மேற்றளத்தில் நின்றிருந்

தான். மனதில் பல்வேறு உணர்வுகள் தோன்றி அலைக்கழித்தன. சிங்கபுரத்தில் கப்பீரமும் அவன் மீது பாசத்தைச் சொரிந்த தாயும் அவன் நினைவில் வந்தனர். ஏனோ அவனுக்கு அவன் தந்தை சிங்கபாகுவைப்பிடிக்கவில்லை. அவரை அவனால் மன்னிக்கவே முடியவில்லை.

''விஜயா, ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய்? மக்களை ஏன் வருத்துகிறாய்? நீ திருந்தவே மாட்டாயா?'' என சிங்கபாகு ஒருநாள் அவனைக் கேட்டான். அவன் தந்தையின் மீது செலுத்திய பார்வையில் அன்போ மரியாதையோ இருக்கவில்லை. அலட்சியமாகவும் ஆணித்தரமாகவும் சொன்னான்:

''என்னைக்கொன்று விடுங்கள்.''

''விஜயா... மகனே...''

''நீங்கள் உங்கள் தந்தையைக் கொன்றமாதிரி என்னையும் கொன்றுவிடுங்கள்...'' என்றான் நிர்தாட்சண்யமாக. அவன் வார்த்தைகள் பாய்ந்த வேகத்தில் சிங்கபாகு தளர்ந்து போனான்.

''நான் பட்ட துயரங்களை நீ எப்படியுணர்வாய், விஜயா? குகையொன்றில் பதினாறு வருடங்கள் நானும் உன் அம்மாவும் எங்கள் தாயும் அடைக்கப்பட்டிருந்தோம். உன் தாத்தா எங்கள் மீது கொஞ்சமும் இரக்கம் காட்டவில்லை. வெளியில் செல்லும்போது குகைவாயிலை அடைத்துவிட்டுச் செல்வார். திரும்பி வரும்போது திறந்து வருவார். வெளிக்காற்றினை நாங்கள் சுவாசித்ததில்லை. கதிரவனின் ஒளியை நாங்கள் பூரணமாக ஸ்பரிசித்ததில்லை. அந்தக் கொடுமையைப் பொறுத்துக்கொண்டோம். ஒவ்வொருநாளும் அவர் எங்கள் தாயையும் எங்களையும் அடித்துச் செய்த சித்திரவதைகளை எவ்வளவு காலந்தான் பொறுத்துக்கொள்ள முடியும். ஒரு நாள் எம் தாயையும் அழைத்துக்கொண்டு ஓடிவந்தேன்...''

அந்தத் துயரக்கதையை அவன் அறிவான்.

...வங்கநாட்டு இளவரசி ஒருத்தி, அரண்மனைவாழ்வில்

அட்க்குமுறை பிடிக்காமல் அரண்மனையைவிட்டு வெளியேறினாள். மகதநாட்டிற்குச் செல்கின்ற ஒரு கூட்டத்தினருடன் சேர்ந்து செல்லும் போது, லாலா நாட்டின் எல்லையில் சிங்கம் ஒன்றினால் அந்தக் கூட்டத்தினர் தாக்கப்பட்டனர். சிங்கம் இளவரசியைச் சிறையெடுத்துச்சென்றது. உண்மையில் சிங்கம் போன்ற மூர்க்கமும் பயங்கரமும் மிக்க காட்டுமனிதன் அவன். அடர்ந்த தாடி தலைமயிர்க்கற்றைகளுடன் அவன் பயங்கரவடிவில் காட்சிதந்தான். வங்கநாட்டு இளவரசிக்கும் அந்தக்காட்டு மனிதனுக்கும் ஏற்பட்ட உறவால் சிங்கபாகு என்ற மகனும் சிங்கசிவிலி என்ற மகளும் இரட்டைப்பிள்ளைகளாகப்பிறந்தனர்.....

''உன் தாத்தா எங்களைத் துரத்தி வந்தார். அவரால் எங்களைவிட்டுப் பிரிந்திருக்க முடியவில்லையோ? வங்காளநாட்டின் எல்லைப்புறங்களில் உள்ள மக்களைத் தாக்கினார். தொல்லை கொடுத்தார். எங்களைத் தேடியலைந்தார். வேறு வழியில்லை. அவரை நேரில் சந்தித்தேன். என் அம்புக்கு இரையாக்கினேன்... சிங்கசிவிலியை மணந்து கொண்டேன். லாலா நாட்டை விட்டு வெளியேறி சிங்கபுரத்தை தாபித்துக்கொண்டேன்...''

விஜயனின் சிந்தனையில் தந்தை சிங்கபாகுவின் இரக்கமும் அதேவேளை பிடிவாதமுமான முகம் தோன்றியது.

''உங்களைத் தேசப்பிரதிஸ்டம் செய்கிறேன்...''

செய்தாகிவிட்டது. மனைவி மக்கள் சமுத்திரப்பரப்பில் அவர்களைவிட்டுப்பிரியக் காரணமாகிவிட்டது. எல்லையற்ற நெடுஞ்சமுத்திரத்தில் அவர்கள் அலைய வேண்டியதாகிவிட்டது.

இருந்தாற்போல ஒரு எண்ணம் கூர்மையான ஈட்டிபோல அவன் இதயத்தைத் தாக்கியது.

அவன் ஆரியனா? தந்தை வழிதான் குலத்தினை நிர்ணயிக்குமாயின் அவன் ஆரியனா? அவன் தந்தையைப் பெற்றவன் அசுர குலத்தவன். தாயைப்பெற்றவள் வங்கநாட்டின் இளவரசி. ஆரியப்பெண். அவன் அவர்களின் வழிவந்தவன். அசுரகுல ஆணுக்கும் ஆரியகுலப்பெண்ணுக்கும் பிறந்தவர்கள். தூய ஆரியர்களா?

சிங்கத்தின் வழித்தோன்றல்கள். சிங்கபாகு .. சிங்ஹல... விஜயன்.

இதனைத்தான் விஜித்தா சுட்டிக்காட்டினானோ?

அவன் உடல் நிறம்... பொன்னிறக்கேசம்... நீல விழிகள்..

இருக்கலாம். அவை அவன் அரண்மனையில் இருக்கின்ற ஆரியகுலத்தவர்போன்று அவ்வளவு பிரகாசமானவையல்ல. பொன்னிறக்கேசத்தில் சற்றுக்கருமை படர்ந்திருக்கின்றது. சுத்த மான நீல விழிகளல்ல. சற்று கரும் நீல விழிகள். உடலின் சிவப்பு நிறத்திலும் சற்று மங்கல் இருக்கிறது.

இரவு படர்ந்து கவிந்தது.

அதிகாலை பிறந்தபோது. தென் மேற்குப் பக்கத்தில் வெகுதூரத்தில் பறவைகள் வானில் சஞ்சரிப்பது தெரிந்தது. எல்லாரும் ஆரவாரித்தனர்.

ஆம். நிலப்பரப்புத் தெரிந்தது. தாமிரபர்ணிக்கடற்கரை தெரிந்தது.



15

கடலலைகள் முன்பின்னான தாலாட்டிற்கு ஈடு கொடுத்த படி அச்சிறிய தோணி ஆடி அசைந்து நகர்ந்தது. அதில் ஐவர் பயத்துடன் தோணியின் பக்கங்களைப் பற்றியவாறு அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் தாமிரபர்ணிப்பிரதேசத்தில் அசுரகுரு தாரதத்தன் ஆவான். தோணியை இருவர் வலித்து ஓட்டிக்கொண்டிருந்தனர். அது மெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தது.

தாரதத்தனுக்கு இதுவே முதல் கடல் பயணம். மனதில் சற்று அச்சமும் புதிய அனுபவத்தின் காரணமாக மகிழ்வும் ஆவலும் இருந்தன. மகாவில்லாச்சியில், நாகமல்லனிடமிருந்து விடைபெற்று, கதம்பநதிக்கரையோரமாக நடந்து, இரு பகல்கள் கழிந்த வேளையில் மகாதீர்த்தத்தை வந்தடைந்தான். முன்னர் அவன் பார்த்ததிலும் பார்க்க மாந்தைத் துறையும் மகாதீர்த்தப்பட்டினமும் அவ்வளவு மாறியதாகத் தெரியவில்லை. மரக்கலங்கள் நிறைந்த அதே கலகலப்பு துறையிலிருந்தது.

மகாதீர்த்தத்தை அடைவதற்கு முன், கதம்பநதி இரு கரைகளாகப் பிரிந்து கடலை அடைகின்றது. ஒரு கிளையில் மாந்தைத்துறையும் மற்றைய கிளை சங்கமிக்கும் இடத்தில்

அவன் முன்னர் தரிசித்த பெரியகோயிலும் இருந்தன. அந்த இரண்டாம் கிளையில், கடலிலிருந்து இரு யோசனைகள் தூரத் திற்கு முன், ஆயிரக்கணக்கான மக்கள் பொங்கிப்பிரவகித்து வரும் கதம்பநதிக்குக் குறுக்கே பெரியதொரு மண் அணையை அமைத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அவனை வியப்பு ஆட் கொண்டது.

வெகுநேரம் அவ்விடத்தில் தரித்து நின்றான்.

'' என்ன செய்கிறீர்கள்? '' என்று ஒருவனைக் கேட்டான்.

அவன் தாரதத்தனை ஏளனமாகப் பார்த்தான்.

'' தெரியவில்லை. கட்டுக்கரை செய்கிறோம். ''

'' ஏன்... ''

'' கட்டுக்கரை ஏன் செய்வார்கள்? குளம் கட்டத்தான். குளம் ஏன் என்றும் கேட்பாய். குளத்தில் நீரைத் தேக்கி, நெல் வயலிற்றப் பாய்ச்ச. நெல் வயல் ஏன் என்பாய். தானியம் செய்ய... புரிகிறதா? சுத்த காட்டுமனிதனாக இருக்கிறாயே? எங்கிருந்து வருகிறாய்? '' என அம்மனிதன் கேட்டான்.

மரியாதை தெரியாத நாகனாக இவன் இருக்கிறானே என தாரதத்தன் எண்ணிக்கொண்டான்.

'' தெற்கிலிருந்து வருகிறேன், ஐயா. இராச்சதக்குளமாக இருக்கிறதே? '' என்றான் தாரதத்தன்.

அவன் வார்த்தைகள் அம்மனிதனைச் சற்று உதைத்தன போலப் பட்டது.

'' கால் நடையாகவா வருகிறீர்? '' என சற்று மரியாதை யாக வினவினான்.

'' ஆம்... நீங்கள் நதிக்குக் குறுக்கே இப்படி அணையைக் கட்டி இயற்கையை மாற்றுவது நல்லதாக எனக்குப்படவில்லை.

நதி மனிதருக்கும் விலங்குகளுக்கும் விடாய் தீர்ப்பது. அதனை நாம் ஓரிடத்தில் மறித்துத் தடுக்கக்கூடாது.''

''உமது பேச்சு எனக்குப்புரியவில்லை. தானியச்செய்கைக்கு மழைநீர் போதவில்லை. குளத்தில் நதி நீரைத் தேக்கித் தேவையான போது பாய்ச்சுவதில் என்ன தவறு...''

''உணவு இயற்கையாகவே கிடைக்கிறது. அவற்றினைத் தேடிப்பெற்றுக் கொள்ளலாம். அதைவிட்டு விட்டு...''

''தம்பி, மகாதிர்த்தத்தில் வாழ்பவர்கள் என்ன பத்துப் பதினைந்து பேரா, உணவைக்காட்டில் தேடிப் பெற... ஆயிரக் கணக்கானவர்கள். உற்பத்தி செய்யத்தான் வேண்டும். உங்கள் மாதிரி மிருகங்களைத் தேடி நாங்கள் காடுகளில் அலைவ தில்லை. அவற்றினை வீடுகளில் வளர்க்கிறோம். தேவைக்குப் பயன்படுத்துகிறோம். தானியங்களையும் காய்கறிகளையும் தோட்டங்களில் உற்பத்தி செய்கிறோம். மேலதிகத்தினை வர்த் தகம் செய்கிறோம். நம்மிடம் இல்லாதவற்றினைப் பிறதேசங்க ளிலிருந்து வாங்கிக்கொள்கிறோம்.''

தாரதத்தன் அதன் பின் எதுவும் பேசவில்லை. இவர்கள் இயற்கையை மாற்றி அமைக்கப்பார்க்கிறார்கள் என எண்ணிக் கொண்டான். நதி கடலோடு கலப்பது தான் நியதி. இவர்கள் அதன் போக்கினை மாற்றப்பார்க்கிறார்கள். இந்த நாகர்க ளுக்கு என்ன வந்தது? தம்மை நாகரிகமானவர்கள் என்று கூறிக்கொண்டு இப்படியான தகாத வேலைகளையெல்லாம் செய்கிறார்களே?

எதுவும் அவனுக்குப்புரியவில்லை.

தோணியிலிருந்து பார்க்கும்போது கடற்பரப்பில் பல தீவு கள் காணப்பட்டன. அவற்றினைத் தவிர்த்து நேரெதிரே தெரிந்த ஒரு தீவினை நோக்கி அத்தோணி முன்னேறியது. தோணியை வலித்தவர்கள் மிகுந்த சிரமப்படுவதாகத் தாரதத் தனுக்குப்பட்டது.

''நான் கொஞ்சம் உதவவா?'' எனக்கேட்டான்.

''வேண்டாம், ஐயா. உங்களுக்கு வலிக்கத் தெரியாது. தோணியைக் கவிழ்த்து விடுவீர்கள்...''

அத்தோணியில் இருந்தவர்களில் தாரதத்தன் மட்டும் வித்தியாசமானவனாக இருந்தான். மற்றவர்கள் பட்டுப்பீதாம்பரங்கள் உடுத்தியிருந்தனர். காதுகளில் கடுக்கள் அணிந்திருந்தனர். தலைமயிரை வாரிக் கொண்டையாகக் கட்டியிருந்தனர். தோளில் உத்தரியம் போட்டிருந்தனர். மீசைகள் முறுக்கிவிடப் பட்டிருந்தன. வசதியான நாகர்கள் போலும். உழைப்பின்றி ஓரிடத்தில் இருந்து உண்டதால் தொந்தி விழுந்திருந்தது. உடலில் தேவையில்லாதவிடங்களில் சதை வைத்திருந்தது.

தாரதத்தனின் வலுவான உடல் அவனை அவர்களிலிருந்து வேறுபடுத்தியது.

அடிவயிறு ஒடுங்கி, மார்புகள் விரிந்து மதமதத்த புஜங்களுடன் அவன் அமர்ந்திருந்தான்.

''அதுதான் நாகதீவு...'' என்றான் தோணிக்காரன்.

தூரத்தில் கடற்கரை தெரிந்தது. தோணி நெருங்க நெருங்க இறங்கு துறையில் மனித நடமாட்டம் தெரிந்தது.

''இங்குள்ள மக்கள் ஆதியில் சைவர்கள். கௌதமபுத்தர் இங்கு வந்ததன் பின்னர், நாகதீவின் மன்னன் மகோதரன் பௌத்தத்தை தழுவிக்கொண்டான். அதனால் மக்களில் ஒரு சிறு பகுதியினர் பௌத்தர்களாகிவிட்டனர்.'' என்றார் தோணியில் இருந்த ஒருவர்.

தாரதத்தன் அதைப்பற்றி முன்னர் கேள்விப்பட்டிருந்தான். பாரதத்தில் புதியதொரு மதம் பரவிவருவதும் அதனைக் கௌதம புத்தர் என்பவர் பரப்பி வருவதும் அவன் அறிந்தவிடயங்கள் தாம். அவர் ஒரு தடவை மகியங்கணைக்கு வந்து அங்குள்ள

இயக்கர்களைப் பௌத்தர்களாக்க முயன்றார். இடி, மின்னல் புயல், மழையை ஏற்படுத்தி இயக்கர்களைப் பயமுறுத்தி தன் சக்தியைக் காட்டி மதம் மாற்ற முயன்றார் என, அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இரண்டாம் தடவையாக நாகதீவிற்கு வந்து, நாகதீவின் மன்னன் மகோதரநாகனுக்கும் அவன் மருமகன் குலோதரநாகனுக்குக் இடையிலான, சிம்மாசனம் ஒன்று பற்றிய வழக்கினை அவர் தீர்த்து வைத்திருக்கிறார். கல்யாணிப்பிரதேசத்தை ஆளும் மணிவக்கியா நாகமன்னனின் வேண்டுகோளின்படி, கலியாணிக்கும் ஒரு தடவை வந்திருக்கிறார். இம்மூன்றிடங்களிலும் பலர் பௌத்தமதத்தைதழுவினர்.

இலங்காபுரியில் முதன்முதல் பௌத்தத்தைத்தழுவியவர்கள் திராவிடஇனத்தவர்கள். இயக்கர்களும் நாகர்களும் தாம்.

" நாகதிபத்தில் இன்று மீண்டும் மதம் மாறிய நாகர்கள் சைவத்திற்குத் திரும்பத்தொடங்கிவிட்டனர்... " என்றார் தோணியில் இருந்த ஒருவர்.

இவ்வளவும் விஜயன் இலங்காபுரிக்கு வருவதற்கு முன்னரே நிகழ்ந்துவிட்டன.

இறங்குதுறையுடன் தோணியை அணைத்தான், தோணிக் காரன்.

தாரதத்தன் நிலத்தில் குதித்தான்.



16

நமது கதை நிகழ்கின்ற காலத்தில் இலங்கைத்தீவின் தென்பாகத்தை தாமிரபர்ணி என்றும் வடபெரும்பாகத்தை நாகதீபம் என்றும் வழங்கினர். பெரும்பாகத் தீவில் இயக்கர்களும் வடபாகத்தில் நாகர்களும் வாழ்ந்து வந்தனர். தென்பாகத் தீவில் இயக்கர்களும் வடபாகத்தீவில் நாகர்களும் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக தாமிரபர்ணியின் மேற்கு, கிழக்கு பகுதிகளிலும் உட்பகுதிகளிலும் இயக்கர்கள் வாழ்ந்தனர். தெதுறு ஓயாவிலிருந்து மல்வத்து ஓயாவெனப்படும் கதம்பநதி வரையிலான பகுதி தாமிரபர்ணி எனப்பட்டது. இயக்க குலத்தவரின் முக்கிய பிரதேசமாக இது விளங்கியது. இதனைவிட லங்காவின் ஏனைய பகுதிகளிலும் குறிப்பாக திரிகூடம் (திருகோணமலை), இலங்காபுரி (திருகோணமலை), அரித்தகிரி (மிகுந்தலை), யக்குரகலை (சிகிரியா), லக்கல, நிகும்பிலா வனம், துமரக்கம், விந்தனை, சிறிஸ்தவத்து முதலான பகுதிகளில் ஆதி இயக்க மக்களின் குடியிருப்புகள் காணப்பட்டன. இவர்கள் வேட்டையாடுபவர்களாகவும் காய்கனிதேடுபவர்களாகவும் வாழ்ந்தனர்.

நாகதீபம் எனப்படும் யாழ்ப்பாணக்குடாநாடு, அயற்தீவுகள், வன்னிப்பிரதேசம் அடங்கிய பகுதிகளில் நாகரிகத்தில்

முன்னேறிய நாகர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இயக்கர் போன்று திராவிடமக்களேயாயினும் சமூக அமைப்பில் வேறு பட்டவர்கள். எனு எனும் ஆதித்திராவிட மொழியையே இரு சாராரும் பேசினர். நாகதீவு (நயினாதீவு,) நாகர்கோயில், நாகபடுவான், குருந்தன்குளம், மகாதீர்த்தம் (மாதோட்டம்), மகாவில்லாச்சி என்பன நாகதீபத்திலிருந்த நாகர்களின் குடியி ருப்புகளாகும். மேற்குக்கரையோரத்தில் களனிகங்கைக்கரையில் கல்யாணி என்பது நாகர்களின் பிரதான குடியேற்றமாக இருந்த தது. நாகபொக்குன, நாகபவத, கிழக்குக்கரையில் மண்டூர் நாகன்சாலை, நளிகிரி, உன்னரசிகிரி என்பன நாக மக்களின் சிறப்பான வாழிடங்களாக விளங்கின.

நாகதீபத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கியிருந்த யாழ்ப் பாணக்குடாநாடு மூன்று பெருந்தீவுகளாக வடமராட்சி (தொண்டைமானாறு) கடனீரேரி, நாவற்குழிகடனீரேரி, என்பவற்றினால் பிரிக்கப்பட்டிருந்தது. வடமராட்சி எனப்படும் இன்றைய பிரதேசம் அன்று மகிஷ தீவு எனவும் அழைக்கப் பட்டது. வலிகாமம் எனப்படும் இன்றையபகுதி நாவலந்தீவு என்றும் தென்மராட்சி எனப்படும் இன்றைய பகுதி மணற்றி என்றும் அழைக்கப்பட்டன.

விஜயன் வருவதற்கு முன்னர் இயக்கர்களும் நாகர்களும் தமக்கென ஒரு தனிக்கலாச்சாரத்தைக் கொண்டவர்களாக இந் நிலத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் ஆதித் திராவிடர்கள். அசோகனால் பௌத்தமதம் இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்பே நாகர்களிலும் இயக்கர்களிலும் பலர் அம்மதத்தைத் தழுவியிருந்துள்ளனர்.

நாகர்கோயிலின் பரந்த மணல்வெளி தாரதத்தனுக்கு வியப் பினைத் தந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் மணல் பரப்பு முடியுமிடத்தில் அந்தக்கிராமத்தில் ஆரப்பானது. நக ரப்பண்புமில்லாத கிராமப்பண்புமில்லாத ஒரு பிரதேசம் அது வாகும். இருபது சிறிய கிராமங்கள் சேர்ந்து நாகர்கோயில் குடியிருப்பு காணப்பட்டது. மகிஷதீவின் ஒரு பகுதியாக அது விளங்கியது.

நாகர்கோயிலின் கடற்கரையில் காலைவேளையில் நின்று

சூரியனி உதிக்கும் காட்சியினை பார்ப்பது ஓர் அற்புதமான அனுபவம். சமுத்திரத்தின் விரிந்த நீர்ப்பரப்புக்கு அப்பால் கிழை அடிவானத்தில் ஜெகத்ஜோதியாக ஆதவன் எழுவதை அவன் தரிசித்தான்.

பனை மரக்கூடல்களும் வடலிகளும் ஆங்காங்கு காணப் பட்டன. கடற்கரையோரப்பிரதேசத்தில் ஏராளமான நாவல் மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. நாகர்கோயிலின் சத்திரம் ஒன்றில் அவன் தங்கியிருந்தான். அங்கு விருந்தோம்பலுக்குக் குறைவில்லை.

மகாதிர்த்தத்தில் கிடைத்த உணவு வகைகளுக்கும் இங்கு கிடைக்கின்ற உணவு வகைகளுக்கும் வித்தியாசம். காலை பனாட்டோடு பழஞ்சோற்றுத்தண்ணீர் தந்தார்கள். மதியம் குத்திய நெல்லரிசிச்சோறும் மீனும் இரு காய்கறிகளும் தந்தனர். இரவு ஒடியல் பிட்டு வழங்கினர். பனையிலிருந்து கிடைத்த கருப்பட்டியுடன் ஒருநாள் பனம்பலகாரம் தந்தனர். அவன் அவற்றினைச் சுவைத்து உண்டான்.

அச்சத்திரக்காரன் உண்மையில் தர்மசிந்தையுள்ளவன்தான். சத்திரத்தைநாடி வந்தவர்களை முகம் மலர்ந்து வரவேற்று உபசரித்தான். கரியதிருமேனியும் கனத்த உருவமும் தடித்த மீசையும் அவனைப்பார்த்ததும் அச்சம் கொள்ள வைத்தாலும் அவன் மிகுந்த கோழையாகவிருந்தான்.

அன்று இரவு தாரதத்தன் சத்திரத்தின் வெளித் திண்ணையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த போது அச்சம்பவம் நிகழ்ந்தது. பனங்கள்ளினை நன்கு மாந்திய நால்வர், சத்திரத்தினுள் நள்ளிரவில் நுழைந்தனர். சத்திரக்காரனையும் அவன் மனைவியையும் தட்டியெழுப்பி அவர்கள் உண்பதற்கு உணவு தயாரிக்கும் படி கேட்டனர்.

"இந்த நள்ளிரவில் எதைத்தயாரிப்பேன் ஐயா." எனச் சத்திரக்காரன் கெஞ்சியும் பயனில்லை. வந்தவர்களில் முரடன் போலக்காணப்பட்டவன் அவனை ஓங்கியறைந்தான்.

"அவரை ஒன்றும் செய்யாதீர்..." என்று அலறியபடி

குறுக்கே ஓடிவந்த அவன் மனைவியின் தலைமயிரைப் பற்றி கன்னத்தில் அறைந்து தூர வீசிவிட்டான் ஒருவன். அவள் அலமலக்க விழுந்து மண்டையில் இரத்தம் வழிய எழுந்து நின்றதைக் கண்டதும் அவர்கள் நால்வரும் பெருங்காரியம் ஒன்றினைச் செய்துவிட்டது போன்று பெரிதாகச் சிரித்தனர். சத்திரக்காரன் எதுவும் செய்ய முடியாது பயந்து நடுங்கிய படி நின்றிருந்தான்.

"போடா..." என சத்திரக்காரனைத் தட்டிவிட்டு, அவன் மனைவியை ஒருவன் நெருங்குவதைத் தாரதத்தன் கண்டான். அதற்குப்பின்னரும் ஒரு பார்வையாளனாக இருக்க அவனால் முடியவில்லை. அன்புடன் அன்னமிட்ட அம்மாது அவலத்தில் தவிக்கும்போது, எப்படிப்பார்த்திருப்பான். படுக்கையைவிட்டு விருட்டென எழுந்தான்.

"அவர்களை ஒன்றும் செய்யாதிர்கள்..." என்றான் தாரதத்தன்.

கம்பீரமாக எழுந்த குரல் அவர்களை அவனை நோக்கிப் பார்க்க வைத்தது. தாரதத்தனின் மலைபோன்ற ஆஜானுபாகுவான உருவம் அவர்களுக்குச் சிறிது கலக்கத்தைத் தந்தாலும் பனங்கள்ளின் பிடியில் சிக்கியிருந்த அவர்களால் அவன் பலத்தைக் கிரகிக்க முடியவில்லை.

"தம்பி, இதில் தலையிடாதே. இவர்கள் நாகர்கோயில் கிராமத்தலைவரின் மைத்துனர்கள். அவர்கள் வாய்த்தைக்கு இக்கிராமத்தில் எதிர்வார்தையில்லை..." என்றபடி சத்திரக்காரன் ஓடிவந்தான்.

"அதற்காக இப்படியா நடப்பது?" என்ற தாரதத்தனை அவர்களில் ஒருவன் தோழில் தள்ளித்தள்ளிவிட்டான்.

" நீ யாரடா... பரதேசி..."

உற்றித்தள்ளியும் அவன்உடலில் சிறு அசைவைக்கூட அவனால் ஏற்படுத்த முடியவில்லை. இன்னொருவன் கோபத்துடன் அவனை நோக்கி வந்தான், காலால் ஒங்கி உதையப் பார்த்தான்.

அசுரகுருவிற்கு அடக்க முடியாத ஆத்திரம் தலைக்கேறியது முன்னே வந்த அவனைப் பற்றித்தூக்கி அப்படியே சுழற்றி வாசலுக்கு வீசிவிட்டான். அடிக்கக் கையோங்கியவனை வளைத்துப் பிடித்துத் தூக்கி சுவருடன் மோதிவிட்டான். ஒரு கணத்தில் இருவரும் நிலைகுலைந்து முணுகுவதைக் கண்ட மற்ற இருவரும் சற்றுத் தயங்கி நின்றனர். பின்னர் இருவரும் ஒரே நேரத்தில் தாரதத்தன் மீது பாய்ந்தனர். யுத்தம் தொடங்கியது. தாரதத்தனின் காட்டுப்பலத்திற்கு அவர்கள் இருவரும் ஈடுகொடுத்தனர். வெகு நேரம் தாரதத்தனுக்கு எதிராக நிற்க முடியவில்லை. முகம் கிழிந்து இரத்தம் ஒழுக அவர்கள் துவண்டு விழுந்தனர்.

சத்திரத்தில் கூட்டம் கூடிவிட்டது.

எவரும் எதுவும் பேசவில்லை. அக்கிராசனத்தின் துஷ்டர்கள் நால்வரும் நன்கு வாங்கிக்கட்டிக்கொள்வதில் அவர்களுக்கு உள்ளூரத் திருப்திபோலப்பட்டது.

தாரதத்தனால் தாக்கப்பட்டு விழுந்தவர்கள், " இரு இரு வந்து கவனிக்கிறோம் " என்றபடி தள்ளாடியபடி வெளியேறினர்.

" ஐயா... என்ன வேலை செய்தீர் ? அவர்களோ மகா துஷ்டர்கள். ஆட்பலத்துடன் மீண்டும் வருவார்கள். உங்களுக்கும் ஆபத்து எங்களுக்கும் ஆபத்து... உடன் எங்காவது ஓடி

விடுங்கள்... '' என்றான் சத்திரக்காரன். அவனைத் தாரதத் தன் இரக்கத்துடன் பார்த்தான்.

''ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? அவர்கள் உங்களைத் தாக்கினர் உங்கள் மனைவியைத் தாக்கினர். அதற்குப்பிறகும் இப்படி ஏன் பொறுமையாக இருக்கிறீர்கள்? என்று கேட்டான்.

அவர்கள் பயந்தபடி நடந்தது.

'' செய்தி காவி வருகிறான்... '' என ஒருவன் சொன்னான்.

ஒருவன் சத்திரவாசலில் வந்து நின்றான்.

'' சற்று முன் இங்கு சச்சரவில் ஈடுபட்டு நால்வருக்குக் காயம் விளைவித்த அந்நியனை உடன் தன் சமூகத்திற்கு வரு மாறு நாகர் கோயிலின் தலைவர் சிங்கநாகர் பணிக்கிறார்... '' என அறிவித்தான்.

'' நானே வருகிறேன்... '' என்றபடி முன்னே நடந்தான் தாரதத்தன்.



17

நாகர் குடியிருப்புகளில் பெரியதும் காரைகளினால் கட்டப்பட்டதுமான வீடுகள் தலைவர்களுக்குரியவை, என அடையாளம் காண்பதில் சிரமமில்லை. தாரதத்தன் எண்ணியபடி, நாக்கர்கோயில் தலைவன், கொடூரமானவனாகவில்லை. எண்பது பராயத்தையடைந்த பெரியவர் ஒருவர் அக்காரைவீட்டில் திண்ணையில் அமர்ந்திருந்தார். தலைமயிர் முற்றாக வெள்ளிக் கம்பிகளாக நரைத்திருந்தது. புருவ மயிர்கள் கூட வெண்பஞ்சாகக் காணப்பட்டன. வயோதிபத்தின் அறிகுறிகள் இருந்தாலும் சாந்தமும் கம்பீரமும், தலைமைத்துவத்துக்குரிய ஆண்மையும், அவரிடம் இருப்பதைத் தாரதத்தன் கண்டான்.

கண்கள் சிவந்து, கள் மணத்துடன் அவன் இருப்பான் என எண்ணியபடி வந்த தாரதத்தனுக்கு சிங்கநாகரின் உருவம் அவனையறியாமல் அவர் மீது மரியாதையை ஏற்படுத்தியது. நியாயம் கிடைக்கும் என எண்ண வைத்தது.

"சத்திரத்தில் கலகம் செய்தது நீர் தானா?"

"கலகம் செய்யவில்லை ஐயா. கலகம் செய்தவர்களிடமிருந்து சத்திரக்காரரையும் அவர் மனைவியையும் காப்பாற்றினேன்..."

"அவர்கள் என்னிடம் முறையிட்டிருந்தால் நான் அதற்குத்தக்க நீதி வழங்கியிருப்பேன்."

"அவர்கள் உங்களிடம் முறையிட வருவதற்கு முன் சத்திரக்காரன் உயிரிழந்திருப்பான். அவன்மனைவி கற்பிழந்திருப்பாள்.... உங்கள் நாட்டின் ஒரு பெண்ணை நான்கு ஆடவர்கள் அவள் கணவனின் கண்முன் தாக்குகின்ற அவலத்தை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. நாகர் நாட்டில் நீதி இருக்கும் என்றறிந்தேன்..."

"நீர் எந்த நாட்டவர்?"

"நான் தாமிரபர்ணியைச் சேர்ந்தவன். தாமிரபர்ணி இயக்கன். என் பெயர் தாரதத்தன். அசுரகுரு எனவும் வழங்குவர். நாகரீகமும் நீதியும் நியாயமும் செறிந்த நாகநீபத்தைக் காணத் தேசாந்திரியாக வந்தேன்."

சிங்கநாகர் அவனை ஆழமாக ஏறிட்டுப்பார்த்தார். அவன் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தார்.

"நீர் அசுரகுருவா? சத்திரத்தில் நடந்தவையென நீர் கூறுவது யாவும் உண்மைதானா?"

"நீங்கள் சத்திரக்காரரையும் அவர் மனைவியையும் விசாரிக்கில் உண்மை புலனாகும். ஆனால் அந்த நால்வருக்கும் பயந்து அவர்கள் உண்மையை மறைக்கக்கூடும்."

"நான் உண்மையை அறிவேன், தாரதத்தரே அவர்கள் என் மைத்துனர்கள் தாம். அவர்களுக்கெதிராக இக்கிராமத்தில் எவரும் கரம் தூக்கியதுமில்லை. சாட்சி சொன்னதுமில்லை. அதனால் அவர்கள் நால்வரும் உத்தமர்கள் என அர்த்தமுமில்லை. எனக்கு அவர்களை நன்கு தெரியும். துணிந்து அவர்களுக்குப்பாடம் படிப்பித்தவர் யார் என அறியத்தான் உம்மை இங்கு அழைத்தோம். வாரும், அசுரகுருவே. இப்படித் திண்ணையில் அமரும். அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என நீரே கூறும்."

தாரதத்தன் அவரை மிகுந்த மதிப்புடன் பார்த்தான்.

" கிராமத்தலைவரின் பக்கபலம் துஷ்டர்களுக்கு இல்லை என மக்கள் அறியில், மக்களே இனி அவர்களுக்குத் தக்க பாடம் படிப்பிப்பர் ஐயா... "

சிங்கநாகர் அவனைப்பார்த்து அமைதியாகச் சிரித்தார். சிரிக்கும்பொழுது அவர் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன.

" தாரதத்தரே, நீர் இன்று எம்முடன் விருந்தினனாகத் தங்கிச்செல்ல வேண்டும். உமது மக்களைப்பற்றி அறிய ஆவலாகவுள்ளேன். "

" உங்களுடன் தங்குவது பெரும் பாக்கியம், ஐயா. " என்றான் தாரதத்தன்.

அவன் அவ்வீட்டின் திண்ணையில் அமர்ந்து கொண்டான். வசதியாக அமரக்கூடிய உயர்ந்த திண்ணைகள். கால்களைக் கீழே தொங்கவிட்டபடி அமரத்தக்கவிதமாக, இடையில் " ப " வடிவ இறக்கத்தைக்கொண்டிருந்தது. வீடு பனையோலையால் வேயப்பட்டிருந்தது. சுவரில் பிறைமாடங்கள் இருந்தன. அவற்றில் சிட்டி விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன. தேங்காய் எண்ணெய் விட்டு திரியில் அக்கினி எரிவதை தாரதத்தன் கவனமாகப் பார்த்தான்.

அவர் வீட்டு வளவு மிகப்பெரியது. பனைமரங்கள் நிறைந்து காணப்பட்டன. தென்னை மரங்கள், முருங்கைகள், பலா, மாமரம், விளாத்தி, நாவல், நெல்லி என அவர் வீடெங்கும் பயனுள்ள மரங்கள் நிறைந்திருந்தன. ஒரு பக்கத்தில் அண்ணவண்ணாமரங்கள் காய்களுடன் நின்றிருந்தன. சண்டி, எலுமிச்சை, தோடை, முல்லை, முசுட்டை என செடிகள் இணற்றினைச்சுற்றி வளர்ந்திருந்தன. நாகர் குடியிருப்புகளில் முன்னர் காணப்பட்ட தனித்தனி அக்கினிக்குண்டங்களுடன் இப்போது தனித்தனி நீர்க்குண்டுகளும் அமைந்திருப்பதை அவன் கண்டான். அவன் நாட்டில் நீர் நிறைந்து பாய்கின்ற நதிகள் மகிஷதீவில் இல்லை. எனவே இப்படியான நீர்க்குண்டுகள் (கிணறு) அவசியம் என்பதை அவன் உணர்ந்தான்.

" ஏன் அப்படியே வியந்து போய் இருக்கிறீர்கள்? " என சிங்கநாகர் கேட்டார்,

"உங்கள் இல்லத்தைப் பார்த்து வியந்தேன். நீங்கள் உங்கள் உணவிற்காக வெளியில் செல்லத் தேவையில்லை. அனைத்தையும் வளர்த்தே பெறுகிறீர்கள். நாங்கள் அப்படியல்ல, ஐயா. ஒவ்வொரு நாளும் உணவுகளைத் தேடிப் புறப்பட்டு காடுகளில் அலைவோம்.....ஆகாயம், நிலம், வருணன், அக்கினி, காற்று என்பன எப்போதும் எங்களைப் பட்டினி போட்டது கிடையாது."

"உங்கள் முயற்சியில் வாழ்வின் அர்த்தம் இருக்கிறது. நாங்கள் உணவுகளை உற்பத்தி செய்து கொள்வதால் சோம் பேறிகளாகிவிட்டோம். ஓய்வு அதிகரித்துவிட்டது. உண்பது உறங்குவது, சம்பாசிப்பது, குடிப்பது, கலகம் விளைவிப்பது என வாழ்க்கை செல்கின்றது. உணவைத்தேடிப்பெற்று உண்டு உறங்குபவனுக்கு வீண் சச்சரவுகளில் ஈடுபட நேரமில்லை. எங்கள் நாகரீகத்தின் குறுநில மன்னர்கள் ஒவ்வொருவருடன் ஒவ்வொருவர் பகைமையுணர்வு கொண்டிருக்கின்றனர். எந்த நேரத்தில் ஒருவரையொருவர் தாக்குவார்களோ தெரியாது. சில யுத்தங்களில் நான் பங்கு பற்றியிருக்கிறேன். ஏன் யுத்தம் செய்கின்றோம் என்பதே புரியவில்லை. மன்னர்களின் ஆதிக்க வெறிக்கும் அதிகாரவெறிக்கும் எதுவும் அறியாத அப்பாவி மக்கள் பலியாவதைக் கண்டேன். மனித குலத்திற்கு யுத்தங்கள் ஒருபோதும் கூடாது. ஒருவரையொருவர் வெட்டிக் கொன்றழித்துக் காண்பது என்ன? மனிதர் வாழப்பிறந்தவர்கள். அமைதி சமாதானம், நிம்மதி இவைதான் மனிதருக்குத் தேவையானவை."

"மனிதருடன் மிருக உணர்வுகளும் ஒருபங்கு சேர்ந்திருக்கின்றது. அது வீரிடும்போது யுத்தங்கள் ஏற்படுகின்றன. அழிவை ஏற்படுத்தும் அலை தவிர்க்கப்படவேண்டியவை. எம்குலத்தவரிடமும் இப்படியான சண்டைகள் ஏற்படுவதுண்டு. இயக்கர்கள் உங்கள் மாதிரி அவ்வளவு முன்னேறியவர்களல்லர். காடுகளுள் விலங்குகளாக அவர்கள் வாழ்கின்றனர். அந்த உணர்வு அவர்களுக்கு இருக்கலாம். நாகர்கள் அப்படியல்ல. நாகரிகமானவர்கள். அறிவுடையவர்கள். உங்களால் அவ்வாறு ஏற்படும் சண்டைகளைத் தவிர்க்க முடியவில்லையா?" என்று தாரதத்தன் கேட்டான்.

"ஆணவம், அகங்காரம், நான் என்ற மமதை மனதை விட்டு நீங்கும் வரை சண்டைகள் தீராது, தாரதத்தரே. உங்

களைப்பற்றிச் சொல்லுங்கள். உங்கள் மக்களைப்பற்றிச் சொல்லுங்கள்... நீங்கள் பைசாச வணக்கம் செய்பவர்களாமே?''

''ஆம். ஆவிகளை வணங்குகிறோம். இயற்கையை வணங்குகிறோம். இப்போது லிங்க வணக்கமும் செய்கிறோம். கடவுள் நம்பிக்கை என்பது மனிதரின் ஒழுக்கவிதிகளுக்கு ஒழுக்க நெறிகளைப் பேணுவதற்கு அவசியமானது. எங்களது திறனுக்கு அப்பால் இயற்கை நம்மைக் கட்டுப்படுத்துகிறது, நிர்ணயிக்கிறது என்பதற்கு வழிபாடு அவசியம். மதங்கள் தர்மத்தைப் போதிப்பன. எங்களிடம் உங்கள் மாதிரி தனிச்சொத்துக்கள் இல்லை. எங்கள் குழுவில் அனைத்தும் எல்லாருக்கும் சொந்தம். மண்ணை, நாங்கள் எங்களது என உரிமைபாராட்டுவது கிடையாது. நமக்கென ஒரு எல்லையில்லை. தேடிய உணவை நாங்கள் சமமாகப் பங்கிட்டுக்கொள்வோம்...''

''அப்படித்தான் எம் முன்னோரும் வாழ்ந்தனர். இன்று அந்நிலை மாறிவிட்டது. எதிலும் தனது என்ற ஆதிக்கம் வந்து விட்டது.''

சிங்கநாகரின் இல்லத்தில் இரவு உணவு அருந்திய தாரதத்தன் மறுநாள் அதிகாலை தன் பயணத்தைத் தொடர இருந்த போது, மகிஷதீவில் வியப்பான பரபரப்பான செய்தி ஒன்று பரவியது.

''நாகர்கோயில் கரையில் பெரியதொரு மரக்கலம் ஒன்று கரைதட்டியுள்ளது. அதில் காந்தருவப் பெண்கள் வந்திருக்கிறார்கள். பொன்னிறக்கேசமும் நீலவிழிகளும் செந்நிறமும்... மீன்பிடிக்கச் சென்றவர்கள் அச்செய்தியைக் கொண்டுவந்துள்ளனர். கரையிலிருந்து பார்க்கும் போது மரக்கலம் கரைதட்டி நிற்பது தெரிகிறது...''

நாகர்கோயில் தலைவர் சிங்கநாகரிடம் ஓடிவந்து செய்தியைக்கூறினர்.

அவர் அவசரமாகப் புறப்பட்டார்.

அசுரகுரு தாரதத்தனும் அவருடன் சென்றான்.



18

நாகர்கோயில் கரையில் மகிஷத்தீவே கூடிநின்றது. ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாகக் கரையோரம் திருவிளாக் கோலமாகக் காணப்பட்டது. பரந்து விரிந்து கிடந்த மணல் வெளிக்கு அப்பால் அரை யோசனை தூரத்தில் மரக்கலம் ஒன்று கரைதட்டி நிற்பது தெரிந்தது. அதன் பாய்கள் சுருட்டிக் கட்டப்பட்டிருந்தன. கலம் ஒரு பக்கம் சாய்ந்து நின்றது.

சிங்கநாகர் அவ்விடத்திற்கு வந்ததும் மக்களின் ஆரவாரம் அடங்கியது அவரைப் பிரமுகர்கள் சுற்றிக்கொண்டனர். அவர்கள் விழிகளில் வியப்பும் ஆவலும் மண்டிக்கிடந்தன. பெண்களிலும் பார்க்க ஆடவர் மிகுந்த பரபரப்புடன் காந்தருவப்பெண்களைப் பார்க்க ஆவலாகவிருப்பது தெரிந்தது.

"மரக்கலம் கரைதட்டியதை யார் யார் கண்டார்கள்? என அவர் கேட்டார்.

"நான் தான் ஐயா..." என்றான் ஒருவன்: "மீன் பிடிக்க எனது சிறிய வள்ளத்தில் சென்றிருந்தேன். கலத்தை வெகு அருகில் கண்டேன். கலம் முழுவதும் பெண்கள் தான். ஆடவர் எவரையும் அங்கு காணவில்லை. அவர்கள் காந்தரு

வப்பெண்கள் தான் ஐயா. அவர்கள் தங்களைக் காப்பாற்றும் படி என்னிடம் உதவிகோரியது போலப்பட்டது. பயத்தில் ஓடி வந்துவிட்டேன். மோகினிப்பெண்களோ் தெரியவ்ல்லை. அவர்களது கூந்தல் பொன்னிறமானது. விழிகள் நீலநிறமானவை உடல் செக்கச்சிவந்து...'' அவன் வர்ணித்துக்கொண்டு போகும் போது சில ஆண்கள் சப்புக்கொட்டினர்,

சிங்கநாகர் கரையில் நின்றிருந்த வள்ளங்களில் சென்று அக் கலத்தில் தவிப்போரைக்கரை சோ்க்கும் படி கட்டளையிட்டார். அவரது கட்டளைக்காகக் காத்திருந்த வள்ளங்கள் கடலில் ஆர் வத்துடன் புறப்பட்டன. சிங்கநாகர் தன் அருகில் அமைதி யாக நின்றிருந்த தாரதத்தனைப் பார்த்தார்-

'' நாகதிலத்திற்குப் புதியதொரு பிரச்சினை ஏற்பட்டிருப் பதாக நினைக்கிறேன். தாரதத்தரே. மீனவன் சொன்னவை உண்மையாயின், அம்மரக்கலத்தில் காந்தருவப்பெண்கள் தாம் இருக்கிறார்கள் என்பது உண்மையாயின்... ''

'' அவர்கள் காந்தருவப் பெண்களாக இருக்கமாட்டார்கள், ஐயா. நான் நினைக்கிறேன் வடக்கேயுள்ள பெரும்நிலத்தின் ஆரியப்பெண்களாக இருப்பார்களென. அவர்கள் தான் பொன் விறக்கூந்தலும் நீலவிழிகளும் உடையவர்கள். அக்குல ஆட வரை நான் பார்த்திருக்கிறேன்.. ''

சிங்கநாகர் அவனை வியப்புடன் பார்த்தார்.

'' நீர் சொல்வது சரியாகவே இருக்கும்.''

முதல் வள்ளம் திரும்பி வந்தது. கரையில் நின்றது. அந்த வள்ளத்திலிருந்து பத்துப்பன்னிரண்டு பெண்கள் அலங்கார பூபி களாக இறங்கினர். அவர்கள் பட்டாடைகளை அணிந்திருந் தனர். ஆரங்களையும் காதணிகளையும் வளையல்களையும் பூண் டிருந்தனர். கச்சம் கட்டாத திறந்த மார்பகங்களும் கட்டுடலும் அவர்களின் எழிலுக்கு ஏற்றம் கூறின. கடற்பயணத்தால் அவர் கள் முகம் வாடிச்சற்றுச் சோபை இழந்திருக்காவிடில், அவர்களது முக மதியங்கள் இன்னும் பிரகாசமாக இருந்திருக்கும். காற் றில் அவர்களது பொன்னிறக் கேசங்கள் அலைபாய்ந்தன.

நீலவிழிகளில் பயமும் துயரும் கவ்விக் கிடந்தன.

அவர்கள் கரையில் பயத்துடன் தரித்து நின்றனர்.

அவர்கள் எதையோ கூற முயன்றனர். ஆனால் அவர்களது பாஷை புரியவில்லை.

அந்த அழகிகளைப் பார்த்ததும் நாகர் குல ஆடவர்களின் உள்ளம் படபடத்தது. விழிகளில் ஆசையும் கட்டுக்கடங்கா ஏக்கமும் நிரம்பின. நாகர் குலப்பெண்கள் அவர்களை அருவெ யுடன் பார்த்தனர்.

எழுநூறு பெண்களும், ஐந்து மரக்கலமோட்டிகளும் கரையில் இறக்கப்பட்டனர். மரக்கலமோட்டிகள் கறுப்பு நிறத்தவர்களாகவும் அசுரகுலத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் நடந்ததை சிங்கநாகரிடம் விபரித்தனர்.

'' சிங்கபுரத்திலிருந்து எழுநூறுபேர் கும்பலாக மூன்று மரக்கலங்களில் தேசப்பிரதிஸ்டம் செய்யப்பட்டனர். ஆடவர் ஒரு கலத்திலும் அவர்களது மனைவியர் இன்னொரு கலத்திலும் பிள்ளைகள் இன்னொரு கலத்திலுமாக, கடலில் பயணப்பட்டோம். சூறாவளியில் சிக்கி நாங்கள் இக்கரையை அடைந்தோம். மற்றைய இருகலங்களுக்கும் என்ன நடந்தது எனத் தெரியவில்லை. '' என்றான் மரக்கலமோட்டிகளின் தலைவன் போலக்காணப்பட்டவன். வாட்டசாட்டமான கரிய உருவப் பொலிவுடன் அவன் காணப்பட்டான்.

'' இவர்கள் என்ன விரும்புகிறார்கள் ? '' எனச் சிங்கநாகர் அவனிடம் கேட்டார்.

'' அவர்களுக்கு இலிக்கதியில்லை, மன்னா. அவர்கள் தேசப் பிரதிஸ்டம் செய்யப்பட்டவர்கள். நாடு திரும்புவதாகவிருந்தாலும் எமக்கு வழிதெரியாது. மரக்கலம் உடைந்து விட்டது. இன்னமும் சிலபொழுதில் கடலில் மூழ்கிவிடும் இவர்கள் எங்களைத் தம் அடிமைகளாக வைத்திருக்கிறார்கள் அவர்கள் இப்பொழுது அசுரநாடொன்றில் அகப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே அவர்கள் இப்பொழுது நமது அடிமைகள் மன்னா..." என்றான் அவன்.

"ஆம்... ஆம்..." என்றனர் அங்கிருந்த ஆடவர்கள்.

கடற்கரையில் எழுநூறு இளம் அழகிகள் காலைக்கதிரின் தழுவலில் நின்றிருந்தபோது பொன்சிலைகள் குவிந்துகிடப் பதாகப்பட்டது. தாரதத்தன், சிங்கநாகர் கூறிய பிரச்சினை களைப் புரிந்து கொண்டான்

சிங்கநாகர் அவர்களுக்கு உணவும் நீரும் வளங்குமாறு கட்டளையிட்டார்.

"அவர்கள் மொழி உமக்குத் தெரியுமா?"

தெரியும்.." என்றான் கலமோட்டி.

"என்ன விரும்புகிறார்கள் எனக்கேள்..."

"அவர்களிடம் என்ன கேட்பது? அடிமைகளாக விற்று விடுங்கள்...." என்றான் அவன். அடிமை வாழ்வின் பழிவாங் கல் உணர்வு அவனிடம் தெரிந்தது. சிங்கநாகர் அவனைக் கோபத்துடன் பார்த்தார்.

பின்னர் தன் கோபத்தை அடக்கிக்கொண்டார்.

"அசுரகுருவே பார்த்தீரா, பிரச்சனையின் வடிவங்களை? இப்பெண்களை என்ன செய்வது? ஒருவரா? எழுநூறு பெண் கள். அவர்கள் அனைவரும் இளமங்கைகள். வசதி கொண்ட நாகர்கள் அவர்களைப் பங்குபோடப் போகிறார்கள். அடிதடி எழும். வலிமையுள்ளவர்களும் பொருள் வசதிகொண்டவர் களும் அவர்களைப் பங்கு போட்டுக்கொள்ளப்போகிறார்கள்."

"அடிமைகள் உங்கள் சமூகத்தில் உள்ளனரா?"

"ஒரு சிலரிடம் அடிமைகள் உள்ளனர். அரசிறையாகக் குறிப்பிட்ட ஒரு தொகைச் செல்வத்தை வழங்கில் அவர்கள்

அடிமைகளை வைத்திருக்கலாம்.'' என்றார். சிங்கநாகர்.

'' இப்பெண்களை அடிமைகளாக விற்கப்போகிறீர்களா ?'' எனக் கவலையுடன் தாரதத்தன் கேட்டான்.

'' இந்த அழகிகளை அடிமைகளாகவா வைத்திருக்கப் போகிறார்கள் ? அடிமைகள் என்ற பெயரில் வாங்கி, இந்த நாகர்குல ஆடவர் அவர்களுக்கு அடிமையாகப் போகிறார்கள் போல எனக்குப்படுகிறது.'' என்றார் கவலையுடன் சிங்கநாகர்.

'' உங்கள் குலப் பெண்கள் இதனை அனுமதிப்பார்களா?''

'' அவர்கள் என்ன சொல்லவிருக்கிறது. ஆடவர் விரும்பும் போது.''

'' உங்கள் பரம்பரையில் இதனால் புதியதொரு சந்ததி உருவாகி நாகர்களின் தனித்துவம் அழிந்துவிடுமல்லவா?''

'' உண்மைதான்... அது தவிர்க்க முடியாதது.''

'' பத்துப்பன்னிரண்டு தலைமுறைக்குப் பின்னர் நாகதீபத்தில் உங்கள்மாதிரியும் இருக்கமாட்டார்கள் அவர்கள் மாதிரியும் இருக்கமாட்டார்கள்.'' என்றான் தாரதத்தன். '' எனக்கு நீங்கள் விடைதர வேண்டும்... தாமிரபர்ணிக்குத் திரும்பிச்செல்ல விருக்கிறேன்.''

'' ஏன் பயப்படுகிறீர்கள் தாரதத்தரே... இக்காந்தருவப் பெண்களைக் கண்டு அசுரகுருவின் மனதும் சலனப்படுகிறதா ? நீர் இங்கிருப்பதாகச் சொல்லும். நான் தெரிவு செய்யும் பெண்களில் ஒருத்தியை உமக்கு மணமுடித்து வைக்கிறேன். இந்த மரக்கலம் ஒரு பத்துப்பதினைந்து வருடங்களுக்கு முன் இக்கரையில் ஒதுங்கியிருக்கக் கூடாதா என ஏக்கமாகவிருக்கிறது...'' என்ற சிங்கநாகர் பெரிதாக நகைத்தார்.

அவன் மௌனமாக அவரைப்பார்த்தான். மனதில் அவர் வார்த்தைகள் சற்று அருவருப்பினைத் தோற்றுவித்தன. அவரை நோக அவன் யார்? அவன் குலத்தில் இந்த ஒழுங்கு கூடக் கிடையாதே? தந்தை யார் எனத்தெரியாத குழந்தைகள் அவன் குலத்திலுள்ளனர்.

அவன் பயணப்பட்டான்.

''தாரதத்தரே, உங்களுக்காக எங்கள் மகிஷதிவு எப்பொழுதும் திறந்திருக்கும். நீங்கள் விரும்புபோது உங்கள் கூட்டத்தினருடன்; எங்களுடன் வந்து குடியேறி வாழலாம். நாகர்களுக்கு அனைவரும் உறவினரே..'' என்றார் சிங்கநாகர்.

அவன் தாமிரபர்ணியை நோக்கி நடக்கத்தொடங்கினான். மனதில் இனந்தெரியாத சஞ்சலங்கள் எழுந்தன. எவ்வளவு விரைவாக தான் பிறந்த மண்ணை அடையலாமோ அவ்வளவு விரைவாக அடைந்துவிட விரும்பினான்.

19

நாகர்கோயில் கடற்கரையில், பாரிய மரக்கலத்திலிருந்து வள்ளங்கள் மூலம் கொண்டுவந்து இறக்கப்பட்ட ஆரியகுலப் பெண்களின் எழில் தோற்றங்கள் தாரதத்தனின் மனதிலிருந்து விலகிச்செல்ல முடியவில்லை. இயற்கையாகவே அவர்கள் அழகிகள். இயற்கையாக அமைந்த வனப்புக்களை உடைகளாலும் அணிகளாலும் அவர்கள் மேலும் அழகூட்டியிருந்தனர் போல அவனுக்குப்பட்டது. காட்டுப்புஸ்பங்கள் போன்ற இயக்கப் பெண்கள் தலைமயிரை அள்ளிக்கட்டி வார் ஒன்றினால் பிணைத்து மலர்களை அல்லது பறவைகளின் பலவண்ண இறகுகளை அவற்றில் சூடியிருப்பர். சோழிகளையும் சங்குகளையும் கோத்து மாலையாக அணிந்திருப்பர். அரையில் பருத்தியாடையும் திறந்த மார்பகங்களும் அவர்கள் அழகிற்கு மெருகூட்டுவதிலும் பார்க்க அவர்களின் வீரத்திற்குக் கூடுதலாக உரம் சேர்த்தன. வில் அம்பு அல்லது ஈட்டி ஏந்திய இயக்ககுலப் பெண்களுக்கும் மென்மையான ஆரிய குலப் பதுமைகளுக்கும் இடையில் பெரும் வேறுபாடிருப்பதைத் தாரதத்தன் உணர்ந்தான்.

நாகர்கோயில் கடற்கரை இன்று அல்லோலகல்லோலப் படும். அவர்களைப் பங்குபோடுவதில் அங்கு பெரும் பிரச்சி

னைகள் தோன்றியிருக்கும். பாவம் நாகர் குலப்பெண்கள். பல வீடுகளில் இன்றிலிருந்து அவர்களின் ஆதிக்கம் குறைத்து போகும். அவ்விடங்களை ஆரியகுலப்பெண்கள் எடுத்துக்கொள் வார்களோ?

அரைகளிலிருந்து குதிக்கால்கள் வரை அப்பெண்கள் பட்டா டைகளை அணிந்திருந்தனர். அரையிலிருந்த பட்டா டையை இறுக்கிப்பிடிக்க சுருள் சேலை ஒன்றினை வரிந்துகட்டி முன் தொங்கலாக விட்டிருந்தனர், அவற்றின் மேல் இடுப்புப் பட்டையாக முத்துக்களால் இழைக்கப்பட்ட ஒட்டியாணம். காதுகளில் குண்டலங்கள் பல்வேறு வடிவங்களில் தொங்கின. சிலர் பல்வகைக்காதணிகளை அணிந்திருந்தனர். அக்காதணி களிலிருந்து முத்துச்சரங்கள் தோள்கள் வரையில் பார்க்கும் இளைஞர்களையும் கவர்ந்து இழுத்தபடி தொங்கின. பாதங்கள் வெண்ணிற உலோகத்தால் பின்னிய கொலுசுகள், கரங்களில் பல்வகை வளையல்கள். விம்மிய கொங்கைகளின் மென் பிளவி னூடாக சன்னவீரம் இடுப்புச்சேலையில் பிணைத்திருந்தது. காற்றில் தெறிகெட்டுச்சிலிர்த்த பொன்னிறக்கூந்தலை அடக்கு மாப்போல கன்னப்பில்லைகளும், சிலர் பின்னிவிட்ட கூந்தலில் உச்சப்பக்கத்தில் நாகபில்லைகளும் காணப்பட்டன.

அவர்கள் உண்மையில் பயங்கர அழகிகள்.

நாரதத்தன் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

அவன் தாமிரபர்ணியைவிட்டு வெளியேறி இரண்டு பௌர் ணமிகள் கழிந்துவிட்டன. அவன் நாடு எப்படியிருக்கிறதோ? பெருந்தாய் நகுலி, குவேனி, திரிசூலி, சலதி... அவளுக்குத் தான் என் மீது எவ்வளவு பிரேமை?, சமுதா... களுசேனன் ஆகியோர் எப்படியிருக்கிறார்களோ?

அவர்கள் கூட்டத்தின் பெருந்தாய் நகுலி கொல்லப்பட் டதோ, ஈமத்தாழியில் இட்டு அடக்கம் செய்யப்பட்டதோ அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒன்றாக இணைந் திருந்த அவன் கூட்டத்தினர் இரண்டு குழுக்களாகப்பிரிந்து, ஒன்று குவேனி தலைமையிலும் மற்றையது திரிசூலியின் பொய்

மைத்தலைமையில் களுசேனனால் நிர்வகிக்கப்பட்டு வருவதையோ அவன் அறியான், சாதாரண களுசேனன் தன்னை இப்போது மகாகளுசேனன் என அழைத்துக்கொள்கிறான் என்பதும் அவனுக்குத் தெரியாது.

ஆனையிறவுக் கடனீரேரியைக் கடந்த அவன் கனகராயன் ஆற்றின் கரையோரமாக நடந்து குருந்தன்குளம் நாககுடியிருப்பினை மூன்றாம் நாள் வந்தடைந்தான். அங்கு ஓரிரவு தங்கிவிட்டு, இன்னும் இருபகல் பயணப்பட்டு மகாவில்லாச்சியை வந்தடைந்தான். மகாவில்லாச்சியை அவன் அடைந்தபோது இரவு படர்ந்து கொண்டிருந்தது. அக்கிராமம் பதற்றத்துடன் காணப்படுவதையும், நாகர்கள் ஆயுதம் ஏந்திய நிலையில் விளங்குவதையும் கண்டான். ஏதோ நடந்திருக்க வேண்டும்.

அவன் கிராமத்துள் நுழைந்ததும் அவனைப்பலர் சந்தேகத்துடன் பார்த்தனர். அவன் நேராக நாகமல்லனின் இல்லத்திற்குச் சென்றான். அங்கு பலர் கூடி ஏதோ ஒரு விடயமாக விவாதித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அவன் வாசலில் தயங்கி நின்றபோது திண்ணையில் அமர்ந்திருந்த நாகமல்லன் அவனை அடையாளம் கண்டுகொண்டான்.

அவனை உள்ளே வருமாறு அழைத்தான்.

''அசுரகுருவே, நீர் நண்பராக வந்திருக்கிறீரா? அல்லது பகைவராக வந்திருக்கிறீரா? என அவன் கேட்ட வினாவின் அர்த்தம் தாரதத்தனுக்குப்புரியவில்லை.

''நான் இப்போதுதான் வடபாகம் முழுவதும் தேசயாத்திரை செய்துவிட்டு வந்துகொண்டிருக்கிறேன், நாகமல்லரே. உங்கள் கேள்வி எனக்குப்புரியவில்லை.'' என்றான் பவ்வியமாக தாரதத்தன்.

''தாரதத்தரே, இன்று அதிகாலை எமது கிராமத்தை இயக்கரின் கூட்டம் ஒன்று தாக்கி, நாம் சேகரித்து வைத்தி

ருந்த தானியங்களையும் ஆடுமாடுகளையும் கொள்ளையிட்டுச் சென்றுவிட்டனர். யாரோ மகாகளுசேனனாம்... அவன் கூட்டத்தினராம்... ''

'' அவர்களை எதிர்த்த பலரை அவர்கள் காயப்படுத்தி விட்டனர். மூவர் மரணமடைந்தனர். மகாகளுசேனன் பெரும் வில்லாளியாகவிருக்கிறான்... '' என்றான் இன்னொருவன்.

அப்படியாயின் அவன் கூட்டத்தினரா? பெருந்தாய் நகுலி இதற்கு எப்படி ஒத்துக்கொண்டாள். குவேனி இதற்கு எப்படிச் சம்மதித்திருப்பாள்? அவர்கள் ஒருபோதும் இன்னொரு கூட்டத்தினரைத் தாக்குவது கிடையாது. அவர்கள் தமக்கென வரையறுத்த ஒரு பிரதேசத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவும் அவர்களுக்குப் போதுமானது.

ஏதோ நடந்திருக்கிறது எனத் தாரதத்தன் எண்ணிக் கொண்டான்.

மனதில் கலக்கம் குடிகொண்டது.

'' அப்படியொரு கூட்டத்தினர் இருப்பதை நான் அறியேன், நாகமல்லரே. அப்படியான தாக்குதலுக்குக் காரணம் என்ன? ''

'' மகாவில்லாச்சி தங்களது வேட்டைப்பரப்பில் இருக்கிறதாம். உடனடியாக நாம் இக்குடியிருப்பினைவிட்டு வெளியேறிவிடவேண்டுமாம். நாங்கள் முடிவு செய்துவிட்டோம். அவர்களை எதிர்த்து அழிப்பதென... நம்மில் சிலர் அவர்களைத் தேடி அழிக்கவேண்டும் என்கின்றனர்... ''

அசுரகுருவால் அதற்குப்பதில் எதுவும் கூறமுடியவில்லை.

'' மகாகளுசேனன் ... '' எனத்தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

ஏதோ விபரீதம் நடந்துவிட்டது.

''எனக்கு விடை தாருங்கள், நாகமல்லரே. நான்கு அல்லது ஐந்து பகல்களுள் உங்களுக்குச் சரியான விளக்கம் தருவேன்... அதுவரை பொறுமை காக்க.''

நாகமல்லன் அவனை ஏறிட்டுப்பார்த்தான்.

''உமது வார்த்தைக்கு மதிப்பளிக்கின்றோம். இந்த வேளையில் நீர் செல்ல வேண்டுமா? காலை பயணப்படலாம்...''

''தங்கள் அன்பிற்கு நன்றி. நான் இப்போதே பயணப்பட்டுச்செல்ல வேண்டும். ஏதோ விபரீதம் நடந்திருப்பதாகப்படுகிறது.''

''உங்கள் யாத்திரை எப்படியிருந்தது?''

''சுவையாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. ஒரு விசயம், நாகர்கோயில் கரையில் கரைதட்டி ஒரு மரக்கலம் சேர்ந்தது. அதில் எழுநூறு ஆரியகுலப்பெண்கள் வந்திருக்கிறார்கள். அந்தக் காந்தருவப்பெண்களைப் பெறுவதற்காக மகிஷதிவி அல்லோலகல்லோலப்படுகின்றது...''



20

சிங்கஹல விஜயனின் மரக்கலம் கண்முன் விரிந்த நிலப் பரப்பினை நோக்கி நகர்ந்தது. கரை நெருங்க நெருங்க நிலப் பரப்பின் அழகு தெரியத்தொடங்கியது. வெண்மணல் பரந்து கிடந்த முன்கரைக்கு அப்பால் தாமிரவண்ணத்தில் மண்பரந்து கிடந்தது. அதற்கு அப்பால் அடர் காடு வளர்ந்திருந்தது. முன் னணிக்காடு உயரத்தில் சிறிதாகவும் பின் காடுகள் படிப்படி யாக உயர் மரங்களைக்கொண்டிருப்பதாகவும் அவர்கள் கண் டனர்.

கரையோரக் கடலில் கடற்பறவைகள் சத்தமிட்டவாறு நீரில் மூழ்குவதும் எழுவதுமாக ஆரவாரப்பட்டன. மனித சஞ் சாரமே தெரியவில்லை.

முன்பின் தெரியாத அந்த நிலப்பரப்பின் அசுரர்கள் எப் படிப்பட்டவர்களோ ? அல்லது அசுரர்களில்லாத தீவோ ?

மரக்கலம் முன்னேற முடியாது நின்றது.

" இதற்கு அப்பால் மரக்கலம் நகர முடியாது, இளவரசே, கடலின் ஆழம் போதாது .. " என்றான் அனுராதன்.

''ஒரு யோசனைக்கு இப்பால் நிற்கிறதே?''

''இவ்வளவு பரிய மரக்கலம் இவ்வளவு தூரம் கரைக்கு வந்ததே பெரிய காரியம்... அவ்வளவு தூரம் இருக்காது. அரையோசனைத் தூரத்திற்கும் குறைவு...''

சிறிய வள்ளங்களில் கரைக்குச் செல்வோம். முதலில் நானும் வேறு நால்வரும் செல்கின்றோம். விஜித்தா, நீயும் கூட வா. மற்றவர்கள் மரக்கலத்தில் இருங்கள் கரை இறங்குவதா இல்லையா என்பதை கொம்பு மூலம் அறிவிக்கின்றோம்...'' என்றான் விஜயன்.

''குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும், இளவரசே. நூறுபோர் கொண்ட படையணி ஒன்றினைக் கரையிறக்குவோம். அவர்கள் என் தலைமையில் கரையில் காத்திருக்க நீங்கள் அறுவரும் உள்ளே செல்லலாம். உங்களுக்கு ஏதாவது நடப்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது'' என்றான் உய்யினி.

''நல்லது...'' என்று அனுமதித்தான் சிங்ஹல விஜயன்.

விஜயன் தன் சில தோழர்களுடன் முதன்முதல் இலங்காபுரி மண்ணில் கரையிறங்க ஆயத்தமானான். அரையில் கச்சமாக சுருக்கங்களிட்டு சல்லடம் ஒன்றினை அணிந்து கொண்டான். அதனை இடுப்புடன் பற்றிப்பிடிக்க இடைக்கச்சாக முறுக்கிய துணியொன்றினை இறுக்கிக்கொண்டான். சல்லடம் ஒன்றினைத் தலைப்பாகையாக அணிந்து, அரை மொட்டையை மறைத்துக் கொண்டான்.

அவன் காதுகளில் இரு குண்டலங்கள் தொங்கின. வயிற்றின் மேல் பாகத்தில் உந்திக்கு மேல் உதரபந்தத்தை அணிந்து மார்பின் குறுக்கே ஒன்றையொன்று குறுக்கிட்டு சன்வீரம் இடுப்புக்கச்சைவரை சென்றது. சிங்கம் போன்ற முகப்புடன் கூடிய ஊருதாமத்தை இடுப்புக்கச்சைமீது கட்டிக்கொண்டான். ஹாரம் ஒன்று மழுத்தில் முத்துக்களுடன் ஒளிர்ந்தது. மன்னன் ஒருவனுக்குரிய பஞ்சாயுதங்களை விஜயன் எடுத்துக் கொண்

டான். இடையில் வாள், கரத்தில் வேல், தோளில் வில் அம்பு, இடுப்புக்கச்சையில் செருகிய சிறிய கோடரி, இடக்கரத்தில் கேடயம் ஆகிய பஞ்சாயுதங்களை ஏந்தியவனாக சிங்ஹல விஜயன் மரக்கலத்திலிருந்து இறக்கிச் சிறிய தோணியில் குதித்தான். அவனுடன் மேலும் அறுவர் தோணியில் ஆயுத பாணிகளாக இறங்கினர்.

கிழை அடிவானிலிருந்து சூரியன் மெல்லென எழுந்தான். அவர்கள் மேலைக்கடலிலிருந்து கரையை நோக்கிப்பயணப் பட்டதால் எதிரே தெரிந்த நிலப்பரப்பு புகைபடர்ந்த ஓவியமாகக் காட்சி தந்தது. காட்டுமரக்கவிப்பு மேல் சூரியன் எழுந்த வேளை அவர்கள் தாமிரபர்ணிக்கரையை அடைந்தனர். அவர்களது தோணி கரையை நெருங்கியதால் சிறிது வெருட்சியுற்ற கடற்பறவைகள் அவ்விடத்தைவிட்டு விலகிப் பறந்தன. வெகு தூரத்தில் காட்டோரத்தில் யானைகள் மேய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அக்கூட்டத்தின் தலைவன் யானை நீண்ட தந்தங்களைக் கொண்டதாக, தன் கூட்டத்தை மேய விட்டு விட்டு முன் எச்சரிக்கையாக சுற்றிவரச் சுழன்று அவதானித்தது. நீண்ட அதன் தந்தங்கள் காலை ஒளியில் பளீரிட்டன.

விஜயன் தன் தோழர்களுடன் தாமிரபர்ணிக்கடற்கரையில் கால்களைப்பதித்தான். தூரத்தில் மயில் ஒன்றன் அகவல் சத்தம் எழுந்தது. இவர்களை மோப்பம் பிடித்த காட்டு யானை தன் தும்பிக்கையை உயர்த்தி பயங்கரமாகப் பிளிறியது. பின்னர் தன் கூட்டத்தாருடன் அடர்ந்த காட்டிற்குள் புகுந்து கொண்டது. பசிகிடவா நரியொன்று ஊளையிட்டது.

'' சகுனங்கள் நன்குள்ள... '' என்றான் விஜித்தா

அதிகாலைப்பொழுதில் கடற்கரை மணலில் அவர்கள் வந்து இறங்கியதை, காட்டோர மறைவிலிருந்து குவேனியும் சமுதாவும் ஏனைய பலரும் கண்டனர். மரக்கலம் ஒன்று கரையில் வந்து நிற்கின்றது என்ற செய்தியை அறிந்ததும் குவேனியும் அவளுடன் பதின்மரும் கடற்கரைக்கு வந்தனர். நேற்றிரவே அவர்கள் இங்கு வந்து விட்டனர். வழமையாக வர்த்தகத்திற்காக அக்கடற்கரைக்கு வருகின்ற மரக்கலங்களிலும் பார்க்க அது பாரிய கலமாகப்பட்டது.

''வணியாக்களா ? நவிகாக்களா ?'' எனக் குவேனி வினவினாள்; ''இது வர்த்தகக் காலமல்லவே ?''

''யாரெனத் தெரியவில்லைத் தாயே, புதியவர்கள். இந்த மண்ணிற்குப் புதியவர்களாகப்படுகின்றது...'' என்றான் சமுதா.

சிலர் கடற்கரையில் இறங்கி நிற்பது தெரிந்தது. சமுதா கூறியது போல இந்த மண்ணிற்குப் புதியவர்கள் தாம்.

''யார் அவர்கள்'' எனக் குவேனி எண்ணமிட்டாள் இந்த வேளையில் அசுரகுரு தார்தத்தன் கூட இல்லாத்தன் குறை அவளுக்குத் தெரிந்தது. அந்தக் கூட்டத்தில் தாரதத்தன் மதியூகி. தக்க ஆலோசகன்.

குவேனியின் அருகில் நின்றிருந்த அவள் வளர்க்கும் நாய் திடீரென அவர்களைப்பார்த்துக் குரைத்தது. அவள் அதை அடக்கினாள். நாயின் குரைப்பொலியை அந்த மனிதர்கள் கேட்டிருக்க வேண்டும். அவர்கள் அறுவரும் சற்று நேரம் தயங்கி நிற்பது தெரிந்தது.

''விஜித்தா, நாய்ஒன்றின் குரைப்பொலி கேட்கிறது. நிச்சயமாக மனிதர்கள் அருகில் இருக்க வேண்டும். வாருங்கள் சென்று பார்க்கலாம்...'' என்றபடி முன்னோக்கி விஜயன் நகரக் காலெடுத்து வைத்தான்.

''உப்யினியின் தலைமையில் இன்னமும் நம்படையணி இறங்கவில்லை. அவர்கள் வந்தும் செல்வோம்...'' என்ற விஜித்தாவை விஜயன் கோபமாகப்பார்த்தான்.

''அவர்கள் நம்பாட்டில் வரட்டும். நாம் முன் செல்வோம். அசுரர்களுக்குப் பயப்படுகிறாயா ? நாம் சமாதானமாக இந்த மண்ணில் இறங்கியிருக்கிறோம். முதலில் யாராவது எதிர்த்தால் பாதுகாத்துக் கொள்ளுங்கள். திருப்பி அவர்களைத் தாக்க வேண்டாம்.''

கடற்கரை மணலில் கால்கள் புதைய அவன் முன்னே

நடந்தான். அவர்களின் நெடிய சிவந்த உருவங்கள் கீழைக் கதிரவனின் ஒளியில் நன்கு தெரிந்தன.

சமுதா வில்லில் அம்பினைப் பொருத்தி நாணேற்றினான்.

''பொறு சமுதா ...'' என்றாள் குவேனி; '' எங்கள் ஆட்களைப் பரவலாக மறையைச் செய், அவர்களை உயிருடன் பிடிக்க வேண்டும். தாங்கள் வருவதை அறிவிக்காமல் வருகிறார்கள். புதியவர்கள்... வளமை தெரியவில்லை. சங்கினை ஊதி முதலில் எச்சரிக்கை செய்.''

சமுதா தன் குழுவினருக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தான். இவர்கள் பரவலாகப் பிரிந்து மறைந்து கொண்டனர். அம்புகள் பொருத்தப்பட்டு நாணேற்றிய வில்கள் தயாராக விருந்தன.

இருந்தாற் போல சங்கு ஒன்றின் முழக்கம் அக்கடற்கரையின் அமைதியைக் குலைத்தது. முன்னோக்கி நடந்து வந்து கொண்டிருந்த சிங்ஹல விஜயனும் ஏனையோரும் சற்றுத் தரித்து நின்றனர். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். சங்கின் ஒலி எச்சரிக்கையா ? அழைப்பா என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

தயங்கி நின்றனர். சிலகணங்கள் தாம் தயக்கம். விஜயன் கால்களை முன்னோக்கி எடுத்து வைத்தான்.

'' சமுதா... அவர்களைத்தடு... '' என்றாள் குவேனி:

சமுதாவின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு விர்ரெனக் காற்றில் ஊராய்ந்து விசிலொலி எழுப்பியபடி, சிங்ஹல வியனின் முன் ஒரு சாண் இடைவெளியில் நிலத்தில் குத்தி நின்றது. மறுகாலை வைத்திருக்கில் அது அவனைத் தைத்திருக்கலாம்.

விஜயன் நிலைமையைப் புரிந்து கொண்டான்.

''விஜித்தா, நாங்கள் நண்பர்கள் என்பதை அறிவி வெள்ளைக்கொடியை உயரக்காட்டு...''

விஜித்தா தன் வாளில் வெள்ளைத்துணியொன்றினை மாட்டி உயரக்காட்டினான்.

சமுதா, அவர்களில் தலைவனை மட்டும் இங்கு அழைத்து வா.''

காட்டோரத்தில் கம்பீரமான ஒரு மனிதன் வெளிப்படுவதை விஜயன் கண்டான்.

அவன் அவர்களை நோக்கி நடந்து வந்தான். அவர்கள் அருகில் வந்து, விஜயனை அவனது ஆடைகளிலிருந்து அக் கூட்டத்தின் தலைவனெனப்புரிந்து கொண்டு, அவனைச் சுட்டிக் காட்டித் தன்னுடன் வருமாறு அழைத்தான்.

''தனித்துச் செல்ல வேண்டாம்...'' என்று விஜித்தா தடுத்ததைப் பொருட்படுத்தாமல், அவர்களை அவ்விடத்தில் நிற்க வைத்துவிட்டு விஜயன், சமுதாவுடன் நடந்தான்.

''சோதிட புத்திரா, உன் நிழல் காலடிக்குவருவதற்கு முன் நான் வராவிடில் உய்யினியின் படையணி முன் வரட்டும்...'' என்றபடி நடந்தான்.

கம்பீரமாக நடந்து வரும் விஜயனை வியப்புடன் குவேனி பார்த்தாள்.



21

வானில் அரை நிலவு பவனிவந்துகொண்டிருந்த அந்த இரவில் நிசப்தத்தைக் கூலைத்தபடி அசுரகுரு தாரதத்தன் வேகமாக தாமிரபர்ணியை நோக்கி வந்துகொண்டிருந்தான். ஓரிடத்தில் தங்கி ஓய்வெடுக்கவேண்டுமென்ற எண்ணம் அவனுக்கில்லை. கால்களில் முட்கள் குற்றியும் கட்டைகள் தடுக்கியும் இடர் விளைவித்தன. பாதையறிந்து வேகமாக வந்ததால் உடலின் பல பகுதிகளில் கூரிய முட்கள் இரத்த வரிகளை இட்டிருந்தன. உடல் வியர்வையால் தெப்பமாகிக்கொண்டிருந்தது. அவை ஒன்றினையும் கவனிக்கும் நிலையில் அவன் இல்லை.

மகாவில்லாச்சியில் அறிந்த செய்திகள் தன்கூட்டத்தினரில் ஏதோ மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது என்பதை அவனுக்குரைத்தன. ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டது என்பதை அவன் உள்மனம் கூறியது.

இரவு முழுவதும் நடந்தும் ஓடியும் விரைந்துவந்து கதம்ப நதிக்கரையைக் கடந்தான். அங்கிருந்து இன்னமும் அறுபது யோசனை தூரம் சென்றால் தாமிரபர்ணியின், அவன் சமூகத்தினர் வாழும் குடியிருப்பினை அடைந்துவிடலாம். நண்பகற் பொழுதில் குளக்கரையொன்றில் சற்று ஓய்வெடுத்தான். மரக்

குற்றியொன்றுடன் சாய்வாக அமர்ந்தபடி வானத்தைப் பார்த்தான். நீர்க்காக்கைகளும் இனந்தெரியாத வேறுபல பறவைகளும் வீண்ணில் வடக்குத்திசைநோக்கித் தாளலயத்துடன் பறந்து சென்றன.

குளத்தின் மறுகரையில் காட்டெருமைகள் நீரை மூசியபடி குடித்தன.

முள்ளம்பன்றியொன்று சரசரவெனப்பற்றைகளுள் நுழைந்தது.

அப்படியே அவன் கண்கள் சோர்ந்து தன்னையறியாமல் மூடிக்கொண்டன. நித்திரையின்றி ஓடிவந்த களைப்பு அப்படியே நித்திரையின் இனிய தழுவலில் அயர்ந்துபோனான். கண்விழித்தபோது பறவைகள் பறந்த வானத்தில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டின.

துடித்துப்பதைத்து எழுந்தான். தன்னையே திட்டிக் கொண்டான்.

தோற்பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு மீண்டும் ஓட்டமும் நடையுமாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தான். அதிகாலை மலர்ந்து கொண்டிருந்த வேளையில் அவன் தன் குடியிருப்பின் எல்லையில் மிதந்தான்.

அவன் வந்ததை முதலில் கண்டவள் சலதி. விழிகளில் மகிழ்ச்சியும் ஆவலும் பொங்க அவனை நோக்கி ஓடிவந்தாள். வந்தவேகத்தில் அப்படியே அவனைக்கட்டிக்கொண்டாள். தன் அரைச்சேலையால் அவன் வியர்வையைத் துடைத்துவிட்டாள்,

"சலதி, என்ன நடந்தது?"

அவள் சொன்னாள். நகுலியின் மரணத்தைச்சொன்னாள். களுசேனன் திரிசூலியுடன் ஒரு கூட்டத்தைப்பிரித்து அழைத்துச்சென்றதைச் சொன்னாள் அந்திய மரக்கலமொன்று கடற்கரைக்கு வந்த செய்தி அறிந்து இப்போதைய பெருந்தாய்

குவேனி, சமுதாவுடன் வேறு சிலரையும் அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றிருக்கும் சங்கதியையும் சொன்னாள்.

தாரதத்தன் அவ்விடத்தில் தரிக்கவில்லை. கடற்கரையை நோக்கி ஓடத்தலைப்பட்டான். இராச்சத விருட்சத்தின் கிழ் அவன் தாபித்த லிங்கம் தெரிந்தது.

அவன் குவேனி இருந்தவிடத்தை அணுகியபோது, குவேனியுடன் அந்நியன் ஒருவன் நிற்பதைக்கண்டான். சமுதா சற்று விலகி நிற்பதையும், கடற்கரையில் ஐவர் தயங்கி நிற்பதையும், கடலோரமாக பெரும்படையொன்று இறங்கி நிற்பதையும் அவதானித்துக் கொண்டான்.

"நீ யார்?" என குவேனி விஜயனைக் கேட்டாள்.

அவள் பேசிய எலுமொழி அவனுக்குப் புரிந்தது. அவனது பிராகிருதமொழி போன்றது. அவன் அவள் கேள்விக்கு விடை கூறாமல் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் வெட்கமின்றி அவள் திறந்த மதர்த்த மார்பில் மேய்ந்து, ஒரு கணம் தடுமாறிப் பிரிந்தன.

"யார் நீ?"

"என் பெயர் சிங்ஹல விஜயன் என்றான் அவன். "லாலா நாட்டிலிருந்து வருகிறேன். அந்த நாட்டின் இளவரசன் நான்."

அவனை அவள் ஏறிட்டுப்பார்த்தாள். என்ன நிறம்? என்ன கம்பீரம்? தேவர் குலத்தவனோ?

"இராமரின் நாடா?" எனக்கேட்டாள்.

"ஆமாம். இராமரைப்பற்றித் தெரிந்திருக்கிறியே? இது எந்த நாடு?"

"இராவணன் நாடு .." என்றாள் அவள்.

"இலங்கா புரியா?"

''ஆமாம். நீர் தரித்து நிற்பது தாமிரபர்ணி. வடக்கே இருப்பது நாகதீபம்...'' என்ற குவேனி: ''இங்கு வந்ததன் நோக்கம்?'' — எனக்கேட்டாள்.

''நாங்களாக வரவில்லை. எங்களை ஏற்றி வந்த மரக்கலம் புயலில் அகப்பட்டு இங்கு கரை சேர்ந்துவிட்டது. நாங்கள் ஆரிய வம்சத்தவர்கள். பகியால் எம் கூட வந்தவர்கள் தவிக்கிறார்கள். சில நாட்கள் இவ்விடத்தில் தங்கி இளைப்பாறிச்செல்ல உங்கள் மன்னரிடம் அனுமதி பெறவேண்டும். உங்கள் மன்னன் யார்?''

''மன்னனா? அப்படியென்றால்?''

''தலைவர்... அரசன்..'' என்றான் விஜயன்.

''இவரே எங்கள் பெருந்தாய்...தலைவி...குவேனி...'' என்றாள் சமுதா.

விஜயன் வியப்புடன் அவளைப்பார்த்தான்.

''இந்தக்கூட்டத்திற்கு நான்தான் தலைவி. பெண் தான் இங்கு பெரியவள்.''

''ஆண்கள் தான் எங்கள் சமூகத்தில் முதன்மையானவர்கள். நாங்கள் பெண்களைப் பூக்கள் போலப் பேணுவோம்...''

அவன் வார்த்தைகள் அவள் நெஞ்சில் இனிமையாகப் பதிந்தன. 'பெண்களை நாங்கள் பூக்களாகப் பேணுவோம்.'

''சமுதா, அவர்கள் கடற்கரையில் தங்கட்டும். உணவளியுங்கள்...'' என்றாள் குவேனி.

அந்தவேளையில் தான் தாரதத்தன் அவ்விடத்திற்குப் பிரவேசித்தான்.

''இவர்களை உடனே இந்த மண்ணிலிருந்து அனுப்பிவிடுங்கள், தாயே'' என்றான் துயரத்துடன் தாரதத்தன்.

குவேனி திரும்பிப்பார்த்தாள். அவள் முகம் சந்தோஷத்தால்மலர்ந்தது. உடன் தாயின் இழப்பு ஏற்படுத்திய துயரத்தால் வாடியது. தாரதத்தனை மிகுந்த கவலையுடன் நோக்கினாள்.

'' நடந்ததெல்லாம் தெரியும், தாயே. அந்தக்கொலைகாரன் களுசேனனைத்தங்கள் காலடியில் கட்டி இழுத்து வந்து போடுவேன். அவற்றினைப் பின்னர் பேசுவோம். இப்போது நமக்கு முன்னுள்ள பிரச்சினை இந்த அந்நியர்களை இங்கிருந்து அகற்றிவிடுவதுதான் ... நமது குலத்திற்கும் குல வழக்கத்திற்கும் இல்லாத ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அந்நியர் மூன்நாங்கள் வந்திருக்கிறோம். எனக்கு இந்த நிகழ்ச்சி மகிழ்ச்சியைத் தரவில்லை. இவர்களை அனுப்பிவிடுங்கள் ... '' என்றான் தாரதத்தன்.

'' சிங்ஹல விஜய, இவர் தான் எங்கள் அசுரகுரு தாரதத்தன். '' என அவனை விஜயனுக்கு அவள் அறிமுகப்படுத்திவைத்தாள். தாரதத்தன் சொன்னவற்றினை அவள் செவிமடுத்துக்கேட்டதாகவில்லை.

தாரதத்தன் ஏதோ சொல்ல விழைய குவேனி தடுத்தாள். '' தாரதத்தா, சற்றுப்பொறுமையாக இரு. இவர்கள் நம் மண்ணிற்கு மரக்கலம் உடைந்ததால் வந்திருக்கிறார்கள். சிலநாட்கள் தங்கிவீட்டுத் திரும்பிவிடுவார்கள்... அதுவரையில் கடற்கரையில் இருக்க அனுமதிப்போம் ... ''

'' எங்களைப்பார்த்து உங்கள் அசுரகுரு இவ்வளவு தூரம் கலக்கமடைய நியாயமில்லை. எங்களைப் பார்த்து இவ்வளவு தூரம் பயப்படுவானேன்... '' என்ற விஜயனைத் தாரதத்தன் ஏறிட்டுப்பார்த்தான். அவன் பார்வையின் காங்கை தாளாமல் விஜயன் சிறிது தடுமாறினான்.

'' நீங்கள் யார் என்பதை நானறிவேன்... '' என்றான் தாரதத்தன்.

'' என்ன அறிவீர் ? ''

'' சொந்த நாட்டில் மன்னிக்கமுடியாத தவறுகள் இழைத்ததால், அந்நாட்டிலிருந்து நாடுகடத்தப்பட்டவர்கள். நீங்கள் சொந்த நாட்டில் இருக்கக்கூடாது என்பதற்காக உங்களையும் உங்கள் தோழர் எழுநூறு பேரையும் உங்கள் தந்தையே

தேசப்பிரதிஸ்டம் செய்திருக்கிறார், சொந்த வீட்டிற்கு உதவாதவர்கள், சொந்த நாட்டிற்கு உதவாதவர்கள்... வந்திறங்கிய அந்தியநாட்டிற்கு விசுவாசமாகவா இருக்கப்போகிறார்கள் ?'' என்று சிரித்தான் தாரதத்தன்.

உண்மையில் விஜயன் விதிர்விதிர்த்துப் போனான். நெற்றியில் வியர்வைத்துளிகள் அரும்பின. முகத்தில் கலக்கம் குடிகொண்டது. ஆயிரக்கணக்கான யோசனைக்கு அப்பால் இருக்கும் லாலா நாட்டின் சிங்கபுரத்தலைநகரில் நிகழ்ந்தேறிய நாடகத்தை இங்கு ஒரு அசுரன் அப்படியே சொல்கிறான். மெதுவாகப் பயம் விஜயனைப் பற்றிக்கொண்டது. அசுரர்கள் மந்திர தந்திரம் தெரிந்தவர்கள் என்பதும் பைசாசங்களின் துணை உடையவர்கள் என்பதும் மெய்தானோ ?

''அசுரகுருவே, தாங்கள் மந்திரவாதியோ ?'' என்று வினயமாக அவன் கேட்டான்.

குவேனி தாரதத்தனை மதிப்புடன் பார்த்தாள். அதே வேளை வினயமாகத் தன் முன் நிற்கும் இந்த இளவரசன் குற்றம் செய்தவனா ?

தாரதத்தன் எதுவும் பேசவில்லை.

''இங்கு சிலபொழுது தங்குகிறோம்...'' என்று பவ்வியமாக விஜயன் கேட்டான்.

குவேனி தாரதத்தனைப்பார்த்தாள். குவேனியின் விழிகள் அவனிடம் எதையோ யாசிப்பது போலப்பட்டது.

''தங்கள் சித்தம் தாயே:.'' என்று அவ்விடத்தைவிட்டுத் தாரதத்தன் அகன்றான்.

''தாங்கள் சிலநாட்கள் இங்கு தங்கலாம்...'' என்றாள் குவேனி.

விஜயன் நன்றியுடன் புன்னகைத்தான். கொம்பு ஊதப்பட்டது. கடற்கரையில் அவர்கள் தங்குவதற்கான முகாம்கள் அமைக்கப்பட்டன.

22

அக்கினிக்குண்டத்தின் முன் குவேனி குழுவினர் அமர்ந்திருந்தனர். பன்றி ஒன்றின் இறைச்சி வாட்டப்படுகின்ற மணம் எங்கும் எழுந்தது. கழிவிறைச்சிப்பகுதிகளை வேட்டை நாய்கள் சப்பித்தின்றுகொண்டிருந்தன. இறைச்சி வாட்டப்படும் வாசத்தினால் கவர்ந்திழுக்கப்பட்ட நரிகள் சில காட்டோரத்தில் மறைவாக அமர்ந்திருந்தன.

தாரதத்தன் திடமாகச் சொன்னான்;

" தாயே, இந்த மண்ணில் ஆரியகுலத்தவர்களைத் தங்க விட்டதன் மூலம் நாம் பெரிய தவற்றினைச்செய்து விட்டோம். அவர்கள் பரதவித்து வந்தவர்களாகவில்லை. ஆக்கிரமிக்க வந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பிரயாணிகள் அல்லர். யுத்த வீரர்கள். ஆயுதங்களுடன் தாமிரபர்ணியில் தங்கியிருக்கிறார்கள். இரண்டு நாட்களாகிவிட்டன. அவர்கள் திரும்பிச்செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் மனிதர்களல்லர். நாடு கடத்தப்பட்டு வந்தவர்கள். ஆரியர்கள் அசுர குலத்தவர்களை அழிப்பதற்கு அல்லது கலப்பின் மூலம் ஆரியகுலத்தவராக்குவதற்கு முயல்கிறார்கள் போலப்படுகின்றது. நாகர்கள் தம்

இனத்தில் வடிவத்தினையும் குல ஆசாரங்களையும் இன்னும் ஐந்தாறு தலைமுறைகளில் இழந்துவிடுவார்கள். மலேஷியில் வந்திறங்கியிருக்கும் எழுநூறு ஆரியப்பெண்கள் இலங்கையில் அக்காரியத்தைச். சாதித்துவிடுவார்கள் அதேபோல தாமிரபர்ணியில் வந்திறங்கியிருக்கும் இந்த ஆரியர்கள் இயக்க குலத்தையே இல்லாது செய்து விடுவார்கள்.''

குவேனி எதுவும் பேசாது மௌனம் சாதித்தாள். இரண்டு நாட்களாக அவள் இதயத்தில் கொந்தளிப்புகள். நேற்று மாலை கடற்கரையில் அவன் சிங்ஹல விஜயனைச் சந்தித்தாள். அவன் அவளை ஆவலுடன் ஏறிட்டுப்பார்த்தான்.

''குவேனி...'' என்றழைத்தான் அவன்; ''நீ தாஸ்யுக்கள் (கறுப்பர்) ஆயினும் கவர்ச்சியானவள். எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? உடுக்குப்போன்ற உன் உடல்கட்டு பார்த்தவர்களை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும்...''

அவள் தலை குனிந்து அழகாகச் சிரித்தாள்.

''உங்கள் மக்கட் கூட்டத்தில் எவ்வளவு வர்ணங்கள், சாதிகள் உள்ளன?'' என்று அவன் கேட்டான்.

''சாதிகளா? அப்படியென்றால்...?''

''பிரிவுகள்...?''

''மனிதருள் பிரிவுகளா?'' எனக் குவேனி சிரித்தாள்.

''சஷத்திரியர், பிராமணர், வைசிகர், சூத்திரர் என நான்கு வர்ணப்பிரிவுகள் எம்மிடையே உள்ளன...''

''அப்படியொரு சாதிப்பிரிவு எம் இனத்துக்கு வேண்டவே வேண்டாம். நாங்கள் என்ன மிருகங்களா? மான், மரை, புலி எனப்பிரிப்பதற்கு...? நாங்கள் மனிதர்கள்...''

''நீங்கள் பயிர் செய்வதில்லையா? எவ்வளவு நதிகள்,

வளமாவ பூமி இங்குள்ளன .. '' என்று கேட்ட விஜயனைக் குவேனி ஏறிட்டுப் பார்த்தாள்.

'' நீ கேட்பது எனக்கு விளங்கவில்லை. '' என்றாள் குவேனி.

சமுத்திரத்தில் சரிந்து கொண்டிருந்த கதிரவனின் ஒளியில் வெற்றுடம்பு தகதகவெனப்பிரகாசித்தது. முறுக்கேறிய அவன் உடலை அவள் பார்த்தாள்.

'' என்ன அப்படிப்பார்க்கிறாய் ? ''

'' நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் ? இப்படியொரு நிறமா ? நெருப்புப்போல உன் நிறம் பிரகாசிக்கிறது. உன்னை நான் தொட்டுப்பார்க்கலாமா, விஜய... ''

குவேனி தவறு செய்தாள். லாலா நாட்டிலிருந்து எக் காரணத்துக்காக விஜயனையும் அவன் தோழர்களையும் அரசன் நாடுகடத்தினானோ அக்காரியத்தை மீண்டும் புரிய குவேனி வலிந்து காரணமானாள்.

அக்கினி கொழுந்துவிட்டெரிந்தது. சலதி காய்த்த கொள்ளி யொன்றினைத் தூக்கி குண்டத்திலிட்டாள்.

'' தாயே, நாங்கள் கேட்பது புரியவில்லையா ? ''என தார தத்தன் கேட்டான்.

குவேனி தன்னைச் சிலிர்த்துக்கொண்டு அவர்களை ஏறிட் டுப் பார்த்தாள்.

'' என்ன கேட்டாய் ?

'' அவர்களை இங்கிருந்து அனுப்பவேண்டும். ''

'' எப்படி அனுப்புவது... ? ''

'' காலக்கெடு கொடுப்போம். அதற்கு அவர்கள் தவறில் விரட்டியடிப்போம், ''

''அவர்கள் எழுநூறு பேர்? ஆயுதபாணிகள்...''

''அவர்கள் எத்தனை பேராயினும் அச்சமில்லை. எல்லா இயக்கக் குழுக்களுக்கும் அறிவிப்போம். திரிகூட, அரித்துகிரி, யக்குரகல, லக்கல, நிகும்பிலாவனக், விந்தனை முதலான எல்லா இயக்கக்குழுக்களுக்கும் அறிவித்து உதவி கோருவோம். அவர் களைத் தாக்கித் துரத்துவோம்...'' என்றான் சமுதா.

குவேனிக்குத்தன்கூட்டமே தனக்கு எதிராக நிற்பது போலப்பட்டது. சிறிது எரிச்சல் தோன்றியது.

''சமுதா, ஏன் மகாகளுசேனனை விட்டுவிட்டாய்?''

''தேவையாயின் அவனையும் சேர்த்துக்கொள்வோம்...''

என்ற சமுதாவைக் கோபத்துடன் பார்த்தாள் குவேனி: விழிக ளில் நெருப்புப் பொறிகள்,

''என்ன நினைத்திருக்கிறாய், சமுதா. ஜாக்கிரதை. என் கொடிய தண்டனைக்கு நீ ஆளாகிவிடாதே...''

''மன்னியுங்கள் தாயே...'' என்று சமுதா பணிந்தான்.

''என் தாயைக் கொலை செய்து என் கூட்டத்தினரில் ஒரு பகுதியைத் தன்னுடன் அழைத்துச் சென்ற களுசேனனைப் பழிவாங்காமல் விடமாட்டேன். என்னை மோசம் செய்து அவனுடன் சென்ற கூட்டத்தினர் அத்தனை பேரையும் இவ்வுல கிலிருந்து அனுப்பாமல் விடமாட்டேன். அதற்காகத் தான் அந்த ஆரிய வீரர்களை இங்கு தங்க அனுமதித்திருக்கி றேன்.'' என்றாள் குவேனி, திடமாக.

இருப்பதைவிட்டு எழுந்து நின்றாள்

''எல்லாருக்கும் இன்று திடமாகச் சொல்கிறேன். என் எண்ணத்திற்கு மாறாக எவராவது நடக்க விரும்பினால். அவர்கள் இருக்கக்கூடாது. இங்கிருந்து வெளியேறிவிடலாம்.

அதற்கு நான் அனுமதிப்பேன். அசுரகுருவே, உமக்கும் இது பொருந்தும்... '' என்றவாறு தன் குடிலிற்குள் புகுந்து கொண்டாள்.

நாரதத்தன் இப்படியான ஒரு பதிலைப் பெருந்தாயிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. திக்கித்து விறைத்து நின்றான். பின்னர் அவ்விடத்தைவிட்டு எழுந்து கொணாநதிக்கரையில் அமர்ந்து கொண்டான்.

எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தானோ தெரியாது. சலதி மெதுவாக வந்து அவன் தோளில் கரம் பதித்த போதுதான் சுய நினைவு வந்தது. திமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் துயரத்தைப் பகிர ஒரு ஆத்மா வேண்டும்.

அவளை இப்படியே இழுத்து தன் நெஞ்சோடு இறுகத் தழுவிக்கொண்டான். அவன் விழிகள் நீரைச் சொரிந்தன. சலதியின் கரங்கள் அவனை ஆதரவாக அணைத்துக் கொண்டன.



23

கூடாரத்தைவிட்டு வெளியே வந்தபோது காட்டோரத்தில் பெரியதொரு மரக்குற்றியில் ஆஜானுபாகுவான மனிதன் ஒருவன் அமர்ந்திருந்து தங்களை அவதானித்துக் கொண்டிருப்பதைக் கண்டான், புரோஹித புத்திரனான உய்யினி. அவன் யாராக இருக்கும்? சிங்ஹல விஜயன் வர்ணித்த அசுரகுருவோ? அவர்கள் யார் என்பதை அச்சுப்பிசகாமல் எடுத்துக் கூறினானாமே?

"நாடுகடத்தப்பட்ட குற்றவாளிகள். வீட்டிற்கு உதவாதவர்கள், தமது நாட்டிற்குதவாதவர்கள், நமக்கா உதவப் போகிறார்கள்...?"

எவ்வளவு தெளிவாகக் கூறியிருக்கிறான்? அங்கு நடந்தவை இவ்வளவு யோசனை தூரத்திற்கு இப்பால், தனித்துப் பிரிக்கப்பட்ட திவொன்றில் இருக்கின்ற இந்த அசுரகுருவிற்கு எப்படித் தெரிய வந்திருக்கும்? உண்மையில் புரோகிதபுத்திரன் வியப்படைந்திருந்தான். அசுரகுருவுடன் பேசிப்பார்க்க வேண்டுமென்ற ஆவலும் எழுந்தது. காட்டோரத்தை நோக்கி நடக்கவும் தொடங்கினான்.

அவன் தன்னை நோக்கி வருவதைத் தாரதத்தன் கண் டான். இந்த அதிகாலையில் அவன் ஏன் வரவேண்டும் ?

குவேனியைக் குடிலில் இரவு காணவில்லை என்றாள் சலதி. அவன் மனம் தீயிலகப்பட்ட சருகானது. அப்படிப்பட்ட உறவும் ஆரம்பமாகிவிட்டதோ ? ஒருநாள் கொணா நதிக்கரை யில் குவேனி அவனிடம் சொல்லிய வார்த்தைகளின் அர்த்தம் இப்படியா இருக்கும் ?

" ஏனோ எனக்கு உன்னைப்பிடிக்கவில்லை. இந்தக் கூட் டத்திலுள்ள ஒரு இளைஞனையும் பிடிக்கவில்லை. உங்களது கரிய நிறம் எனக்குப்பிடிக்கவில்லை . "

அவன் கூட்டத்திற்குப் பெருநாசம் வந்திருக்கின்றது. அவன் கூட்டத்திற்கு மட்டுமல்ல. இந்த மண்ணில் வாழ்கின்ற அனைத்து குழுக்களுக்கும் தீங்கு வந்திருக்கின்றது. ஆரியரின் மண்ணாசைக்கு அளவில்லை என்பதை அவன் அறிவான். மன்னன் , இராச்சியம் , சக்கரவர்த்தி , சாம்ராச்சியம் என அவர்கள் ஆசை விரிந்து செல்லும்.

உய்யினி அவன் முன் வந்து நின்றான்.

" நீர் தான் அசுரகுரு தாரதத்தனாக இருக்கும் என நினைக்கிறேன். என் மதிப்புள்ள வணக்கம்... " என்றான் உய்யினி; " என் பெயர் உய்யினி. " புரோகித புத்திரன். "

" அப்படியெனில் இவர்களின் தேவகுரு நீங்கள் . " என் றான் தாரதத்தன்.

இவன் பலதும் அறிந்தவன் என உய்யினி எண்ணிக் கொண்டான்.

" அப்படியன்று... வெறும் உய்யினி தான். இராச்சியத் தினை தாபித்து , லாலா நாட்டு இளவரசன் சிங்ஹல விஜயன் முடிசூடிக்கொண்டதும் தான் , குருப்பட்டம் சிலவேளைகளில் எனக்கு வரலாம். புரோகித புத்திரன் நான் ஒருவனே இக்கூட் டத்திலுள்ளேன். "

''இராச்சியத்தை எங்க தாபிக்கப்போகிறீர்கள் ?''

''இந்த நாட்டின் எங்காவது ஒரு பகுதியில்... இயக்கக் குழுக்கள் எங்களுடன் சேர ஒப்புக்கொண்டால் அவர்களையும் இணைத்துக்கொள்வோம். உங்கள் தலைவி குவேனி ஒப்புக் கொண்டதாக அறிகிறேன். பெரும்பாலும் நாம் தாபிக்கும் இராச்சியத்தின் முதல் ராணியாக சிம்மாசனமேறுவார்.''

தாரதத்தன் நிமிர்ந்து உட்கார்ந்தான். இதயத்தில் பெரும் ஊழிக்காலத் தாண்டவம். தன்னை அடக்கிக்கொண்டான்.

''அப்படியாயின் மன்னன் யார் ?''

''இதென்ன கேள்வி. அசுரகுருவே ? நமது இளவரசர் சிங்ஹல விஜயன் தான். அவரைவிடத் தகுதியானவர்கள் வேறு யார் இருக்கிறார்கள் ?''

''இந்த நாடு ஆரியருடையதன்று...''

''அதனால் என்ன ? நாங்கள் உங்களுடன் சேர்ந்து வாழ வந்திருக்கின்றோம். பாரதத்தில் ஆரியர்கள் அப்பிரதேச மக்களுடன் இணைந்து வாழவில்லையா ? நாங்கள் இங்கு வந்தால். ஆரிய குல ஒழுக்கங்கள், அவர்களது கலாச்சாரங்கள் வழக்கம், ஆசாரம், சம்பிரதாயம், சட்டம் என்பன உங்களை மேன்மைப்படுத்தும். நீங்களும் எங்கள் மாதிரி நாகரீகம் அடைவீர்கள்...'' என்ற உய்யினியைத் தாரதத்தன் ஏளனமாகப் பார்த்தான்.

''குலதருமம் என்பதற்கு ஒரு சமூகத்தைக் கட்டுப்படுத்தப் பழக்கி, அவர்களது சுயேச்சையைப்போக்கி சம்பிரதாயங்களுக்கு அடிமையாக்குவது தான் உங்கள் தர்மம். உங்கள் ஆசாரம். தனிமனித உணர்வினை ஏற்படுத்துவது உங்கள் கலாசாரம். எங்களது அப்படியன்று .. எங்களுக்கு ஏதுவும் பொது... தனி உரிமை நாங்கள் பாராட்டுவதில்லை. ஒன்றாக உழைத்து. சமமாகப் பகிர்ந்து, எல்லாரும் பசியாற உண்டு மகிழ்வோம், உங்கள் ஆரிய நாகரீகத்திற்கும் பார்க்க எங்களது திராவிட நாகரீகம் குறைந்ததன்று''

'' நீங்கள் வேட்டையாடுபவர்கள் ... ''

'' தாமிரபர்ணியில் வாழ்கின்ற குழுவினர் அப்படியிருக்கலாம். ஆனால் வடக்கே நாகதீபத்தில் வாழ்கின்ற குழுவினர் பயிர்செய்கிறார்கள். நதிகளுக்குக் குறுக்கே அணைகளைக்கட்டி நீர்த்தேக்கங்களை உருவாக்கிப் பயிர்செய்கிறார்கள்... ''

'' பொய். நம்பமுடியாது. பயிர்ச்செய்கை ஆரியகுலத்திற் குரியது... ''

'' நானேன் உமக்குப் பொய் சொல்ல வேண்டும்? உங்களிலும் பார்க்க மேம்பட்ட ஒரு நாகரீகம் நாகதீபத்தில் இருக்கின்றது, தேவகுருவே. இலங்காபுரிக்கு நீங்கள் தான் பயிர்ச்செய்கையையும் அதனையொத்த புதுமைகளையும் அறிமுகப்படுத்த வந்ததாக எண்ண வேண்டாம். அவை எமக்குத் தெரிந்தவை தான். ஆனால் அவற்றினை நாங்கள் விரும்பவில்லை. இப்படியே வாழ்ந்து முடித்துவிட விரும்புகிறோம்... எங்களை அப்படியே விட்டுவிடுங்கள், இங்கிருந்துபோய் விடுங்கள்.''

'' அசுரகுருவே , அதனை தீர்மானிக்க வேண்டியவர்கள்... எங்கள் இளவரசனும் உங்கள் பெருந்தாயும்... ''

அவர்கள் இருவருக்குமிடையில் சற்று நேரம் மௌனம் நிலவியது. தாரதத்தன் தூர வெறிக்கப்பார்த்தான். குவேனியும் விஜயனும் காட்டோரமாக நடந்து செல்வது தெரிந்தது. அவலமாக மயில்கள் அகவின. காட்டெருமைகளின் கதறலும் கேட்டது.

நீண்டதொரு பெருமூச்சு அவனில் எழுந்து அடங்கியது.

'' உங்கள் அறநெறி என்ன? '' என்று உய்யினி கேட்டான்.

'' எல்லாருக்கும் எல்லாம் சொந்தம். ஆனால் நாங்கள் எதற்கும் உரிமை பாராட்டுவதில்லை. இயற்கைதான் எங்கள் அறநெறி. '' என்றான் தாரதத்தன். '' இயற்கை விதி தான் எங்களது தருமம். உங்கள் மாதிரி... '' என்று சற்று நிறுத்தினான், தாரதத்தன்.

''சொல்லும் அசுரகுருவே...''

', உங்கள் மாதிரி அரசவிதி, சமூகவிதி, சமயவிதி, வருண அறச்செயல்கள், ஆச்சிரம அறச்செயல்கள், சாமானிய அறச் செயல்கள் என எதுவும் எங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. மனச்சாட்சி ஒன்று தான் கட்டுப்படுத்தும். பிறருக்குத் தீமை யில்லாத இன்பம் தரும் செயல்கள் எல்லாம் எமது குல ஆசா ரங்கள் தாம்...''

உய்யினி நாரதத்தனை மதிப்புடன் பார்த்தான்.

''அசுரகுருவே, இவற்றினை எல்லாம் எங்ஙு கற்றீர்?'' என்று வியப்புடன் கேட்டான்.

''நாகதிபத்தின் வேதைகளிடமிருந்து கேள்வி ஞானமாகக் கற்றேன்.''

''நாகர்களிடம் வருணவேறுபாடுள்ளதா?''

''இன்னமும் இல்லை. ஆனால் தொழில் அடிப்படையில் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றிவருவதை அவதா னித்தேன்.''

''ஒரு சமூகத்தில் ஆரியகுல ஆசாரப்படி நான்கு வருணங் கள் இருப்பது நல்லது எனக் கருதுகிறேன். அவரவர் குலங்க ளையும் செயல்களையும் கொண்டு இந்த வருணங்கள் வகுக்கப் பட்டுள்ளன, நாரதத்தரே. பிராமணன் அறிவை வளர்ப்பவன். சத்துவம் மிகுந்தவன், சஷத்திரியன் சமூகத்தை ஆயுதம் ஏந் திப் பாதுகாப்பவன். ராஜசம் மிகுந்தவன். வைசிகன் சமூகத் திற்குப் பொருள் தேடித்தருப்வன். தாமசம் மிகுந்தவன், சூத் திரன் உடல் உழைப்பை வழங்குப்பிறந்தவன். சத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய மூன்று குணங்களும் சூத்திரனுக் கில்லை..''

"பிறப்பால் வருணம் வந்துவிடாது;" என்றான் தாரதத்தன்.

"ஆமாம். பிராமணனாகப் பிறந்தாலும் வேதம் கற்காதவன் பிராமணன் அல்லன். சூத்திரன் கூட ஒழுக்கத்தால் பிராமணன் ஆகலாம் என மனுஸ்மிருதி கூறுகிறது..."

"எங்களிடம் இவ்வாறெல்லாமில்லை. எல்லாரும் உழைப்பவர்கள். எல்லாரும் ஒருங்கே உண்பவர்கள். எங்களில் பட்டினி கிடப்பவர்களில்லை. ஆண், பெண் வேறுபாடின்றி ஒருங்கே ஆயுதம் ஏந்தி பகைவர்களிடமிருந்தும் விலங்குகளிடமிருந்தும் காத்துக்கொள்பவர்கள். எல்லாரும் எல்லாம் செய்து கொள்கின்ற சமூகம் எங்களுடையது, ஐயா."

உய்யினி எழுந்திருந்தான்.

"தாரதத்தரே, மெய்யாகவே சொல்கிறேன்... நீர் வேத குருவாக இருக்கவும் தகுதியானவர்."

24

படை புறப்பட்டு விட்டது. அனுராதன் தலைமையில் ஆரியர்கள் நூறுபேர் அணிவகுத்துச் சென்றனர். சமுதா தலைமையில் அக் கூட்டத்தில் தெரிந்தெடுத்த முப்பது பேர் சென்றனர். சமுதா வழிகாட்டி அழைத்துச் சென்றான்.

" களுசேனனையும் அவன் கூட்டத்தாரையும் ஈவிரக்கமின்றி அழித்து விடுங்கள்.

எங்கள் பெருந்தாயைக்கொன்று எங்களைவிட்டுப் பிரிந்த அந்தக் கூட்டத்தினருக்கு நான் வழங்கும் தண்டனை இதுதான். எவரும் மிஞ்சக் கூடாது .. " எனக் குவேனி கட்டளையிட்டாள்.

" தாயே, சற்று யோசியுங்கள். குற்றவாளி களுசேனன் மட்டுந்தான் அப்பாவிகளான ஏனையோரையும் அழிப்பது தருமமல்ல. " என்றான் தர்ரதத்தன்.

அவனைக் குவேனி கோபத்துடன் பார்த்தாள்.

" தாரதத்தா, உன்னால் அவர்கள் மீது படையெடுக்க முடியாது என்றதால் சமுதா செல்கிறான்... "

தாரதத்தன் எதுவும் பேசவில்லை. களுசேனன் தண்டிக்கப் படவேண்டியவன் என்பதில் அவனுக்கு கருத்து வேறுபாடில்லை. ஓரினத்தைச் சேர்ந்தவர்களைத் தண்டிப்பதற்காக எங்கிருந்தோ வந்த ஆரியரின் துணையை நாடுவதா? இது எவ்வளவு ஆபத் தானது. அதனை உணரும் நிலையில் குவேனி இப்போது இல்லை. சிங்ஹல விஜயன் காதல் போதையில் அவள் சிக்கிவிட்டாள். அவன் அணைப்பின் சுகத்தை அவள் இழக்கத் தயாரில்லை. அந்தச் சுகத்திற்காக அவள் என்ன விலையும் கொடுக்கத் தயாராகி விட்டாள் என்பதைத் தாரதத்தன் விளங் கிக் கொண்டான்.

உண்மையும் அதுதான். விஜயனின் காதல் போதையில் குவேனி சிக்கிக்கொண்டாள்.

"ஆரியகுமாரா, எனக்கு நீ வேண்டும். அதற்காக என் அரசையே உனக்குச் சமர்ப்பிப்பேன். என் கூட்டத் தார் அனைவரும் உனக்குரியவர்கள்..."

"குவேனி, என் உயிரே... லங்காவின் பல திக்குகளிலு முள்ள இயக்கர்களை உனக்காக வென்று மாபெரும் இராட்சி யத்தின் தலைவியாக உன்னை ஆக்குவதுதான் என் வேலை. அதுவரை என் கண்கள் உறங்காது..." என்றான்.

"முதலில், மகாவில்லாச்சியை அடுத்துள்ள பகுதியில் கரைந்துறையும் மகாகளுசேனன் குழுவினரை அழிக்க வேண் டும்...."

"அப்படியே செய்வோம். இனிய பொழுதை வீணாக் காதே, குவேனி. வா... இராட்சியத்தை உருவாக்கும் பணியை என் தோழர்கள் செய்வார்கள்."

"விஜய குமாரா, லங்கா மட்டுமல்ல... வடபாகத்திலுள்ள நாகதீபமும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். என் முன்னோன் இராவணன் ஆண்டது போல, முழு இலங்காபுரிக்கும் சிங் ஹல விஜயன் மாமன்னனாக வேண்டும்." என்றாள் மயக் கத்தில் குவேனி.

''அதனைப் பின்னர் சிந்திப்போம். உன் அழகால் என் சிந்தனை சிந்திக்கும் சக்தியை இழந்து விட்டது. வா என் தாஸ்ய ராணி...'' என்றான் விஜயன்.

குவேனிக்கு ஆரியன் வேண்டும் அவள் சபலத்தின் விளைவாக அவள் குலத்தினர் அழித்தொழிந்து அடிமைப்பட்டாலும் பரவாயில்லை. அவளுடன் திரிசூலியையும் கூட்டத்தினரையும் அழிக்கப் படை புறப்பட்டுவிட்டது.

''எவரும் அக்கூட்டத்தில் எஞ்சக்கூடாது...'' என்று கட்டளையிட்டாள் குவேனி.

அவளது கட்டளைக்கு மாறாக சிங்ஹல விஜயன், அனுராதனுக்குத் திடமான உத்தரவுகளைப்பிறப்பித்தான்.

''அனுராதா, மிக்க கவனமாகச் செயற்படு. அக்கூட்டத்தினரில் ஆண்கள் எவரும் எஞ்சக்கூடாது. இளைஞர், வயோதிபர், சிறுவர். குழந்தைகள் யாராகவிருந்தாலும் ஆண்களாயின் முற்றாக அழித்துவிடு. சண்டையின் இறுதியில் எஞ்சுகின்ற பெண்களை ஆரிய வீரர்களுக்குப் பங்கீடு செய்து விடு. கைப்பற்றிய பிரதேசத்தில் நீங்கள் நூறுபேரும் தங்கி. புதிய தொரு ஆரியக் குடியிருப்பினை அமை. நீ அங்கேயே தங்கியிரு. உன் உதவி தேவைப்படும்போது செய்தி அனுப்புவேன்.

லாலா நாட்டின் தலைநகர் சிங்கபுரம் மாதிரி நீ உருவாக்கும் குடியிருப்புப் பிரதேசம் உன் பெயரால் அனுராதகாமமாகட்டும்.''

மூன்றாம் நாள் மாலைப்பொழுதில் களுசேனனின் குடியிருப்பின் மீது திடீரென ஆரியவீரர்களும் குவேனியின் ஆட்களும் பாய்ந்தனர். அவர்கள் இப்படையெடுப்பு நிகழும் என எதிர்பார்த்தவர்களல்லர். களுசேனன் மிக ஆடம்பரமாகத் திரிசூலியைக் கரம் பற்றுகின்ற நிகழ்வின் பொழுது இப்படையெடுப்பு நிகழ்ந்தது. மகாகளுசேனன் எவ்வளவு தோராடியும் நெருங்கி நின்று சண்டையிடும் ஆயுத வீரர்களை அவனால் வெல்ல முடியவில்லை. அவர்கள் வாள்களால் தாக்கியபோது

களுசேனனின் பக்கத்தில் அதிகம் அழிவு ஏற்பட்டது. களுசேனன் அனுராதனின் வாளுக்கிரையாகி விழுந்தான்.

களுசேனனின் மரணத்துடன் அவன் கூட்டத்தினர் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்களின் ஆயுதங்கள் களையப்பட்டன. திரிசூலி மிக்க வெறுப்புடன் சமுதாவைப் பார்த்தாள். சமுதா தலையைக் குனிந்து கொண்டான். அவன் கூட்டத்தினருடன் உண்டு உறங்கியவர்களை ஆரிய வீரர்கள் வாள்களினால் வெட்டியும் குத்தியும் கொன்ற போது வேதனையால் சமுதா துடித்துப் போனான். அவர்கள் எழுப்பிய மரண ஓலங்கள் அவன் இதயத்தை கசக்கிப் பிழிந்தன.

''பெண்கள் அனைவரையும் வேறாக்குங்கள். ஆண்கள் அனைவரையும் வேறாக்கி அழைத்துச் செல்லுங்கள். என்றான் அனுராதன்.

ஏதோ அசம்பாவிதம் நடக்கப்போகின்றது என்பதை சமுதா தெரிந்து கொண்டான். பெண்களின் கரங்களிலிருந்து ஆண் குழந்தைகளை ஆரிய வீரர்கள் பறித்து எடுத்தனர். அவர்கள் கதறியபோது பெண்களைத், தள்ளிவிட்டனர்.

''ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?'' எனச் சமுதா அனுராதனைக் கேட்டான்.

''அது ஆரிய யுத்த தர்மம். சிறைப்பட்ட ஆண்கள் எவரையும் நாங்கள் விடுவதில்லை.''

''அநியாயம்...'' என்றான் விம்மலுடன் சமுதா.

ஆடவரை வரிசையாக அழைத்துச் சென்றனர். பெண்கள் பெருங்குரலில் ஓலமிட்டனர். தூரத்தில் மரண ஓலங்கள் எழுந்தன. என்ன நடக்கின்றது எனச் சமுதா புரிந்து கொண்டான். விழிகள் கலங்கித்தாரைதாரையாக நீரைச்சொரிந்தன.

அவர்களுக்கெதிராக அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவர்களின் பெருந்தாய் பிழைசெய்துவிட்டாள். அந்நியர் களுக்கு உண்ண உணவும் இருக்கவிடமும் கொடுத்ததோடு, தன்னையும் வழங்கிப் பெருந்தவற்றினைச் செய்து விட்டாள். இந்த வெறிபிடித்த ஆரியர்கள் இயக்க குலப்பெண்களைப் பெண்டாளப்போகிறார்கள். அவர்களின் இனமே அழியப் போகின்றது.

'' சமூதா, நீங்கள் இனி உங்கள் இருப்பிடத்திற்குத் திரும் பிச் செல்லலாம்.''

'' நீங்கள்.. ? ''

'' நாங்கள் இங்கேயே தங்கிவிடப் போகின்றோம். இவ் விடத்தில் பெரியதொரு குடியிருப்பினை உருவாக்கிக்கொள்ளப் போகின்றோம். என்றான் அனுராதன்.

'' இயக்கப்பெண்களை நாங்கள் கூட்டிச்செல்லலாமா ? '' என்ற சமூதாவைப்பார்த்து, ஆரிய வீரர்கள் பெரிதாகச் சிரித் தனர்.

'' பெண்களில்லாமல் ஒரு குடியிருப்பா ? அவர்கள் இனி எங்களுடன் பாதுகாப்பாக இருப்பார்கள். ஆரிய வீரன் ஒரு வனுக்கு வாழ்க்கைப்படும்போது ஆரியப் பெண்களாகிவிடு வார்கள்... '' என்றான் அனுராதன்.



25

தாமிரபர்ணியில் மேலும் ஒரு திங்கள் கழிந்தது.

ஆரியரில் ஐந்து படைப்பிரிவுகள் நாலாதிக்குகளுக்கும் அனுப்பப்பட்டன. உபதிசன் தலைமையில் ஆரியப்படை அரித்தகிரிக்குச் செல்ல. உய்யினி, நிகும்பிலாவனத்திற்குப் படை நடத்திச்சென்றான். உருவெலவின் தலைமையில் துமரக்க, விந்தனைப்பகுதிகளுக்குப் படை சென்றது. விஜித்தா மகியங்கனைக்கு ஆரியப்படையுடன் சென்றான்.

சென்றவிடமெல்லாம் ஆரியப்படை வெற்றிகளைத் தழுவிக் கொண்டது. அமைதியான வாழ்க்கையை நடாத்திய இயக்க மக்கள், ஆரியரின் ஆயுதங்களின் முன் நிற்க முடியவில்லை. அவர்கள் இலங்காபுரியின் பலபகுதிகளுக்கும் சென்று தமது வெற்றிக்கொடிகளை நாட்டினர்.

சிங்ஹல விஜயன் தாமிரபர்ணிக்கடற்கரையில் தனது பெரும் குடியிருப்பினை அமைத்துக்கொண்டான். நூறு ஆரிய வீரர்களுடன் அங்கு தங்கி நின்றான். வெற்றி செய்திகள் வரவர அவன் மகிழ்ச்சியில் திழைத்தான் அவன் மகிழ்ச்சியில் குவேனியும் கலந்து கொண்டாள்.

அசுரகுரு தாரதத்தன் நிலைகுலைந்து போனான். இயக்க குலத்தின் அழிவில் ஆரியர்கள் இந்த மண்ணில் நிலை கொள்வதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பெருந்தாயின் கட்டளைகளை அவனால் மீறவும் முடியவில்லை.

ஒருநாள் அதிகாலை குவேனி வெளியில் வந்தபோது, இன்னொரு குடிலில் இருந்து தாரதத்தனும் சலதியும் வெளியில் வந்தனர். அடங்கா வியப்பும் அதேவேளை இனந்தெரிந்த கவலையும் குவேனியை ஆட்கொண்டது.

''தாயே, சலதி என்னைத் தெரிந்தெடுத்துக்கொண்டாள்...'' என்றான் தாரதத்தன்.

குவேனி சற்று நேரம் எதுவும் பேசவில்லை. முகத்தில் மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள் குடிகொள்ளவில்லை. என்றாலும் தன் கவலையை மறைத்துக்கொண்டாள்.

அவள் கவலைப்பட என்னவிருக்கிறது? அவள் அணைப்பில் சிங்ஹல விஜயன் கட்டுண்டு கிடக்கும்போது இந்த தாரதத்தன் எம்மட்டு? இலங்காபுரி முழுவதற்கும் அவள் மகாராணியாகப் போகிறாள். சிறியதொரு குழுவிற்குத் தலைவியாக இருப்பதிலும் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் மகாராணியாக இருப்பது எல்வளவு பெரிய விசயம்? அதனைத் தாரதத்தனால் தர முடியாது, ஆரியவிஜயனால் தான் தரமுடியும். அவர்கள் தான் எவ்வளவு பலசாலிகள்? எவ்வளவு மேதாவிகள்?

''தாயே, நீங்கள் நடந்து கொள்வது சரியாகவில்லை.'' என்றான் அவன்.

''எப்படி?...'' எனக் குவேனி அவனை ஏளனமாகப் பார்த்தான்.

''அந்நியனுடன் உண்டு உறங்குவது...''

''அதில் என்ன தவறு? நீ சலதியுடன் உண்டு உறங்கலாம் என்றால் நான் ஆரியருடன் உறங்குவதில் என்ன தவறு, தாரதத்தா? இந்த மண்ணிற்கு இதுவொன்றும் புதிதல்ல. நாக

மன்னன் மகள் பீலிவளையைச் சோள இளவரசன் ஒருவன் மணந்தான். அல்லியை அர்ச்சுனன் இங்குவந்து மணந்தான். வள்ளியை, ஸ்கந்தன் இங்குவந்து மணந்தான். மறந்துவிட்டாயா? அவர்கள் இனிமேல் எங்கள் கூட்டத்துடன் தான் இருக்கப்போகிறார்கள்.''

''வேண்டாம் தாயே, வேண்டாம். விஜயனை நீங்கள் மணந்து இந்த மண்ணில் ஆரியவம்சம் நிலைபெறக்காரணமாகிவிடாதிர்கள். வருங்கால சமூகம் உங்களைப் பழி சொல்ல வைத்துவிடாதிர்கள். அவர்களை இந்த நாட்டைவிட்டு வெளியேற்றிவீடுங்கள்.

குவேனி அவனைப்பார்த்துச் சிரித்தாள்.

''எவ்வளவு காலந்தான் நாங்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்வது? அவர்களின் நாகரீகம் எங்களுக்கு வேண்டாமா? புதுமைகள் வேண்டாமா? மாற்றம் அவசியம், தாரதத்தா. காடுகளில் அலைந்து வேட்டையாடி உண்பதிலும் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி உணவினை உற்பத்தி செய்து உண்பது எவ்வளவு இனிமையானது?...''

தாரதத்தன் ஏதோ கூற முயன்ற வேளையில், சமுதா வியர்த்து விறுவிறுத்து அவ்விடத்திற்கு ஓடிவந்தான். அவன் உடலில் காயங்கள் காணப்பட்டன.

''மோசம் போனோம் தாயே?...'' என்றான் இளைத்தபடி சமுதா.

தாரதத்தன் அவனைத் தன்னுடன் தாங்கிக்கொண்டான்.

''நடந்ததைச்சொல்...''

சமுதா அனைத்தையும் சொன்னான். ஆரியரின் யுத்த முறையைச் சொன்னான். இயக்க குழுக்களில் ஆண்கள் எவரையும் அவர்கள் எஞ்சவிடவில்லை என்பதைச்சொன்னான். தாயின் அணைப்பில் இருந்த பால்குடிப்பிள்ளைகளைக் கூட, அது ஆண்பிள்ளையாயின் பறித்து எடுத்து நிலத்தில் மோதிக்

கொன்றார்கள் என்றான். பெண்களை அவர்கள் தமதாக்கி கொண்டதையும் சொன்னான்.

'' எங்களை மீண்டு செல்லுமாறு கூறினர். நாங்கள் திரும்பி வரும் வழியில் மறைந்திருந்து எங்களைத் தாக்கி அழித்தனர். என்னுடன் வந்த அனைவரும் கொல்லப்பட்டனர். நான் எப்படியோ தப்பி வந்துவிட்டேன்... '' என்றான் சமுதா.

குவேனி அப்படியே நிலைகுலைந்து இருந்துவிட்டாள். தாரதத்தன் வெறுப்புடனும் கோபத்துடனும் குவேனியைப் பார்த்தான். அவன் பார்வையில் அற்ப பாவ ஜன்மம் ஒன்றினைப்பார்க்கின்ற உணர்வு.

'' உன்னுடைய அற்ப ஆசையால், கண்ணவிந்த காமத்தால் வந்த வினை '' என்பது போல அவன் பார்வையிருந்தது.

அவள் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டாள்.

'' பெரும் இராச்சியத்தை நிர்மாணிக்கும் போது இப்படியான தவறுகள் நடக்கத்தான் செய்யும். களுசேனன் கூட்டத்திற்கு அது ஏற்ற தண்டனை தான் _ ''

'' களுசேனன் கூட்டத்திற்கு மட்டுமல்ல, தாயே. அனைத்துக் குழுக்களுக்கும் இந்த நிலைதான். இயக்ககுழுக்களில் இப்போது ஆண்களே இல்லை... '' என்று விம்மினான் சமுதா.

'' அப்படியிருக்காது... அப்படி நடந்திருக்காது... நான் இது பற்றி சிங்ஹல விஜயனுடன் பேசுகிறேன். அது வரை பொறுமையாக இருங்கள்... ''

அவள் எழுந்திருந்தாள். கடற்கரையை நோக்கி விஜயனின் பெருங்குடிலை நோக்கி நடந்தாள். அவளை எவரும் பின் தொடரவில்லை.

'' இப்பெருந்தாய் இன்று செய்த இத்தவற்றால் நமது இனம் காலம்காலமாக அழப்போகின்றது... '' என்ற தாரதத்

தனை எல்லாரும் சூழ்ந்து கொண்டனர். தங்கள் இனியவர் களை இழந்தவர்கள் கண்ணீர் விட்டனர்.

'' அசுரகுருவே , நீங்கள்தான் வழிசொல்ல வேண்டும். எங்களுக்கும் ஏனையவர்களுக்கு நிகழ்ந்தது நிகழாது என் பதற்கு என்ன நிச்சயம் ? '' என்று சமுதா கேட்டான்.

'' நான் முடிவு செய்துவிட்டேன்... '' என்றான் தாரதத் தன்.

'' அவர்களை எதிர்ப்பதென்றா ? ''

'' அவர்களை இங்கிருக்கின்ற அறுபது எண்பது பேர் எதிர்த்து வெல்ல முடியாது. எமது இனத்தைக் காப்பாற்றிக் கொள்ள, இவ்விடத்தைவிட்டு வெளியேறுவதென்று... ''

'' அசுரகுருவே, உங்களுடன் எங்களையும் அழைத்துச்செல் லுங்கள். '? என்று எல்லாரும் ஓலமிட்டனர்.

'' எங்கு செல்வது ? அவர்கள் எங்களைத் தொடர்ந்துவந்து அழிக்கமாட்டார்களா ? '' என்று சலதி வினவினாள்.

'' நாங்கள் நாகதீபத்திற்குச் செல்வோம். அங்கு எங்களை வரவேற்றுக்கொள்வார்கள். ஆரியர்களால் நாகதீபத்தினை எதுவும் செய்ய முடியாது. அது பலமான அரசுகளைக்கொண் டது... ''

தாரதத்தன் இராச்சத ஆலமரத்தின் கீழ் நாட்டியிருந்த லிங்கவடிவத்தினைத் தூக்க முயன்றான். அது அவ்விடத்தில் பலமாக இறுகிவிட்டதுபோலப்பட்டது. தன் பலம் முழுவதை யும் பிரயோகித்து முயன்று பார்த்தான். ஏனோ முடியவில்லை.

'' சலதி .. '' என்று வியப்புடன் அழைத்தான். சலதி ஓடி வந்தாள்.

'' அதனைத் தூக்கு... '' என்றான். சலதியின் கரம்பட்ட தும் அந்த லிங்கவடிவம் தளர்ந்துபோனது போல அசுரகுரு வுக்குப்பட்டது. அவன் அதனைத் தூக்கிக்கொண்டான்.

காரதத்தன் முன்செல்ல குவேவி கூட்டத்தினர் அவளை அவ்விடத்தில் ஆரியவிஜயனுடன் விட்டுவிட்டு, நாகதீபத்தினை நோக்கி வேகமாக நடக்கத்தொடங்கினர். காரிருள் பலமாகவும் விரைவாகவும் மூடியது. கதம்பநதியைக்கடந்து நாகதீபத்தில் பிரவேசித்துவிட வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கிருந்தது.

''பாவம். நம் பெருந்தாய்..'' என்றாள் சலதி: ''சிங்ஹல விஜயன் அவளைக் காதலிக்கவில்லை... தன் நோக்கத்திற்குப் பயன்படுத்திக்கொண்டான்.''

''என்ன செய்வது சலதி... அவள் தான் செய்த தவறினை உணரும்போது காலம் கடந்துவிட்டிருக்கும்...'' என்று அவளைத் காரதத்தன் தேற்றினான்.

— இயக்கச்சியில் அவர்கள் தரித்தனர்; தங்கினர்.

26

ஆறு நெடிய ஆண்டுகள் கழிந்தன. தாமிரபர்ணிக்கடற் கரையில் சிறியதொரு நகரம் உருவாகியிருந்தது. அன்று அந்த நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆம். பாண்டி நாட்டி லிருந்து பாண்டிய இளவரசியும், அறுநூற்றித் தொண்ணூற் றொன்பது பாண்டியக்கன்னிகளும் அந்த நகரத்திற்கு வரப் போகிறார்கள். சிங்ஹல விஜயனும் அவன் தோழர் களுப் அவர் களை மணந்து கொள்ளவிருக்கிறார்கள்.

அவர்களின் இயக்கப் பெண்களுக்கு என்ன நடந்தது?

அவர்கள் விரும்பில் இருக்கலாம். அல்லது விலக்கிக் கொள்ளலாம் என ஆரிய புருஷர்கள் அறிவித்துவிட்டனர். நிச்சயமாகத் தாமிரபர்ணியின் தலைவி, பெருந்தாய், லங்கா வின் ராணி குவேனி அதற்கு ஒப்புக்கொண்டிருக்க மாட்டாள்.

அவள் எங்கே?

அந்த விழாக்கோலம் பூண்டிருக்கும் நகரத்தில் அவ ளில்லை. ஆனால், அறுபது யோசனை தூரத்திற்கு அப்பால், கதம்பநதியின் கரையில் உருவாகியிருந்த அனுராதகாமம் என்ற

குடியிருப்பின் எல்லையில் குவேனி போன்ற வடிவத்தினைக் கொண்ட ஒரு பெண்ணும் ஆறுவயதும், நான்கு வயதும் மதிக்கத்தக்க ஆண்பிள்ளையொன்றும் பெண்பிள்ளையொன்றும் பசியால் வாடி தளர்ந்து நடப்பதைக் காணமுடிகிறது. அவர்கள் மிகவும் களைத்திருந்தனர். இரவு பகலாக அவர்கள் காட்டின் ஊடாக நடந்து வந்தவர்கள் போலப்பட்டது. அப் பெண்ணின் முகத்தில் பெருஞ்சோகம் கவ்வி இருளாகக் கவிந்து கிடந்தது.

அவர்கள் கிராமத்திற்குள் நுழைந்த போது, நாய்கள் குரைத்தன.

ஒரு பெண் எழுந்துவந்து குடிலுக்கு வெளியில் பார்த்தாள். அவள் பெருங்குரலில் ஏதோ சொல்ல ஏனைய பல பெண்கள் வெளியில் வந்து பார்த்தார்கள். அவர்களில் நமக்கு ஏற்கனவே பரிச்சயமான திரிசூலியும் இருந்தாள். அவள் விழிகள் அப்பரிதாபத்திற்குரிய பெண்ணை கோபத்துடன் எரித்துவிடுமாப்போலப்பார்த்தன.

இக்கிராமத்துப்பெண்கள் அன்று மிக்க துயரத்துடன் காணப்பட்டனர். அவர்களைக் கட்டாயமாகச் சிறைப்பிடித்த ஆரியபுருசர்கள் தாமிரபர்ணிக்குப் பாண்டிய மனைவிகளை அழைத்துவரச் சென்றிருக்கின்றனர்.

அவர்களின் இவ்வளவு துயரத்திற்கும் காரணமானவள் அவர்களின் எதிரில் பரிப்பவளாக வந்திருக்கிறாள். தன்னையும் தன் குழந்தைகளையும் அவர்களில் மூவராக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டு வந்திருக்கிறாள்.

திரிசூலியின் விழிகளில் நி. கிழே குனிந்து கல்லொன்றினை வலது கரத்தால் பற்றி எடுத்தாள். குறி தவறாத எறி.

''திரிசூலி...''என்று அப்பெண் அலறினாள். நெற்றி பிளந்தது. இரத்தம் தாரையாக ஒழுகியது. அவ்வளவு தான்.

அங்கிருந்த பெண்கள் அனைவரும்கற்களைத் தங்கள் கரங்களில் எடுத்துக்கொண்டனர். குழந்தைகள் இருவரும் பயந்து அலறியபடி காட்டிற்குள் நுழைந்து ஓடின. அப்பெண் நிலத்தில் சரிந்தாள். கற்கள் அவளை நோக்கி வீசப்பட்டன.

அவள் உடலை மூடும் அளவிற்கு விசப்பட்டன.

" தாரதத்த, என்னை மன்னித்துக்கொள்... "



- செங்கை ஆழியானின் நாவல்களில் குவேனி முற்றிலும் வித்தியாசமான பகைப்புலத்தையும் கருவையும் கொண்டது. நமது முன்னோர்கள் விட்ட தவறுகள் எவ்வாறு பூதாகாரமாக வடிவெடுத்து நமது சமூகத்தின் விடிவிற்கு தடையாகின என்ற செய்தியை இந்த நாவல் பேசுகிறது.

- இந்நூலின் முதற்பதிப்பு தமிழ்த்தாய்ப் பதிப்பகத்தினரால் வெளியிடப் பட்டது.

கமலம் பதிப்பகம்,
82, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.



Cover Printed by: GURU, Thiru

150/-